உ

ஸ்ரீராமஜெயம்.

மகத்துவம் பொருந்திய

கஜேந்திரமோக்ஷநாடகம்.

இஃது.

சங்கீதசாகித்தியத்திற்சிறந்தவராகிய

திருவண்ணாமலை

வேங்கடாசலமுதலியாரவர்களால்

மலபிரதிகளைக் கொண்டு

பழுதறவாராய்ச்சிசெய்து

போளூர்

நாராயணநாட்டாரவர்களால்

எருமைவெட்டிபாளையம்

மாயாண்டிநாட்டார்குமாரராகிய

மொட்டைநாட்டாரவர்களது

ஆதிவித்வமநோரஞ்சனி

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

பவ௵ - ஐப்பசி௴.

முதற்பதிப்பு, காப்பி, ௲.

விளம்பரம்.

இதனுலியாவருக்குந் தெரிவிப்பதியாதெனில், சென்னப்பட்டணம் பெத்துநாயக்கன் பேட்டை குச்சிலிக்கடை தென்னண்டை வாடை நயனியப்ப மேஸ்திரிவீதி அமர்சிங்குலாலா சந்தில் (௯) வது-நெம்பர் கதவிலக்கமுள்ள வீட்டில்-ஏ-மொட்டை நாட்டார் கிரகத்தில்வைத்திருக்கும்ஆதிவித்வமனோரஞ்சனியச்சுக்கூடத்திற் பதிப்பித்துவருகிறதும் தவிர ஷை செம்படப்பிள்ளையார்கோவில் தென்னண்டைவாடையில் (௩௨ வதுநெம்பர் கதவிலக்கமுள்ள வீட்டிலும் பலவித தமிழ்தெலுங்கு புத்தகங்களும் விற்பனை செய்கிறபடியால் வேண்டியவர்கள் ஷை யாரிடத்தில் விலைசரசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகவிளம்பரங்களாவன.

ஜீவாஜீவகுணவிளக்கம்	
தன்வந்திரிதண்டககலைக்ஞானம்-௯ா	வீரமாமுனிவரருளிச்செய்த
கஜேந்திரமோக்ஷநாடகம்	வைதிய நசகாண்டம்
அகஸ்தியர்முன் - ௮௰.	வெண்பா-ா.
பின் ௮௰.	

ரோமரிஷிநாயனாரருளிச்செய்த வைதியச்சுருக்கங்களாவன.

வாதசூத்திரம்பதம்-௰௯-ல்-௧.	வாதசூத்திரம் - ௬௯-ல்-௧.
வாதசுருக்கம் ௰௯-ல்-௧.	குருநூல் ௫௧-ல்-௧.
கருமானசுருக்கம் ௰௯-ல்-௧.	ஞானம் ௫௰-ல்-௧.
வைதியச்சுருக்கம் -௰௯-ல்-௧.	அண்டசுன்னம்-௫௩-ல்-௧.
வாதசுருக்கம் ௨௫-ல்-௧.	

ஆக புத்தகம்-௯-ம்-ஒரேகோர்வையாய் அச்சிட்டுவருகின்றோம்.

இனி பதித்துவரும் புத்தகங்களாவன.

ரோமரிஷிஅருளிச்செய்த சோதிடம் ௨ா.	மேற்படிவைத்தியம் ௩ா.
இராமதேவர்வைதியம் ௨ா.	மேற்படிவயித்தியம் ௫ா.

போகருளிச்செய்த பலதிரட்டு ஏழாயிரமும் ஏழுகாண்டமாகப்பதிக்கப்படும்.

இன்னஞ்சிலவைதிய நூற்களும் புராணசாஸ்திரங்களும் பலவிததமிழ் தெலுங்கு புத்தகங்களும் வேண்டியவர்கள் மேற்படியாரிடத்தில்விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீராமஜெயம்.

சாற்றுகவி.

இவை - ஸ்ரீபெரும்பூதூர்

இராமாநுஜதாசரவர்கள் சொல்லியது.

பேர்மிகுத்த காந்தருவ னூகூநாமன்
பிருகுவினால் முதலையாய்ப் புனலில்மேவ
ஏர்மிகுத்த தமிழ்நாட னிந்திரதுய்ம
னிலகுகும்ப முனிவனாற் கரியதான
சீர்மிகுத்த சரிதையைநா டகமாய்ச்செய்யத்
திருத்தினா னதற்கிசைதா னம்பொருந்தத்
தார்மிகுத்த புவியோர்கள் களித்துநோக்கத்
தந்திட்டான் சீர்மிகப்பொ ருந்திட்டானே.

வெண்பா.

நாவலர்க ளூற்பிக்கை நன்றாய்ப் பிரித்தெடுத்திப்
பூவுலகிற் பண்டமிழிற் பூட்டுதற்கு-மாவலமை
யுற்ற திருவருணை யூர்வேங்க டாசலவேள்
கற்றதிறங் கூறுவரார் காண்.

உ

ஸ்ரீராமஜெயம்.

கஜேந்திரமோக்ஷநாடகம்.

காப்பு.

விநாயகர் துதி.

கலித்துறை.

சீரோங்குஞ் செந்தமிழ் நூலோர்கஜேந்திரன் செய்யும்புகழ்
பர்ரோங்கும்நாவி லடியேன்சிறிது பகருதற்குத்
தாரோங்குங்கொன்றை யணியுமைபாகன் றவத்தில்வருங்
காரோங்குமேனி கரிமுகன்சேவடி காப்பதுவே.

முருகர் துதி

சந்த விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

அரனன்பினில் வந்துதவழ்ந்துவளா
 ரறுமாமுகனே மயில்வாகனனே
குறமாதுமனோகர நாயகனே
 குகனேகுண தெய்வசிகாமணியே
சுரர்போற்றிய செங்கதிர்வேலுடனே
 துணைவந்தடி யேன்வினை தீர்த்தருள்வாய்
மறவேனொரு நாளினுநின்பதமென்
 மனதிற்குடி கொண்டுமகிழ்ந்தனனே

பரமசிவன் துதி

விருத்தம்-இ-ம்-பைரவி.

நீதிபதிகஜேந்திரனற் கராவினாலே
  நீணிலத்தில்முற்காலம் வாதையுற்று
ஆதிப்தியாமரியைத் துதித்துமோக்ஷ
  மடைந்தசீர்க்காதையைநா டகமதாகச்
ஜோதிசிதிபெறும்பாரி லிசையினாலே
  சொல்லுதற்குநல்லவரந் தோன்றலாகப்
பாதிமதிகொன்றைதும்பை சிரசிற்சூடும்
  பரமனடிமுடிகொண்டு பணிகுவாமே.

உமையவள் துதி

கந்தார்த்தம்-இ-ம்-மோகனம்.

அரனிடபாகத்திலிருந் தன்புகூர்ந்து
  ஆருயிருக்கமுதளிக்க மனதிலெண்ணி
திறமுடனேமுப்பத்திரண் டறம்வளர்த்த
  தேவிமனோன்மணியே ஞானக்கண்ணே
இரவுபகலனுதினமு நின்பதத்தை
  யெனதுநெஞ்சந்தனிலிருத்தி யேழைநாயேன்
கரவிடமென்வல்வினைநோய் பிணியைநீக்கி
    கட்டழகிகுடியிருந்து காப்பாயம்மா
    யெனதுதுயர் தீர்ப்பாயம்மா
    காப்பாய்துயர்தன்னைத் தீர்ப்பாய்புவியெல்லாம்
    ஏர்ப்பாய்கடைக்கண்கள் பார்ப்பாயடியேன்றன்னைக் (காப்)

சரஸ்வதி துதி

கந்தார்த்தம்-இ-ம்-தோடி.

வண்டார்துளப மணிமாதவன்காதல் மறந்திடாமல்
உண்டானதெல்லாம் வருவாமலெந்நாவி லுனாசெய்யம்மா
வெண்டாமரைமேல் விளங்குங்கலைவாணி நின்பொற்பாதத்
தண்டாமலர்த்தாள் சரணெனவென்முடிமீதில்
    சாத்தி னேன் - பதம்
    போற்றி னேன்

சாத்தினேனின்பதம் போற்றினேனெந்நாளும்
ஏத்திப்பணிவோர்களைக் காத்திரக்ஷிக்குந்தாயே (சாத்தி)

இலட்சுமி துதி.

கர்தார்த்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

பொங்குதிரைகடலேழுஞ் சூழப்பெற்ற
பூதலமும்பாதலமும் விண்ணும்வாழ்த்த
திங்களணிசெஞ்சடையோ னயனுமாலுந்
தேவர்களுமுனிவர்களுந் தேடிக்காணு
மெங்கினுமொப்பில்லாத மணிவிளக்கே
யிருளகற்றுங்கதிரொளியே யிணையில்லாத
செங்கமலப்பூங்கோயில் வாழுமாது
திருவடியென்முடிமீது
சூட்டினே னூனே - கலியைவிட்
டோட்டுவாய் மானே
சூட்டினேனின்பதம் நாட்டிற்றுதிசெய்வோர்க்குத்
தாஷ்டீகமாய்ச்செல்வங் காட்டிவைக்கும்பதத்தைச்(சூட்டி)

விஷ்ணு தோத்திரம்.

வெண்பா-இ-ம்-சங்கராபரணம்.

ஆதிமூலப்பொருளென் றத்திக்கிடர்தொலைத்த
சோதிபுகழ்தன்னைச் சுருதிநூல் - ஓதியதால்
புன்சொல்லால்நாயடியேன் போற்றுகின்றேன்வேங்கடவா
செஞ்சொல்லாய்க்கொண்டளிப்பாய் சீர்.

ஆழ்வார்கள் தோத்திரம்

கோவை-இ-ம்-தோடி.

பேராயிரமுடி யான்மணிவண்ணன் பெரும்புகழை
யாராய்ந்துவேதந் தனைத்தமிழாக்கி யதன்பயனைச்
சீராய்த்துறைத்துநல் லானந்தவெள்ளச்செந்தேன்பெருகப்
பாராயணஞ்செய்யு மாழ்வார்கள்பாதம் பணிந்தனனே.

அவையடக்கம்.

விருத்தம்-இ-ம்-தந்நியாசி

வாரணந்தனைக்கரா வதைத்திடநொடியில்வந்து
காரணமுதலைதன்னைக் கண்டித்துக்கரியைக்காத்த
நாரணன்சரிதைதன்னை நாவினாலுளருகின்றேன்
பூரணமாகக்கேட்டு புலவர்கள்புகழ்செய்வீரே.

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் கஜேந்திரனென்றுசொல்லப்பட்ட யானையின்காலை முதலைபிடித்துக்கொண்டு ஆயிரவருஷகாலம் போராடி யானை ஆதிமூலமேயென்று முறையிடும்போது பராபரவஸ்துவாகிய ஸ்ரீமந்நாராயண மூர்த்தியானவர் பிரசன்னமாய்வந்து முதலையைக்கண்டித்து யானையை இரட்சித்தகதையைக் கிரந்தத்திற் சொல்லியிருப்பதை அடியேனறியன்றமாத்திரம் தமிழினால் நாடகமாகச் சொல்லுகின்றேன் இதனில்பிழையிருக்கினும் புலவர்கள் அங்கீகரித்து ரட்சிக்கும்படி வணங்கினேன்.

விநாயகர் வருகிற பொதுவிருத்தம்-இ-ம்-யோசனம்.

திருவளர்தழைக்குநன்றாய் திங்கள்மும்மாரிபெய்யும்
அருமறையோமம்வேள்வி யனுதினமோங்குந்தர்மம்
பெருகிடுஞ்சேலூர்தன்னிற் பிரியமாயமர்ந்தமூர்த்தி
கரிமுகமுடையசெல்வக் கணபதிவருகின்றாரே

விநாயகர் வருகிற தரு-இ-ம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்

பல்லவி

கணநாயகர்வந்தார் - சிங்காரமாகக்
கணநாயகர்வந்தார்

அநுபல்லவி

மணமேவியவில்வ மாலைமார்பனான (கண)

சரணங்கள்

ஆகுவாகனமீதிற் புவியோர்மகிழ
தோகைவல்லபையுடன் தோன்றுங்கேளிவிலாசர் (கண)
அங்குசபாசமு மைங்கரங்களுடன்
பங்கயவழகிய பாதமலரோனான (கண)

தந்திமுகப்பிரகாசர் சாஸ்திரபுராணவாசர்
தொந்திப்பிரியானற்போஜர் சூஸ்த்ரவேதவுலாசர் (கண)

சிஷியாள் தோத்திரம்

முந்திவிநாயக னே-திவ்ய-முக்கணழகியமுதல்வோனே
தொந்திவயிற்றேனே அடியேன்
தொழவரமருளியதுய்யோனே
மதகஜமுகத்தோனே -எந்தன்
வல்வினைப்பிணியெல்லாந் தீர்த்தோனே
சதுமறைக்கிறையோனே-புராண
சாஸ்திரப்பொருட்கெல்லாந்தலைவோனே
தேங்கயவல்பயறு-பாகுடன்
சீனிசர்க்கரைசெங்கரும்பு
மாங்கனிபிலாச்சுளையும்-இளநீர்
வாழைப்பழங்களும் -வடைதோசை
எள்ளும்பொரியுருண்டை-அப்பமும்
இன்பமதானவிளாங்கனியும்
வெள்ளைநாவற்பழமும்-பாயச
மிஞ்சியபால்தயிர்செந்தேனும்
தேவாவமிர்தமுடன்-இவையெல்லாந்
தினந்தினமுமக்கேயான்படைப்பேன்
பாவவிநாசனனே-யுந்தன்
பாததரிசனந்தந்தருள்வாய்
கன்னல்வயல்சூழும்-கதலிகள்
கற்பகமலர்ப்பூங்காவுகளும்
செந்நெல்வளர்சேலூர்-தனில்வாழ்
செல்வவிநாயகாநின்சரணம்
கெஜராஜன்புகழை-யடியேன்
கேவலந்தெரிந்ததையானுரைப்பேன்
நிசமுடன்றுதிபாட-வாக்கருள்
நின்மலர்ப்பாதமென்றலையணிந்தேன்
தொழவறியேன்சிறியேன்-உனக்குத்
தொண்டுசெய்யவறியேனென்றறியேன்
பிழைவராமற்காப்பாய்-நாலு
பொய்யாவிநாயகாமெய்யோனே

பிருகுமஹாரிஷி வருகிற பொது விருத்தம்

காலமுமிடமுந்தேர்ந்த கர்த்தனுயண்டபிண்டம்
ஞாலம்பல்லுயிர்கட்கெல்லாம் நாதனுயமர்ந்தோனித்ய
சீலனும்பிருகுதானுந் திரிகூடமலையின்சாரல்
சாலவேதபத்தைச்செய்ய சலுதியில்வருகின்றுரோ

பொது வசனம்

அகோதெப்படியென்முல் வருங்காலஞ் செல்காலம் நிகழ்காலமென்று சொல்லப்பட்ட மூன்றுகாலமுந்தெரிந்தவர் அண்டரண்ட சராசரங்களுக்கெல்லாம் கர்த்தனுய் சகலஜீவராசிகளுக்கும் நாதனுய்விளங்கியிராநின்ற சுத்தபவுத்திரரான (பிருகுமஹாரிஷி) திரிகூடபர்வதச்சாரலில் தவஞ்செய்ய வருகிறவிதங்காண்க.

பிருகுமஹாரிஷி-வருகிற-தரு-இ-ம்-பூரிகலியாணி-மிசுரதாளம்

பல்லவி

அருமறைகலைக்கியானந்தேர்ந்த
பிருகுமஹாரிஷிவந்தார்

அனுபல்லவி

பருமணித்தா வடமும்பூண்டு
பாங்குடன்றெண்டு கமண்டலங்கொண்டு (அரு)

சரணங்கள்.

சைவிற்செப மாலைதரித்து
காயத்திரிமந் திரமுச்சரித்து
மெய்யிற்காஷா யம்விரித்து
வேதம்நாலு மனதிற்குறித்து (அரு)

சிரசிற்சடை முடியுமணிந்து
திரோகத்தைத்துரும்பென்று துணிந்து
பரமன்பதத்தை மனதிற்பணிந்து
பஞ்சயிந்திரியங்க ளெல்லாந்தணிந்து (அரு)

ஓங்காரபிரணவ மெல்லாங்கூட்டி
ஓமவேழ்வி யாவும்நாட்டி
நீங்காதவல்பிணி யாங்கதையோட்டி
நிஷ்டபவிதிமுறை நியமாதிகாட்டி (அரு)

பிருகுமஹாரிஷி சிஷனுக்குச்சொல் விருத்தம்

இந்தநற்றிரிகூடத்தி லிருடிகளிருப்பிடந்தான்
முந்தநாம்தவமேசெய்து முத்திபெற்றிருந்துவாழ்ந்தோம்
சிந்தனைமகிழவேதான் சீர்தவஞ்செய்யவேணும்
பந்தமாயாசிரமத்தைப் பாங்குடன்றலக்குவாயே

வசனம்

ஆரடா சிஷியா தூமகேது இந்த திரிகூடபர்வதச்சாரலுக்கருகே ரிஷிகள் வாசஞ்செய்யப்பட்ட யிடமானபடியால் முன்னால்நாம் இவ்விடத்தில்தவஞ்செய்து முத்திமோட்சம்பெற்று வாழ்ந்தோம் ஆகையாலிவ்விடத்தில் தவஞ்செய்யவேணும் நமது ஆசிரமத்தை நன்றாய் சுத்திசெய்து பன்னசாலைபோட்டுவையும் பிள்ளாய்.

தூமகேது சொல் வசனம்

அப்படியே செய்துவைக்கிறேன் சுவாமி

பிருகுமஹாரிஷி சொல் விருத்தம்

ஆரடாதூமகேது அடர்ந்ததோரசோகுபுன்னை
பாரடாகமுகஞ்சோலை பலாவுடன்பாரிசாதம்
நேரடாவன்னப்பட்சி நிறைந்திடுந்தடாகந்தன்னைக்
காரடாமிருகந்துஷ்டர் கலக்கிடாவண்ணந்தானே

வசனம்

ஆரடா சிஷியா (தூமகேது) இந்தஆசிரமத்துக்குநேரா யிருக்கப்பட்ட தடாகத்தில் அன்னப்பட்சிகள் நிறைந்திருக்கின்றபடியால் இதில்மிருகங்களாவது - துஷ்டமனிதர்களாவது ஜலத்தைக்கலக்கவொட்டாமல் பத்திரமாகப்பார்த்திரும்பிள்ளாய்,

தூமகேது சொல் விருத்தம்

நாதனேபோற்றிபோற்றி நான்மறைமுழுதுமாய்ந்த
வேதனேபோற்றிபோற்றி வித்தகாசொல்லக்கேளும்
பூதலமனிதர்துஷ்டர் பொங்கியவரக்கர்கூடிச்
சேதமேபடுத்திலியான்முன் செய்வதென்சொல்வீரையா

வசனம்

சரணஞ் சரணமுனிநாதரே இந்த வனத்தில் துஷ்டமனிதர் இராட்சதர் புரஜனங்கள் கந்தருவர் மேலிட்டுவந்தால் நானென்னசெய்வேன் சொல்லுஞ்சுவாமி,

பிருகுமகாரிஷி சொல் விருத்தம்

எப்படிசொன்னாய்நீயு மீசனாரயனுமாலுந்
செப்பமாய்திக்குப்பாலர் தேவர்கள்முனிவர்கூட்
மைப்பொருமரக்கர்துஷ்ட மானிடரொவர்வந்தாலுங்
கொப்பெனவென்பேர்சொன்னாற் கூசுவாரனுகொனாரோ

வசனம்

கேளும்பிள்ளாய் (தூமகேது) ஆ-ஆ-நன்றாய்ச்சொன்னாய் அடா பிர்ம்மா விஷ்ணு-உருத்திரன்- அஷ்டதிக்குப்பாலகர் -முப்பத்து முக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் - கந்தருவர்-இராட்சதர்-பூதகணங்கள்-முதலானவர்களும் என்பேரைக்கேட்டால் பயந்தோடிப்போவார்கள் அது உனக்குத்தெரியாதா.

தூமகேது வசனம்.

நன்றாய்த்தெரியுஞ் சுவாமி,

பிருகுமகாரிஷி வசனம்.

ஆனால் பத்திரமாகக் கார்த்துக்கொண்டிருப்பிள்ளாய்.

தூமகேது வசனம்

அப்படியே யிருக்கிறேன் சுவாமி

பிருகும்காரிஷி தவஞ்செய்யும்போது சொல் கொச்சகம்

எத்திக்குமெக்கடலு மெவ்வுயிருந்தானாகி
நித்யபரிபூரணமாய் நின்றதயாபரனே
முத்திக்குவித்தான மூலமுதற்கொழுந்தே
சித்தத்தில்வந்துதித்தென் றீவினையைத்தீர்ப்பாயே

பொது வசனம்

இந்தப்பிரகாரம் (பிருகுமகாரிஷி) திரிகூடப்பர்வதச்சாரலில் தவஞ்செய்துக்கொண்டிருக்க இப்பால்-கந்தர்வலோகத்தில் (ஊகூமகாராஜன்) கொலுவாசல்காக்கப்பட்ட கட்டியக்காரன் வருகிற விதங்காண்க,

கட்டியக்காரன் வருகிற பொது விருத்தம்

கெந்தர்வலோகமெல்லாங் கீர்த்தியாயொருகுடைக்கீழ்ச்
செந்திருவருளாற்செங்கோற் சிறுடன்செலுத்திவாழ்வோன்
சுந்தரஊகூநாமன் சுடர்கொலுவாசற்காக்கும்
விந்தைசேர்கட்டியக்காரன் விரைவுடன்வருகின்றானே

கட்டியக்காரன் வருகிற-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

பல்லவி.

காடாசறுதார் - முறுக்குமீசை
கட்டியக்காரனுந்தோன்றினன்

அநுபல்லவி

தோட்டாகத்தி கேடயம்பூட்டி
தோளிலேட வாலிமாட்டி (காடா)

சரணங்கள்.

தங்கரேக்குருமாலே கச்சைதட்டி
சல்லடங்கள் திட்டமாய்க்கட்டி
பொங்கமதாகவே புருன்புரிபாகை
பொற்சதங்கையுடன் சிரசிற்சூட்டி (காடா)

ஸ்ரீமான்சாமான்முகமிலங்க
நேத்தியதாகவே ஙிகஙிகென
தாமானாயிலிருக்கிக்கட்டி
தாளிலேவெண்டயங் கலகலென (காடா)

கோன்றேஜவான் தற்வாசமே
கூச்சல்போடாதே சப்ரேசப்ரே
மேன்மையாகவே யெச்சரிக்கைசொல்லி
வெற்றிமுரசங்கள் மெத்தவேசாத்தி (காடா)

கட்டியக்காரன் சொல் வசனம்.

அகோவாருங்கள் சபையாரே கந்தர்வலோகமெல்லாம் ஒருகோர்டையிலாளப்பட்ட (ஊகூமக்ராஜன்) கொலுவுக்குவருகின்றார் நாமுன்னுதாக ஆசாரவாசல் அலங்கிர்தஞ்செய்ய வந்தேன் நீங்கள் அரசன்ஆக்கினைப்படிக்கு நடவுங்கள் பிள்ளாய்.

ஊகூமகாராஜன் வருகிற பொது விருத்தம்

எத்திசைபுகழுங்கீர்த்தி யிசைந்தகந்தர்வலோக
முற்றிலுமாளுமன்னன் முனிவர்களாசிகூற
சத்தியமுடனேசெங்கோற் சதிருடன்செலுத்திவாழ்வோன்
சித்திரஊகூநாமன் சீர்கொலுமேவினனே

ஊக்ஷராஜன் வருகிற தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்

கண்ணிகள்

சத்தியதீரன் - நித்தியவுதாரன்
கர்த்தன்ஊக்ஷகொலு வீற்றிருந்தான்
சந்தனவாடை - மூந்தியேவீச
விந்தையதாய்க்கொலு வீற்றிருந்தான்
பங்கயமாதர் - சங்கீதம்பாட
அங்கசன்போற்கொலு வீற்றிருந்தான்
மந்திரிமார்கள் - வந்தடிபோற்ற
சுந்தரமாய்க்கொலு வீற்றிருந்தான்
தோரணவாசல் - ஆரணர்சூழப்
பூரணமாய்க்கொலு வீற்றிருந்தான்
சட்டமதாகக் - கட்டியங்கூறத்
திட்டமதாய்க்கொலு வீற்றிருந்தான்
பூமுலைமாதர்கள் - வெண்சாய்மறைபோட
நேமமுடன்கொலு வீற்றிருந்தான்
அந்தரமீதில் - துந்துமியார்ப்ப
இந்திரன்போற்கொலு வீற்றிருந்தான்

ஓரடி-தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்

பல்லவி

உலகத்தில் மிகுவெற்றிப் - புகழ்பெற்றதிககர்த்தன்
ஊக்ஷமகாராஜன் வந்தான்

அநுபல்லவி

நலமுற்றமணிசித்ர நவரத்நவிமானத்தில்
நட்டணைமுடியிலங்க வட்டவெண்கொடைதுலங்க (உல)

சரணம்

ரதிமெச்ச வழகிற்றெள் ளமிர்தத்தின் மொழிபெற்ற
நன்கிளிமாதர் மகிழவே - கனகரத்ந
மின்னொளிமாலை திகழவே
கடல்பொங்க-மென வெங்கு-முரசங்க-ளுமுழங்க
காதலாயின்னிசை பாடவே-இருபுறமும்
சீதமாய்ச்சாமரை போடவே

அரசர்க்குள்-வெகுவுக்ர-மெனச்சக்ர-பதியொக்க
அண்டர்களெல்லா மதிக்கவே-உல்லாசமாய்
மண்டலத்துள்ளோர் துதிக்கவே
வெகுசம்பிர-மகதம்பிர-புனுகும்பரி-மளங்கள்
மிஞ்சிமணவாடை வீசவே-மந்திரிமார்கள்
செஞ்சொல்மனுநீதி பேசவே
உதயச்செங்-கதிரொத்த-கமலத் திருகரத்தில்
நிதம்வைத்தவன்பதத்தை-இதயந்தனிலிருத்தி
யெங்குமழகிய துங்கரணிசது
ரங்கனொருத்துரை சிங்கமெனவே (உலகத்தி)

ஊக்ஷராஜன் கடவுளைத் துதிசெய்கிற விருத்தம் -இ-ம்-பைரவி.

வையகமுழுதளந்த மாதவாபோற்றிபோற்றி
கையினிற்சங்குசக்ரக் கண்ணனேபோற்றிபோற்றி
துய்யலட்சுமியுமார்பிற் றுலங்குநாரணனேபோற்றி
ஐயனேநின்பொற்பாத மனுதினம்போற்றிபோற்றி.

முதல்மந்திரி ஊக்ஷராஜனுக்குச்சொல் போற்றி விருத்தம்.

சீரணிசெங்கோறகொண்டு திகழுங்கந்தர்வநாட்டை
ஏரணிமுறையாயாளு மிறைவனேபோற்றிபோற்றி
நாரணிபாகன்றுளை நாடியேதுதித்திலங்குந்
தாரணிஊக்ஷநாமத் தயாநிதிபோற்றிபோற்றி

இரண்டாவது மந்திரி ஊக்ஷமகாராசனுக்குச் சொல் போற்றி விருத்தம்

பூமியிலரசர்மெச்சும் புண்ணியவானேபோற்றி
நேமிகொள்கண்ணன்றன்னை நிதந்துதிப்பவரோபோற்றி
வாமகந்தர்வலோக மதனையாள்பவரோபோற்றி
நேமங்கொள்ஊக்ஷநாம னிருபரேநின்றுட்போற்றி

ஊக்ஷமகாராஜன் மந்திரிகளுக்குச் சொல் விருத்தம்.

மந்திரிமாரேகேளீர் வளங்கொள்நம்நாட்டிலுள்ள
அந்தணர்குடிகள்வேந்த ரணிதிகழ்வணிகர்யாருஞ்
சிந்தையில்மகிழ்ச்சிபொங்கச் செழித்துவாழ்ந்திருக்கின்றாரோ
பந்தமாயெனக்குநன்றாய்ப்பரிவுடனுரைசெய்வீரே.

வசனம்.

கேளுங்கள் மந்திரிமார்களே நம்முடையநாட்டிலுள்ள க்ஷத்திரிய-வைசிய சூத்திரரென்று சொல்லப்பட்டபேர்களும் தேவாலயம் பிரம்மாலயம் ரதகஜதுரகபதாதிகளும் யாவருங்குறைவில்லாமல் சந்தோஷமா யிருக்கின்றார்களாசொல்லுவீர் மந்திரிமார்களே.

மந்திரிகள் இராஜனுக்குச் சொல் விருத்தம்.

பேசவரியகீர்த்திபெற்ற ஸ்ரீமாஹூக்ஷமஹாமகா
ராஜகோவேசெந்நெல்வளர் நாடுநகரநல்லறமும்
மாசொன்றில்லாவேதியரு மன்னர்குடிகள்வணிகர்களும்
தேசமனிதர்தடங்களுநற் சீரோபொருந்திவாழ்ந்தனரோ.

வசனம்.

கேளுமகாராசனே தேவரீருடைய கிருபாகடாட்சத்தினால் நம்முடையபட்டணத்திலுள்ள பிர்ம்ம-க்ஷத்திரிய-வைசிய-சூத்திரர் முதலாகிய ஜனங்களும் சந்தோஷமாகச் சீர்பொருந்தி வாழ்கின்றார்கள் மகாராசனே.

நாரதர் வருகிற பொது விருத்தம்.

வேதியர்முனிவர்க்கெல்லா மிகுந்தநற்கீர்த்திபெற்று
சீதரனருளால்வந்த தேர்ந்தநான்மறைவல்லாளர்
பூதலதீர்த்தமாடி பொங்கமாய்மனமகிழ்ந்து
நாதன்கந்தருவன்பக்கல் நாரதர்வருகின்றாரோ.

கட்டியக்காரன் சொல் வசனம்.

அகோதெப்படியென்றால் வேதசொரூபராகிய நாரதமகாரிஷி (ஹூஹூமகாராஜன்) கொலுவுக்கு வருகிறவிதங்காண்க.

நாரதர் வருகிற தரு-இ-ம-பூரிகலியாணி-மிசுரதாளம்.

பல்லவி.

நாரதர்வந்தாரே - மகாரிஷி
நாரதர்வந்தாரே

அனுபல்லவி.

நாரதர்வந்தார் புராதனமாகிய
நான்மறையனைத்து மேன்மையாயறிந்த (நாரதர்)

சரணங்கள்.

கையிலேதெண்டு கமண்டலங்களுங்
காதிற்குழை யாட-வெகு
கனத்தபுத்தகம் வேதபுராணங்
கக்கத்திலே கூட
மெய்யிலேகா ஷாயம்விரித்து
வீணையிசை பாட-நல்ல

வேடிக்கையாய்வெகு நடைகள்நடந்து
மெல்லடிகள் வாட
செய்யத்திருவளர் மார்பன்பதம்பணிந்
தேத்திவணங்கிய சாஸ்திரமுள்ளோர்தனி
வையகம்போற்றிய தெய்வப்பொருளணி
மாதவர்க்கெல்லா மிருந்தசிகாமணி (நாரதர்)

பூதலம்பாதலம் விண்ணுமண்ட
புவனமுங் கண்டவர்-மேலும்
புகழும்பிரணவ ஆகமசாஸ்திரம்
போத உண்டவர்
காதலுடனேமுக் காலமுமுணர்ந்து
கருத்திற் கொண்டவர்-வெய்ய
காரணமாகிய தீவினையனைத்துங்
கழித்து விண்டவர்
தீதிலாபர தத்துவமுணர்ந்த
சிந்தையிலெந்நாளு மந்திரம்பகர்ந்த
மாதவரண்டங்க ளெங்கினுநிறைந்த
மன்னுயிர்க்கெல்லாந் தலைவராய்மிருந்த (நாரதர்)

முத்திக்குவித்தான மூலாதாரப்பொருள்
முழுதுந் தேர்ந்தவர்-நல்ல
முச்சுடராகிய ஜோதிதன்பாதத்தை
மோகமாய்ச் சார்ந்தவர்
பத்தியதாகவே ஓமவேள்விகள்
பலவும் நேர்ந்தவர்-இந்தப்
பார்தனிலேநல்ல தீர்த்தங்களாடி
பரிவு கூர்ந்தவர்
வெற்றிச்சடைமுடி சிரசிலேயுற்ற
வேதவேதாந்தராய் வையகத்தில்மெத்த
நத்தியபேர்க்கெல்லாந் தத்வமறிவித்த
நாதர்புவிதனில் கீர்த்திமிகப்பெற்ற (நாரதர்)

நாரதர் கட்டியக்காரனுக்குச் சொல் வசனம்

கேளும் பிள்ளாய் கட்டியக்காரா-தெய்வலோகத்திலிருந்து நாரதமகாரிஷி வந்திருக்கிறோமென்று (ஊகூமகாராசனிடம்)சொல்லும்பிள்ளாய்.

கட்டியக்காரன் வசனம்

மகாபாக்கியம் அப்படியே தெரிவிக்கிறேன் சுவாமி,

கட்டியக்காரன் இராஜனுக்குச் சொல் வசனம்.

சரணஞ் சரணம் இராஜ பரமேஸ்வரா ராஜமார்த்தாண்ட ராஜ கெம்பீரா தெய்வலோகத்திலிருந்து நாரதமகாமுனி வந்திருக்கின்றார் சுவாமி.

ஊகூமகாராஜன் மந்திரிகளுக்குச் சொல் வசனம்

கேளுங்கள் மந்திரிமார்களே தெய்வலோகத்திலிருந்து நாரதமகாரிஷி நமது ஆசாரவாசலில் வந்திருக்கின்றாராம் ஆகையால் நாமனைவோரும் எதிர் கொண்டுபோய் அழைத்துவருவோம் வாருங்கள் மந்திரிமார்களே.

மந்திரிகள் சொல் வசனம்.

அப்படியே செய்வோம் சுவாமி

ஊகூமகாராஜன் நாரதருக்குச்சொல் கவி

நான்மறையாய்ந்த நாதனே போற்றி
தேன்மொழிஞானந் தெரிந்தவா போற்றி
வான்புகழோர்ந்த மாதவா போற்றி
மேன்மையாய்விளங்கிய மெய்யனே போற்றி

ஊகூராஜன் வசனம்.

சரணஞ் சரணஞ்சுவாமி நாரதமகாமுனிவரே.

நாரதர் ஊகூமகாராஜனுக்குச்சொல் வாழி கவி.

தலமுழுதனைத்துந் தனிக்கொடைநிழலில்
நிலைமையாயாண்ட நிருபனேவாழி
அலைகடற்றுயின்ற அச்சுதனருளால்
நலம்பெறும்ஊகூ நாமனேவாழி.

நாரதர் சொல் வாழி வசனம்.

சிரஞ்சீவி சிரஞ்சீவி சுகீபவா சுகீபவா எழுந்திருமகாராஜனே.

ஊகூமகாராஜன் சொல் வசனம்.

கேளுஞ்சுவாமி முனிநாதரே சிம்மாதனத்துக்கு எழுந்தருளி வரவேணுஞ்சுவாமி.

நாரதர் சொல் வசனம்.

அப்படியே போவோம் வாருமகாராஜனே.

ஊகூமகாராஜன் நாரதருக்குச் சொல் விருத்தம்.

அந்திவாரணத்தோன்கண்ண னம்புயத்தோனுமிந்த்ரன்
சந்திராதித்தர்விண்ணோர் சகலரும்புகழுகின்ற
எந்தன்மாதவரோநீர்தா னெவ்விடமிருந்துவாரீர்
பந்தமாயெனக்குநன்றாய்ப் பரிவுடனுரைசெய்வீரோ

வசனம்.

திரிமூர்த்திகளாகிய சகலமானதேவர்க்கள் முனிவர்களும் புகழும்படிகீர்த்திபெற்ற மகானுபாவரே தேவரீர் எந்தலோகத்திலிருந்து எவ்விடம்போய்வருகின்றீர் அடியேனுக்குத் தெரியும்படியாய் திருவுளம்பற்றவேணுஞ் சுவாமி.

நாரதர் ஊகூமகாராஜனுக்குச் சொல் அகவல்.

இ-ம்-ஆரபி.

நாதனேஊகூ நாமனேகேளாய்
பூதலதீர்த்தங்கள் புகழ்ந்தாடவேண்டி
ஆயிரத்தெட்டண்டம் அகிலங்களனைத்தும்
போயிருந்தனேகம் புண்ணியதீர்த்தங்கள்
வேணதுண்டதுவெல்லா மேதினிதனிலே
காணுதற்கரிதான சரியமாற்றுயிலும்
பாற்கடற்கருகே பணிந்தநற்புவியில்
ஏற்கவேபதினு யிரங்காதயோசனை
அகலமும்நீண்ட அளவுமவ்வளவே
எகுவெள்ளிபொன்னு மிசைந்தமுச்சிகரம்
ஜோதியாமதனைச் சொல்லவுமரிதே
தீதிலாவழகுள்ள செழுந்திரிகூடச்
சாரலிற்கருகே தழைத்தபூஞ்சோலை
தார்மலர்க்கொன்றை சண்பகங்கோங்கு
சந்தனமசோகு தாரிளங்கமுகு
பந்தமாங்குருந்தை பாரிசாதங்கள்
அகில்விருக்ஷங்கள் அனேகமாய்ச்சூழ்ந்த
நிகரில்லாவன்னங்கள் நிறைந்தபொற்கமலம்
அல்லியுநெய்தல் அலர்ந்தசெங்கழுநீர்
மெல்லிதழ்க்குவளை விளங்குசங்கினங்கள்
அடர்ந்ததோர்தடாக மலைதனிற்கொழித்த
யிடந்தொருநவமணி யெங்கினுந்தங்கும்

ஆகாயகங்கை யதற்குநிகரல்ல
வாகானகிள்ளைகள் மயிலினங்குயில்கள்
கொஞ்சியேவிளையாடல் கூறுதற்கரிதாம்
அஞ்சுவன்சேடனவ் வதிசயஞ்சொல்ல
அந்ததிசயம்நா னறியேனென்நாளும்
எந்தன்மாதவத்தா லிப்பொழுதறிந்தேன்
அதுதனையுனக்கு அறிவிக்கவேண்டி
இதுவழியாக வெய்திவந்தனனே.

நாரதர் சொல் வசனம்.

கேளுமகாராஜனே இப்பேர்க்கொத்த அதிசயங்களை நாமெங்குங் கண்டதில்லை இந்தவரலாறை உனக்குச்சொல்லினேன் நீர்போய் பார்த்துவரலாமகாராசனே.

ஊகூமகாராசன் வசனம்.

மகாபாக்கியம் மகாபாக்கியம் நான்போய்ப்பார்த்துவருகின்றேன் நாரதமகாமுனிவரே.

நாரதர் சொல் வசனம்.

நாம் வந்து வெகுநேரமாச்சுது நாம்பிரம்மலோகத்திற்குப்போய் வரவேணும் செலவுதரவேண்டியது மகாராசனே.

ஊகூமகாராசன் வசனம்.

சரணஞ் சரணம் அப்படியே போய்வருவீர் நாரதமகாமுனிவரே.

ஊகூமகாராசன் கட்டியக்காரனுக்குச் சொல் வசனம்.

கேளும்பிள்ளாய் கட்டியக்காரா என்னுடைய தேவிமார்களை அதிகசீக்கிரத்தில் அழைத்துவருவாய் கட்டியக்காரா.

கட்டியக்காரன்சொல் வசனம்.

அப்படியே இதோஒருநிமிஷத்தில் அழைத்துவருகிறேன் சுவாமி.

ஊகூமகாராசன் தேவிமாருக்குக் கட்டியக்காரன் சொல் வசனம்.

சரணஞ் சரணம் என்னைப்பெற்ற தாய்மார்களே தங்களை நமது மகாராசன் அழைத்துவரச்சொன்னார் வருவீர் தாய்மார்களே.

ஸ்திரீகள் சொல் வசனம்.

அப்படியேவருகிறோம் கட்டியக்காரா.

ஸ்திரீகள் வருகிற பொது விருத்தம்.

வணங்கியேதூதர்சொல்ல மாதுசற்குணமாமாலை
அணங்குநித்தியகல்யாணி அதிசித்ரரேகைகூட
மணங்கமழ்குழலாள்காம வல்லியுமன்னன்பக்கல்
இணங்கியேசொலுமுகத்தி லின்பமாய்வருகின்றாரே.

கட்டியக்காரன் சொல்வசனம்

அகோ தெப்படியென்றால் ஸ்ரீகூமகாராஜன் தேவிமார்கள் கொலுவுக்கு வருகிறவிதங்காண்க.

ஸ்ரீகள்வருகிற அகவல் இ-ம் மோகனம்

சீர்தரப்பன்னீர் தீர்த்தங்களாடிச்
சாறநற்புனுகு சவ்வாதுபூசி

வர்னபட்டாடை வகைவகையுடுத்தி
சொர்ன்னமாமேகலை அலங்கவேயணிந்து

கந்தமேமிகுத்த கார்குழற்றனிலே
விந்தையாய்ச்சண்பக விறைமலர்சூடி

பின்னியசடையிற் பிணித்தபொற்குப்பியும்
சென்னியிற்கதிர்பிறை சேர்வையணிந்து

நெற்றியிற்சுட்டி நிறைந்தமுத்துகளும்
ரத்நமூக்குத்தி நாசியிற்பதித்து

கொப்புடன்வாளி கொந்தளவோலை
செப்பமாய்கொழையினிற் செழுஞ்சுடரொளிய

சீலமாய்கஸ்தூரி திலர்தமுநுதலில்
நீலவேல்விழியினில் நெடியமைதீட்டி

கொங்கைமேற்கச்சை கூட்டியேயிறுக்கி
கங்கணவளையல் கரங்களிலங்க

மார்பினில்நவமணி மாலையுமிடையில்
பாரவொட்டியாணம் பண்புடன்பூட்டி

தண்டைபொற்கொலுசு தாள்களிலசைய
மண்டலத்தோர்கள் மகிழ்ந்துகொண்டாட

இன்பமாய்த்தோழிக ளிருபுறஞ்சூழ
அன்புடனன்னம் அசைவதுபோல

ஆவலாய்க்கொலுவில் அரசனைக்காண
பாவையர்நால்வரும் பரிந்துவந்தனரோ

ஸ்திரீகள்-தரு-இ-ம்-சௌராஷ்டிரம்-அடதாளம்.

கண்ணிகள்.

ஜெயமங்களமுழக்கு தம்மா-அடியம்மமாதோழி
திடமாய்த்தோளிடந்துடிக்கு தம்மா

வைபோகமாகப் பூரணகும்பங்கள்-வருகுதம்மா
இன்பமாய்த்திரோகப்புளகாங்கிதங்களாகுதம்மா

தத்திமியென்று துந்துமிபேரிகை முழங்குதம்மா
அதிகவுல்லாசசுபநிமித்தங்களாகுதம்மா

வேடிக்கையாகவனமாவில் குயில்கள் கூவுதம்மா அதிக
வேகமாய் மதன்வாளிபொழியுருணடி யம்மா

அடியம்மம்மாதோழி-என்தோழிமாரே
என்பாங்கிமாரே (ஜெய)

ஸ்திரீகள் சொல்-தரு-இ-ம்-ஆனந்தபைரவி ஆதிதாளம்.

பல்லவி

சிங்காரமதனு லோலா சீவதயாளா லோலா
அதிரூபசுந்தர லோலா ஆபிராணநாதாலோலா
நான்மையலானேன்-லோலா - அடியம்மம்மாதோழி

அனுபல்லவி

மங்களமாகவே மலரணைமீதினிற்
சங்கையில்லாமல்வெகு சரசலீலைசெய்ய (சிங்கார)

சரணங்கள்

சித்தசன்கேளியில் மெத்தமெலிந்திடாமல்
முத்தங்கொடுத்தருளு மோகதயாபரா (சிங்கார)

கொங்கைதனைப்பிடித்து கோவையிதழ்சுடித்து
பொங்கமதாகவே பிரியமுடனணைந்த (சிங்கார)

கார்குழல்மீதினிற் கந்தகதம்பம்பூசி
நேராய்க்கலைநிகழ்த்தி நேசமுடனணைந்த (சிங்கார)

ஸ்திரீகள் சொல் வசனம்

சரணஞ் சரணஞ் சுவாமி பிராணநாயகா

ஊகூமகாராசன் சொல் வசனம்

சிரஞ்சீவி சிரஞ்சீவி எழுந்திருங்கள் என்பிராணபதமான தேவிமார்களே.

ஊகூமகாராசன் தேவிகளுக்குச் சொல் விருத்தம்.

அன்னமேசித்ரரேகை அழகுசற்குணமாமாலை
மன்னுகல்யாணிகாம வல்லியேசொல்லக்கேளாய்

பொன்னெழிற்றிரிகூடத்திற் பொருந்தியதடாகத்தேகி
நன்மையாய்த்தீர்த்தமாடி நாமுமேவருவோம்வாரீர்

வசனம்.

கேளாய் பெண்ணே சித்திரரேகை-சற்குணமாலை- நித்தியகல்யாணி மதனவல்லி பூலோகத்தில் திரிகூடபர்வதச் சாரலிற்கருகே திவ்வியமான தடாகமும் பூங்காவனங்களும் பொற்றாமரைகளும் அன்னப்பட்சிகளும் இன்னமும் அனேகவேடிக்கையாயிருக்கின்றதாக நாரதமகாரிஷி சொல்லிப்போனார் ஆகையால் நாமனைவரும் அந்தத்திரிகூட பர்வதச்சாரலுக்குப் புட்பக விமானத்திலேறிக்கொண்டு அந்ததடாகத்திற்குப்போய் தீர்த்தமாடி வருவோம் வாருங்கள் என்பிராணநாயகிகளே,

ஸ்திரீகள் சொல் வசனம்

அப்படியே போய்வருவோம் வாரும் எங்கள் பிராணநாயகரே.

ஊகூமகாராஜன் கட்டியக்காரனுக்குச் சொல் வசனம்

அடா அடா ஆசாரவாசற்காக்கும் கட்டியக்காரா நம்முடைய புஷ்பவிமானத்தை அதிசீக்கிரமாய் கொண்டுவருவாய் கட்டியக்காரா.

கட்டியக்காரன் சொல் வசனம்

அப்படியே இதோகொண்டுவந்தேன் சுவாமி

ஊகூராஜன் திரிகூடபர்வதச் சாரலுக்குப் போகிற-தரு

இ-ம்-புந்நாகவராளி-ஆதிதாளம்

பல்லவி

திரிகூடபர்வதச் சாரலைத்தேடியே
ஊகூராஜன்வாரார் - தேவிமாருடன்
ஊகூராஜன்வாரார்

அநுபல்லவி.

எரிதிரைகடல்வைய மெங்குஞ்சீர்வளர்ந்தேற
இன்பவிமானமீதில் இர்தயங்களிகூற (திரிகூட)

சரணங்கள்.

முத்துரத்தினப்பணி மோகனசரமின்ன
முகவஜீரகங்கோடி சூரியப்பிரகாசமென்ன
சித்திரப்பதுமையென்னும் பாவையரிசைபன்ன
சிந்தைமகிழ்ந்திட கந்தப்பொடிகள்துன்ன
ஜெகதலம்புகழ மகுடமணிசுடர்
திவ்யகுழையிரு செவியிலொளியிட (திரிகூட)

நாற்றிசையுலகெங்கும் கீர்த்திபெற்றவுதாரன்
நாராயணன்பாத மேத்தித்தொழுங்கெம்பீரன்
சாஸ்திரவிதிமுறை தவறிலாததீரன்
சகலசாம்பிராச்சியப்பிர தாபசுந்தரமாரன்
தண்டைநூபுர வெண்டயங்கள்
சதங்கைகலகல வென்றசைந்திட (திரிகூட)

சையோகமாய்மாதர் சரசங்கொண்டாடவும்
தார்வளர்சண்பகம் மார்பினிற்சூடவும்
பையவிமானம் பறந்துவிண்ணோடவும்
பாற்கடல்நேரான பக்கத்தில்நாடவும்
பரவிமுனிவர்கள் அதிகதபங்கொள
பரிதிமதியொடு நிதமும்வலம்வரு (திரிகூட)

ஊகூமகாராஜன் தேவிகளுக்குச் சொல் விருத்தம்.

காணுதற்கரிதாய்நின்ற கனகத்திரிகூடச்சாரல்
தோணியமடுவுந்தோப்புஞ் சொர்ணமாயன்னக்கூட்டமும்
வேணதுண்டதிசயங்கள் மிகுதியாயிருப்பதாலே
வாணுதலாரேயிந்த வண்மையையறிவோம்வாரீர்

வசனம்.

கேளுங்கள் என்பிராணபதமான தேவிமார்களே ஆ-ஆ இப்படிப்பட்ட அதிசயங்கள் நானெங்குங்கண்டதில்லை ஆ-ஆ-இந்ததிவ்வியமான தடாகத்திலிருக்கப்பட்ட உன்னிதமும் இந்தப்பூங்காவனமிருக்கப்பட்ட சிங்காரமும் இதில் அன்னப்பட்சிகூடி விளையாடுகின்ற உல்லாசமும் இந்தச்சோலைகளில் கிள்ளைகள் கொஞ்சுகிற விநோதமும் இப்பேர்ப்பட்ட அதிசயங்களைப்பார்க்கும்படி முன்செய்ததபோபலத்தினால் கிடைத்ததேயல்லாமல் வேறில்லை ஆனால்முழுதினும்பார்த்துவருவோம் வாருங்களடி பெண்களே.

ஸ்திரீகள் சொல் வசனம்.

அப்படியே செய்யலாம் மகாராஜனே.

ஊகூமகாராஜன் சொல் தரு

இ-ம்-புன்னாகவராளி ரூபகதாளம்.

பல்லவி.

ஆருமிசோசித்ர ரோகையே-இந்த
அதிசயத்தைப்பாராய் தோகையே

அநுபல்லவி.

சார்வளர்கொன்றை தழைத்தபாரிசாதம்
நேரானசண்பகம் நேத்தியீதென்சொல்வேன் (ஆருயி)

சரணங்கள்.

அன்னமேசற்குண மாலையே- பாராய்
உன்னிதமானதோர் சோலையே- திவ்ய
அற்புதமாகிய கொங்குகள்- நல்ல
கற்பகமாமலர்ப் பாங்குகள்- ஆ- ஆ
புன்னைமலர்களும் கன்னல்வயல்களும்
மின்னிடையாளேயீ தென்னென்றுசொல்லுவேன் (அன்னமே)

நித்தியகல்யாணிநீ பாராய்-மலர்
நிறைந்ததடாகத்தை நேராய்-வெகு
நேத்தியாகியவார விந்தமும்-வண்டு
வாத்தியம்பாடிய சந்தமும்-நல்ல
சித்திரமாகிய சேல்விளையாடலும்
முத்துடனேசங்கு முழக்கங்களென்சொல்வேன் (நித்திய)

சிங்காரமேமதன வல்லியே-புஷ்பவ
லங்காரத்தைப்பாராய் மெல்லியே- நல்ல
சித்ரமடவன்னப் பேடைகள்-கூடிச்
செழிப்புடனுடுது கிரீடைகள்- இனி
பொங்கமதாகியே விந்தைதடாகத்தில்
சங்கையில்லாமற்கூடி -சரசமாடிவோம்வாராய் (சிங்கார)

ஊகூமகாராஜன்- ஸ்ரீகளுக்குச்சொல் கொச்சகம்

மானேமரகதமே மடமயிலே வாணுதலே
தேனேமதன்சரத்தால் திரோகங்களைக்குதடி
நானேயினிதாளேன் - நற்கிளியென்றேவியரோ
மீனேவிழியணக்கே-மதன்-வேதனையைத்தீராயோ

ஊகூமகாராஜன் சொல்-விரக-தரு

இ-ம்-கலியாணி-அடதாளம்.

பல்லவி

மன்மதன்கணையைந்தும் பாயுதே-அதனால்
வாடியென்மனமிகநொந்து தீயுதே
சித்ரரேகை நித்யகல்யாணி
சற்குணமாலே அடிமதனவல்லி (மன்மதன்கணை)

அனுபல்லவி

மன்மதன் கணையைந்தும் - என்
மார்பிற்றைக்குதே வந்து
என்மனமிக நொந்துருகினேன்
லற்மம்நீசெய்வது கன்மனமோபெண்ணே (மன்)

சரணங்கள்

கூவுமாங் குயிலாளே - எந்தன்
ஆவிவேகு துன்மேலே
பாவிதென்றல் போலே - எனைத்
தாவுதடியொருக் காலே
காவுமலர்சூழு மிந்தமடுவினில்
கமலம்பரவிய சலம்நடுவினில்
மேவிஜலக்கிரீடை யாடுவோம்நீமோடி
மெத்தவேசெய்யாதே சித்தமிதங்கடி (மன்மதன்)

சித்ரமட்டவன்ன மோடி - தன்
ரத்நப்பேடையைத் தேடி - அதை
யுற்றுற்றுப்பார்க்குது நாடி - அந்த
வித்தையறிவோம் வாடி - அடி
உத்தமியேயென உள்ளமுருகுது
உண்மையதாய்க்காம வெள்ளம்பெருகுது
மெத்தவிரகமாய் திரேகங்களைக்குது
மெல்லியரோவெகு தாகம்விளைக்குது (மன்மதன்)

கற்பகநீர்வளம் பாராய் - இந்த
வெற்புமலைச்சாரல் நேராய் - மகா
பொற்புமிகுந்ததோ சீராய் - அன்னம்
நிற்குதுபார்ப்போம் வாராய் - வெகு
அற்புதமானநல் லானந்தந்தாக்குவோம்
ஆசைதருகுங்கலை யானதைநோக்குவோம்
விற்பனமன்மதன் விரகத்தைப்போக்குவோம்
மேதினிதன்னில்நற் கீர்த்தியுண்டாக்குவோம் (மன்மதன்)

ஊகூமகாராஜன் சொல் சிங்காரபத்தியம்

இ-ம்-கண்டா

தோகையேயதிசித்ர ரோகையேயெந்நாவி
சூழலவும்வசமல்ல துய்யரசமே

அதிமதுரமெல்லியே ரதிமதனவல்லியே
அடிமைமேற்கோபமோ கொடுமைதானோ
தந்த்ரகனவாலையே சுந்த்ரகுணமாலையே
வந்தென்னையாளடி இந்தவதனு
நித்யகல்யாணியே நத்தினேனுன்னையே
முத்திதந்தருளவுஞ் சித்தமிலையோ
நெஞ்சுகல்லடி சொல்லடி நில்லுநில்லு
பஞ்சபாணத்தில் மூழ்கினேன் பாவைமாரே
வஞ்சமினிசெய்ய தர்மமோ மருவியென்னையே
கொஞ்சிவிளையாடியெந்தனுடன் கூடுவீரே

ஊக்ராஜன் சொல் விரக தரு

இ-ம்-தோடி-சாப்புதாளம்

பல்லவி.

காமமீறுதே ॥ பெண்ணே கண்ணே
காமமீறுதே

அனுபல்லவி.

சோமன்தணலாலே-வெதும்பி
சொக்கியேமனம்-வெழ்க்கினேனடி
சுகியேமனம் வெழ்க்கினேனடி
சுகியே முகிவோர் சகியே
துணையென்றுனை மிகநம்பினேன்
கணையைந்திட தனில்வெம்பினேன் (காம)

சரணங்கள்.

வன்னக்கருங்குயிலே ॥ மயிலே
மருவியேமுத்தந் தருவதுன்கடன்
பொன்னின்மடமானே-செந்தேனே
பொருந்தவேயின்ப மருந்துவாயடி
பூங்குயி லாளே-மையல்தீரப்
பாங்கா யிவ்வேளை-துடை
பிணைத்து-கட்டியணைத்து-இதழ்கடித்து-தேன்குடித்து-அடி
பொற்கொடியேசினி சர்க்கரையேவெகு
அக்கரைபோகங்கள் மிக்கவேசெய்யடி
அனமே - கனமே ॥ தனமே
அனலென்றிடு விரகந்தனில்
மனநொந்திடு தென்மெத்தவும் (காம)

போடிசெய்யாதே-மெய்யாயிப்போ
  மோகத்திலுலெந்தன் திரேகங்களைக்குறு
கூடிவிளையாடி-இருந்திட
  குற்றமில்லாமலுன் சித்தமிதங்கடி
கோதையே வாராய்-பொல்லாக்காம
வேதையைத் திராய்-நின்
  கொங்கையைத்தொட சங்கையென்னடி
  மங்கையேரதி தங்கையேயிதோ
  அங்குசன்பாணமென் மார்பைத்துளைக்குது
  ஆவிபதைத்திட திரேகங்களைக்குது
    அணியே - பணியே - மணியே
அடிமைக்கொரு வகைசெய்திடேன்
கொடுமைத்தொழில் மதனேயிடுங் (காம)

கொஞ்சுங்கிளியாளே-என்மீதினிற்
  கோபமேன்விரக தாபம்பொல்லாதடி
வஞ்சகமோவஞ்சமோ-ஈதென்ன
  மாயமோ-நல்ல-நாயமோவாடி
மைவிழி மாதே-ஜலக்கிரீடை
செய்வோமிப் போதே-அடி
  வஞ்சியேயினி யென்செய்வேனீயே
  தஞ்சமேயெனக் கெஞ்சினேன்
  சஞ்சலங்கீசெய்தால் தாளாதினிதாளாதினி
  சரணஞ்செய்தேன்மனஞ் சற்றேயிதங்கடி
    சதியே - மதியே - ரதியே
சடிலத்தினி லுயிர்பெற்றிட
கடிகிப்புனல் விடவுற்றிடு (காம)

ஹூகூராஜன் சொல்-கந்தார்த்தம்

இ-ம்-மோகனம்.

இந்தவம்வந்துபாயுதே-யெந்தனையாண்டிட-சிந்தையில்லையோ
நொந்திடத்தென்றல்வீசவும் நொடியினிலென்னுயிர் நிற்பதில்லையே
சுந்தரத்தேவிமார்களே-துணையெனவுங்களைமெத்தநம்பினேன்
சந்ததமாகவேயிப்படைதயலேவாடி-நொய்யவேயினி
  சதிசெய்யாதடிமானே-சதிசெய்யாதடிமானே (சதியே)
  சதியேசெய்திட மதியிதுதானோ
  சரசமாகவெனைத் தழுவியணைந்தருள (சதியே)

ஸ்திரீகள் சொல்-கந்தார்த்தம்-இ-ம்-மோகனம்

பூதலங்கானகந்தனிற்புனல்விளையாடவும் ஞாயமல்லவே
வேதனையென்றுசெப்பியே வேண்டியழைக்கிறீர் பிராணநாயகர்
மாதவர்கண்டால்கோபமாய் வைகுவார்நன்றல்லாநன்றல்லாயினி
காதலாய்சுவர்க்கமேகியே கருணையதாய்விளையாடலாமெங்கள்

கையைவிடுவிடுசுவாமி (கையை)
கையைவிடுவிடு மையல்வேண்டாங்
கற்றவித்தைகளை மெத்தவேபேசுறீர் (கையை)

ஊகூராஜன் சொல்-கந்தார்த்தம்-இ-ம்-மோகனம்.

தென்றற்றேரேறியமன்மதன்
திங்கள்வெண்கொடை நிழல்தன்னில்வாசமாய்
வற்னமாங்குயில்கள் கிள்ளைகள்
வண்டுகள் தும்பிகள் சேனைசூழவே
கன்னல்வில்கையிலேந்தியே
கடிகியேபூங்கணைவிடுவதென்சொல்வேன்
சன்னல்பின்னல்சராகவே
தைக்குதுமார்பினிற் பிராணநாயகி
சாலஞ்செய்யாதடி மானே (சாலஞ்)
சாலஞ்செய்திட காலமீதல்ல
தையலேயெனது மையல்தீரடி (சாலஞ்)

ஸ்திரீகள் சொல் கந்தார்த்தம்-இ-ம்-மோகனம்.

மலைவளம்பார்க்கவேண்டியே
மகிழுடனம்மையழைத்துவந்துநீர்
ஜலம்விளையாடுவோமெனத்
தாவியேமெத்தவும் வாதுகூறியே
கலைதனைத்தொட்டிழுத்திட
சாரணமேதினிப் பிராணநாயகா
நிலையில்லாவார்த்தைபேசவும்
நீதியோவும்மிட சாதிவண்மையோ
நில்லுந்தொடாதே தூரம் (நில்லும்)
நில்லுமறுமொழி சொல்லிடவேண்டாம்
நெடியகானில்மிக மடிபிடித்திழுக்குறீர் (நில்லும்)

ஊகூராஜன் சொல் கந்தார்த்தம்-இ-ம்-மோகனம்.

சொல்லுவாவழுவொணாதநற்சுந்தரமாகியதேவிமார்களே
புல்கிடமனதிலாவிடிற் புத்ரனெந்தனுக்கேதாணைக்குறீர்

அல் லல்யான்படவுநீதியோ அம்புயநான்முகனெழுதிவிட்டதோ
நல் லுரையொன்றுசெப்புவீர் நாடியேயெந்தன்மேற்கிருபையில்லையோ
ந டனவொய்யார சுந்தர (நடன)
நடனவொய்யாரி திடமதுசொல்வாய்
கூடைவுடனுங்களுக் கடுமைநானல்லவோ (நடன)

ஸ்திரீகள் சொல் கந்தார்த்தம்-இ-ம்-மோகனம்

போட்டியாயிந்தவார்த்தைகள் புருஷர்கள்பேசநீதியல்லநீர்
காட்டில்வாழ்மிர்கஜாதியோ கண்டவர்பேசினால்வெழ்க்கமில்லையோ
நாட்டிலேயுமதுபுத்திபோல் ராஜர்களெவரையுங்கண்டதில்லைகாண்
நீட்டியேவாதுபேசுநீர் நின்மனமிப்படிசபலமாகுமோ
நீரோ ஆண்பிள்ளையென்பது (நீரோ)
நீரோ ஆண்பிள்ளை பேரோதுமக்கு
நின்றுபேசுமினி சண்டையேனிடுகுறீர் (நீரோ)

ஊகூராஜன் சொல் கந்தார்த்தம்-இ-ம்-மோகனம்.

மங்கையர்பருவகாலையில் மாந்தர்மேலிச்சையாய்மோகமெய்தியே
பொங்கமாய்சேர்ந்திடாவிடிற் பூவதுமணமில்லாவண்ணமொய்க்குமே
அங்கஜனெந்தன்மேல்விடும் அம்புகளுங்கள்மேலெய்ததில்லையோ
பெண்களுக்கிந்தகாமநோய் பிரமனுமெய்திடமதிமறந்தானே
பிராணநாயகி வாரும் (பிராண)
பிராணநாயகி தருணமிவ்வேளை
பித்தன்மேலுனது சித்தமிதங்கடி (பிராண)

ஸ்திரீகள் சொல் கந்தார்த்தம்-இ-ம்-மோகனம்.

வாலையிற்புருஷரானவர் மங்கையர்க்கின்பமாயிதவுசொல்லியே
காலையும்பிடிப்பர்சத்தியங்கட்டுரைசெப்பியேயவற்செய்குவார்
கோலமாய்லீலையாடியே கொப்பனக்காமநோய்தீர்ந்தமட்டிலே
சாலவேயிட்டசத்தியந்தப்புவார் தையலர்தமைதப்பாசாண
சாணுயிதென்னவார்த்தை (சாணு)
சாணுவிடுவிடு வீணுய்ப்பேசுநீர்
சட்டம்பேசுநீர் குட்டுகள்வெளிவிடும் (சாணு)

தர்க்க பத்தியம்-இ-ம்-புந்நாகவராளி.

(பு) கஸ்தூரிசவ்வாது கந்தங்கள்பூசவோ
முத்தமருள்செய்குவாய் மோகனுங்கி

(ஸ்ரீ) விஸ்தாரவார்த்தைகள் மெத்தவேபேசுநீர்
பித்தமேலிட்டுதோ பிராணலோலா

(பு) கனமானகிரீடியே மகராஜமேட்டியே
காமநோய்திரடி கமலநேத்ரி

(ஸ்ரீ) தனியானகாட்டிலே வுனதாசைசெல்லாது
கனமல்லகனமல்ல கரேமாரா

(பு) இன்பமென்மீதி லில்லையோ அம்புசாக்ஷி

(ஸ்ரீ) தென்புகனசொம்பு சொல்லினுந்தீண்டொணுது

(பு) கும்பஸ்தனபார மதற்கொருகோடிசரணம்

(ஸ்ரீ) வம்புதும்புமுதவாது வுதவாதுமகுணவரசே

தர்க்கம்-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்

கண்ணிகள்.

ஊகூராஜன் சொல்லல்

வாடினேன்மெத்தவு மோடிசெய்யாதடி
கூடி விளையாடுவோம் கோதையரோபெண்ணே (கூடி)

ஸ்திரீகள் சொல்லல்

கானகந்தன்னிலே வூன்மாய்ப்பேசுறீர்
வானவர்கைப்பாரோ பிராணலோலா

ஊகூராஜன் சொல்லல்

தேவருமூவரும் பாவையருடன்கூடி
மேவாதிருப்பாரோடிமெல்லியாரோ பெண்ணே

ஸ்திரீகள் சொல்லல்

ஏதுதான்சொல்லினும் வாதுமிகப்பேசுகிறீர்
பூதலத்தேற்குமோ பிராணலோலா

ஊகூராஜன் சொல்லல்

தெண்ணலிதோவீசுதடி பெண்ணமுதேயன்னமே
நண்ணியொருமுத்தந்தந்து நல்குவாயே

ஸ்திரீகள் சொல்லல்

பித்தனைப்போலவே தத்துபித்தென்பது
புத்தியுமக்கிலையோ நித்யலோலா

ஊக்ஷராஜன் சொல்லல்

எசினுலென்னையினி பேசினும்போதும்
பாசமுடனுளுவீர் பாவையரே

ஸ்திரிகள் சொல்லல்

இள்ளைபோல்வந்துநீர் மெள்ளமெள்ளகெஞ்சுநீர்
கள்ளங்களுமறிவோங் கர்த்தனுரே

எதிர்சொல்-பத்தியம்-இ-ம்-புந்நாகவராளி

(பு) இனிதாகரசமீறு கனிவாயினிதழிலே
யென்னுவிசுழலுதே வற்னமயிலே

(ஸ்ரீ) அணியானரதிகேளி யுல்லாசகிரீடைகள்
ஆடவொண்ணுதுகா ணரசர்கோவே

(பு) மடல்வீறுமினிதானதடமதனிலெங்ஙாவி
படமிகச்சொக்கினேன் பதுமகெந்தி

(ஸ்ரீ) அடவாகநீசொன்ன ஆசாரவுபசாரஞ்
சரியல்லவிதுவுமரி யாதையல்ல

(பு) வீறுமேருதனமீதினில் விரகமாகினேன்
(ஸ்ரீ) தாறுமாறுமாய்ப்பேசிடத் தகாதுபோம்போம்
(பு) நீறுசெய்கிறுன் மன்மதன் நீலவேணி
(ஸ்ரீ) தேறுதலையாகநீர்மெத்தசொல்லினும் ஆருறுதே.

தர்க்கத்தரு-இ-ம்-கௌளிபந்து-ஏகதாளம்

ஊக்ஷராஜன் சொல்லல்

மடமானேஜலக்கிரீடையாட வாராய்
அடவாயுந்தனதரபானந் தாராய்
திடமாய்மன்மதன்விரகதாபந் தீராய்
வடவாக்கினிபோல்வீசுந்தென்றல் பாராய்
ஊக்ஷராமனென்றும் பேராய்- வந்து
வெம்மலானேன் தாராய்

தைக்குது காமபாணம் நேராய்
என்னாலாமோ சிந்தை வேறாய்
நொந்து நீறாய் வெந்தன்கூறாய்
உகந்து காராய் வந்துசேராய் (மடமானே)

ஸ்திரீகள் சொல்லல்

மதமோவெங்கணை வந்துதொட்டவொண்ணாது
சதமோவும்மிட் மதியிலாதானேவோது
இதவாய்ச்சென்றுநீ கெஞ்சினாலுந்தீது
அதிவேகமாய்ப் புஷ்பபாணமேது-என்பது
சித்ரக்கதையிதேது-கற்றதுமெத்த-போதும்போதும்-உந்தன்
புத்திக்கேத்த மாது-இங்கிலை
மித்திரபேத மீது
உனது சூது இனித் தகாது
கனத்த வாது மனத்து ளோது (மதமோ)

ஹூஹூராஜன் சொல்லல்

சனமோடிசெய்யாதேவாரு மானே
மனவேதையால்வந்தேனித்த கானே
தனதாயுங்களைநம்பிவெம்பி னேனே
வனமாங்குயிற்கூவுதென்செய் வேனே
அனல்போற்றிங்களேசென்று வானே-வீசுது
மங்கையுந்தன் மீனே-விழியென்
னங்கமீது தானே-பாய்ந்திட
வெங்குநைந்துபோனேன்-
ஜபமே னோ-தையலாளே
ஞ்மயலா னேன்-செய்வதேதோ (சனமோடி)

ஸ்திரீகள்-சொல்லல்

மதியேதடாயெங்கள்பிராண லோலா
நதிமேவிடுசடையமல்ல சீலா
விதியோமுனிவர்களேசுவாரோ மேலாய்
பதிமேவிருலின்றுசென்று சோலா
அமளியில்வெகுவிலாசலீலா விநோதசுகமுமேவிடமாலாய்
அவைவர்கள்புகழுநல்லழுலாய் தாரணிமகிழுவளரும்சீலா
வதனபாலா மதனுகூலா
சதிநுகூலா ஜதிவிசாலா (மதியேதடா)

ஊகூமகாரஜன்-சொல்-திபதை

கோடி சூரியப்பிரகாசலக்ஷணு
கோமளவற்னமதங்கசுந்தரி
நீடியரத்தினபூஷணி
நீலவேல்விழிமூனே கூர்மைகள்தைக்குதே
நாடியகும்பமாந்தன
நண்ணித்தடந்தனில் சொக்கிவெழ்க்கினேன்
வாடிநீமதனகிரீடியே
மர்த்தனகோகிலவாணியாளடி

ஸ்ரீகள்-சொல்-தரு-இ-ம்-மோகனம் ஆதிதாளம்

பல்லவி.

சரசபரியாசங்கள் மிஞ்சாதேலோலா
சாமிநீகிட்டவந்து கொஞ்சாதேபோம்போம்

அனுபல்லவி.

சரசபரியாசமி தேது
சாமியிதென்னவாது
சங்கையில்லாமல் வங்கணபேச்சாய்
பொங்குறீர்வீணு யிங்கிதலோலா (சரச)

சரணங்கள்.

சின்னஞ்சிறுபிள்ளைபோ லின்னஞ்செல்வஞ்செருக்கிறீர்
சித்திரஞ்சித்திரமாகக் கற்றதெல்லாம்விரிக்குறீர்
மன்னனேமையல்கொண்டு வந்துவந்துமரிக்குறீர்
மனதில்நினைந்தபடி நடக்குமென்றிருக்குறீர்
மட்டுமில்லாமற் கட்டுகளாய்வெகு
நெட்டுகள்பேசுறீர் குட்டுகளறிவோம் (சரச)

கள்ளனைப்போலவே காட்டினில்மறிக்குறீர்
கனவுகண்டபணத்தைச் சிலவுக்கோதிறட்டுறீர்
துள்ளிதுள்ளிவெதும்பி கடைக்கண்ணுலுருட்டுறீர்
சொக்குபபொடிமாயவித்தை பக்குவமாய்ப்பிறட்டுறீர்
தொந்தமதாகிய மந்திரமும்நின்
தந்திரமறிவோஞ் சுந்தரலோலா (சரச)

கெஞ்சிக்கெஞ்சியேவாயால் வஞ்சகம்படிக்குறீர்
கேழ்வியில்லாவிடத்தில் வேழ்விமெத்தமுடிக்குறீர்
அஞ்சாமற்கிட்டவந்து வம்புகள்பேசுறீர்
ஆடவிட்டபம்பரம்போற் காடுகளில்நொடிக்குறீர்
அக்கரைக்கிடாய் சர்க்கரைபேச்சுகள்
மிக்கவேபேசுறீர் வெற்க்கமில்லாமல் (சரச)

—(*)—

ஸ்ரீகள்-அகவல்-இ-ம்-மோகனம்.

இத்தனைக்கோபமே னித்தனை துடுக்கென்ன
இத்தனைவீண்பேச்சுக ளேனுரைப்பீரோ

சந்த்ராஈதித்தர் தானகைபுரிவார்
சொந்தவீடோயிது துய்யகானகத்தில்

வீண்வார்த்தையேதுக்கு வீசுறீர்சும்மா
சாணல்லவயறு சங்கைதானில்லையோ

பெண்களுக்குள்ளது பேதமையென்பார்
நண்பல்லவுன்புத்தி நாட்டிலொவ்வாது

சண்டைசெய்திட்டாற் சடையினலடிப்போம்
பெண்கள்மேலிச்சையாய் பேய்பிடித்ததுவோ

தெரியாதபுத்தியோ சிறுபிள்ளைவயதோ
மரியாதியல்லகாண் மருணநாயகமே

ஊகூமகாராஜன்-சொல்-விரக-ஓரடி-தரு
இ-ம்புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

சந்திரவதனா-யிந்தவிரகந்-தாளொணாதடி
சகியேசகியேதிவ்ய (சந்திரவதனா)

அனுபல்லவி.

அந்திபகலெந்தன்மீதில் வந்துதென்றல்வீசுதடி
யெந்தவகையாகிலுமுன் சிந்தையிதங்கடிமானே (சந்திரவதனா)

சரணங்கள்,

வானுள்மின்னொளிதேவப் பெண்ணே
விண்ணே-கண்ணே-இன்னே-பழி

மீள்வதரிக்ஷயமே துக்கடி
மோடி-வாடி-கூடி-விளை
யாடிகளித்திடலா மனமே
கனமே-தனமே-அனமே-மதன்
வாளிபொழிந்திட மூழ்கித்தணியேன்
நணியே-பணியே-மணியே-ரஞ்சித
நித்தியகல்யாணி சித்திரநல்வேணி
சுத்தமதுவாலை சத்தியகாமவாலை
கோகிலத் தொனியால் மனம்
வேகுதே தெள்ளமிர்தே
பாகுசர்க்கரை நற்கனியே தனி
ஜீவரத்தின மதரதசுந்தரி (சந்திரவதன)

ஸ்ரீகள்-சொல்-விருத்தம்.

ஜலந்தனிற்கிரீடையாடத் தையலார்தமையழைத்தீர்
நலம்பெறுஞ்சோலைதன்னில் நற்றவமுனிவர்வாழ்வார்
கலந்துநாமிருக்கும்போது கண்டவர்கோபிப்பாரோ
துலங்கிடவெமக்குநன்றாய்ச் சொல்லுவீர்பிராணநாதா

வசனம்

கேளும்பிராணநாதரே இந்ததிவ்வியமான தடாகத்தில் ஜலக்கிரீடை செய்யவேணுமென்று எங்களையழைக்கிறீர் ஆனாலிந்த திரிகூடபர்வதச்சாரலில் பெரியோர்களாகிய ரிஷீஸ்வரர்களிருக்கப்பட்ட யிடமாகையால் நாம் ஜலத்தில்விளையாடும்போது அவர்கள் நம்மைக்கண்டு கோபிப்பாரோ யென்னமோதெரியச் சொல்லுவீர் பிராணநாயகரே

ஊகூமகாராஜன்-ஸ்திரீகளுக்குச் சொல்-விருத்தம்

மாதவமுனிவர்விண்ணோர்-மாநிலமன்னரேனுங்
கோதிலாமூவரேனுங் கோதையைவிட்டுநீங்கார்
சீதரனருளினாலே தீவினையெய்திடாது
காதலாய்ப்பொய்கைதன்னிற் கலந்துநாமிருப்போம்வாரீர்

வசனம்

கேளுங்கள்-பெண்களே இந்தச்சொர்க்கமத்தியபாதாளலோகமென்றுசொல்லப்பட்ட மூன்றுலோகத்திலுமுள்ள இராஜர்களும் தேவர்களும் நான்குவேதமுமுணர்ந்த முனீஸ்வரர்களும் திரிமூர்த்திகளும் ஸ்ரீகளுடைய மோகாந்தகாரத்தில் மூழ்கியிருப்பவர்களேயல்லாமல் வேறில்லை ஆகையால் அது உங்களுக்குத் தெரியாதா ஆனால் நம்முடைய குலதெய்வமாகிய ஸ்ரீமந்நாராயண மூர்த்தியின

டைய கிருபையினாலே ஒருதீங்கும் வரமாட்டாது நாம் ஜலத்தில் கிரீடித்துவிளையாடிக்கொண்டிருக்கலாம் வாருங்கள் பெண்களே.

ஸ்திரீகள் சொல் வசனம்.

அப்படியேசெய்யலாம் பிராணநாதரே,

ஊகூராஜனும் ஸ்திரீகளும் கூடுகிற-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்,

ஊகூராஜன் சொல்லல்

தாளவேவசமல்லடி - இனி
தையலே வாராய்-வந்தென்தன்-மையலைத்தீராய்
வேளைக்கருங்குயில் கூவியழைக்குது
வெங்கனற்போலவென் னங்கமுளைக்குது (தாளவே)

ஸ்திரீகள் சொல் - தரு.

கோலாகலப்பிராண லோலா-ஒருமிக்கக்
கூடுவோம் வாராய்-கொஞ்சிவிளை-யாடுவோம் வாராய்
வாலாயமாய்ரதி தன்னிலேவாசமாய்
மருவியேரதி கேளிவிலாசமாய் (கோலா)

ஊகூராஜன் சொல்லல்.

விரகதாப மீறுதே-அடி
மெல்லியே வாராய்-வந்தென்னைப்-புல்குவாய் சேராய்
சரசமாய்இத முத்தமிகத்தாரும்
தார்குழலேபஞ்ச பாணத்தினால்வரும் (விரக)

ஸ்திரீகள் சொல்-தரு,

சஞ்சலமேதினி அஞ்சவேண்டாமெங்கள்
சாமிநீர் வாரும்-விளையாட-நாயனே வாரும்
நெஞ்சகந்தன்னிலே வேறொன்றுமெண்ணாதே
நீர்விளையாடலாம் நின்மனங்குன்றாதே (சஞ்சல)

ஊகூராஜன் சொல் - தரு.

சொர்னமயமான வர்னக்கமலத்தின்
ஜோதியைப் பாராய்-அதிசபுஷ்ப-ஜாதியை நேராய்
அன்னப்பட்சியர் விந்தத்தைத்தாவுது
ஆனந்தமாயொன்று கிரீடிக்கப்போகுது (சொர்ன)

ஸ்திரீகள் சொல்-தரு.

மட்டில்லாவாவியிற் கட்டியிருக்கிறீர்
மன்னனேகேளும்-பொருங்காண்-இன்னஞ்சற்றேநாளும்

கொட்டியுமாம்பலும் நெய்தலுங்கால்தனில்
குத்துதேமேற்கொடி சுத்துதேபொரும்பொரும் (மட்டில்லா)

ஊகூராஜன் சொல் - தரு,

கொக்குடனனைகள் வக்காலின்றாவின்
கூட்டத்தைப் பாராய்-ரதிகேளி- ஆட்டத்தை நேராய்
பக்கத்திலொருபேடை வெழ்க்கப்பட்டிருக்குது
பறவைகளித்தாடி சிறகைவிரிக்குது (கொக்)

ஸ்திரீகள் சொல் - தரு,

இந்தஜாலவித்தை எந்தகாலத்திற்கற்றாய்
தார்புனை மார்பா - வையப்புகழ்
சீர்வளர் பூபா - எங்கள்
வாலப்பருவத்திற் கேற்றமணவாளா
மதிதிகேளிக் கிதரசகன்ஞளா (இந்த)

ஆமகேது ஊகூராஜனுக்குச் சொல் வசனம்.

ஆ-ஆ-என்றாச்சுது இந்ததிரிகூடபர்வதச்சாரலில் வாசம்பண்ணப்பட்ட (பிருகுமகாரிஷி) வரப்பிரசாதத்தினாலுண்டாயிருக்கப்பட்ட தடாகத்தில் ஸ்திரீகளோடேகூடிக்கொண்டு கிரீடித்திருக்கப்பட்டவன் நீ யார் பிள்ளாய்.

ஊகூராஜன் ஆமகேதுவுக்குச் சொல் வசனம்.

அடா துஷ்டப்பயலே ஆ-ஆ நாம் ஜலத்தில் கிரீடித்துக்கொண்டிருக்கும் போது நீ இவ்விடம்வரலாமா நீ சுருக்காக இவ்விடம்விட்டு அப்பாற் போகாவிட்டால் உன்னை உயிர்ச்சேதஞ்செய்வேன் பிள்ளாய்.

ஆமகேது பிருகும்காரிஷிக்குச் சொல் விருத்தம்.

ஐயனேபோற்றிபோற்றி அருந்தவமுனியேபோற்றி
மெய்யனேபோற்றியெந்தன் விண்ணப்பமொன்றுகேளீர்
பொய்கையிலெவனோமன்னன் பூவைமாருடனேகூடிச்
செய்வதோரதிசயத்தைத் தேவரீர்வந்துபாரீர்

வசனம்

சரணஞ் சரணஞ் சுவாமி முனிநாதரே அன்னப்பட்சிகள் விளங்கியிராநின்ற திவ்வியமான தடாகத்தில் எவனோஒருராசன் தன்னுடைய ஸ்திரிகளுடன் கூடிக்கொண்டு ஜலக்கிரீடையாடி ஜலத்தையெல்லாங்கலக்கிப் போட்டான் சுவாமி.

பிருகுமகாரிஷி சொல் வசனம்.

அடா சிஷியா அப்படியா நிசந்தானா.

ஆமகேது சொல் வசனம்.

நிசந்தான் சுவாமி.

பிருகுமகாரிஷி சொல் வசனம்.

ஆனால் அவ்விடத்திற்போய் பார்த்துவருவோம் வாரும்பிள்ளாய்.

தூமகேது சொல் வசனம்.

அப்படியே சீக்கிரம் வாருஞ்சுவாமி.

பிருகுமகாரிஷி ஊகூராஜனுக்குச் சொல் வசனம்.

ஆ-ஆ-நன்றாச்சுது அடாகந்தருவா (ஊகூநாமனென்பவன்) நீயல்லவா அடாதஷ்டப்பயலே இந்ததிவ்வியமான தடாகத்தில் ஸ்திரீகளைக்கூட்டிக்கொண்டு புண்ணியதீர்த்தத்தையெல்லாங் கலக்கி ரிஷீஸ்வரர்கள் சந்தியாவர்தனம் செபதபஞ்செய்யப்பட்ட யிடத்தைக்கெடுத்தாய் உனக்குத்தகுந்த புத்திசெய்கிறேம் இப்பால்வாரும்பிள்ளாய்.

பிருகுமகாரிஷி ஊகூராஜனுக்குச் சொல் விருத்தம்.

துஷ்டகந்தருவாகேளாய் தோகைமாருடனேகூடி
மட்டில்லாஜலமெல்லாமுன் மதத்தினாற்கெடுத்ததாலே
கட்டளையொன்றுரைப்போங் கன்னியர்தம்மைநீங்கி
வெட்டுநீமுதலையாகி மேவுவாய்மடுவிற்றானே

வசனம்.

வாரும்பிள்ளாய் (ஊகூநாமனே) இந்ததடாகத்தில் உன்னுடைய தேவிமாரோடுங் கூடி கிரிடைசெய்து ஜலத்தையெல்லாங்கெடுத்தபடியினால் உன்னுடைய புஷ்பவிமானமும்நீங்கி உன்தேவிமாரையும் விட்டு இந்தமடுவில் முதலையாய்போகக்கடவாய் ராஜனே

ஊகூராஜன் தேவிமார்களுக்குச் சொல் விருத்தம்.

இ-ம்- முகாரி.

மாதரசனமேகேளீர் மாமுனிசாபத்தாலே
வேதனையாகியெந்தன் மெய்யெலாநடுங்குதையோ
பாதகவினையாலுங்கள் பாசத்தைவிட்டுநீங்கி
நீதெனுமுதலையாகித் திகைத்திடவிதித்தவாறே

வசனம்

கேளுங்கள் என்னுயிருக்குயிரான தேவிமார்களே முனிநாதரிட்டசாபகாரணத்தினால் வாதனையாகிச்சரீரமெல்லாம் நடுக்கமாச்சுது இதுவரைக்கும் உங்களைப்பிரியாமற் கூடிவாழ்ந்தேன் முன்செய்தவினையினால் உங்களுடையஆசைவிட்டு முதலையாகித்திகைத்துப் புலம்பியழும்படிக்குப்பிரம்மதேவன் எழுதினானே நானென்னசெய்குவேன் பெண்களே.

ஊகூராஜன் புலம்பல் - தரு - இ - ம் - புந்நாகவராளி - சாப்புதாளம்.

கண்ணிகள்

இந்தவிதிக்கென்ன செய்குவேன் - முனிசாபத்தை
யெந்தவிதந்தவிர்த் துய்குவேன்

புஷ்பமலரனை யிழந்தேன் - இரவுகண்ட
சொற்பனம்போலெல்லாந் தவிழ்ந்தேன்

இந்திரவிமானந் துறந்தேன் - பூரணமான
சந்திரன்போல்மேனி குறைந்தேன்

உங்களைவிட்டுப் பிரிவேனோ - இடங்கராகித்
துங்கமடுவிற் றிரிவேனோ

எண்ணமெல்லாம் வீணதாச்சுதே - முனிமனதில்
நண்ணுஞ்சாபம்வந்து வாய்ச்சுதே

முன்செய்த தீவினையோ - மலரயன்
றன்னெழுத்துப் பாவனையோ

அங்கமெல்லாநைந்து தேயுதே - சாபமேலிட்டு
யெங்கினிலும்வெந்து தீயுதே

நாரணர்கிருபை யில்லையோ - எனக்குவந்த
காரணமிதென்ன தொல்லையோ

ஸ்திரீகள் ஊகூராஜனுக்குச் சொல் விருத்தம்

இ - ம் - கண்டா.

எங்களாண்டவனேகேளீ ரிவ்விதிக்கென்னசெய்வோம்
அங்கமுமுயிருமொன்று யனுதினங்கூடிவாழ்ந்தோம்
பொங்கமாய்சுவர்க்கநீங்கிப் புவிதனிற்புரண்டுவிம்மி
மங்கில்யமிழப்பதாக மலரயன்விதித்திட்டானே

வசனம்

கேளுமெங்கள் பிராணநாயகா இப்போதுவந்துநேரிட்ட இந்தவிதிக்கென்னசெய்யப்போறோம் எங்கள் (மங்கில்யம்) இழந்துபோகும்படி பிரம்மதேவன் எழுதினானே இனி யென்னசெய்யலாஞ் சுவாமி.

ஸ்திரீகள் சொல் புலம்பல் - தரு

இ - ம் - முகாரி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

இந்தவிதிக்கென்னசெய்வோ மெங்கள்சுவாமி
முந்தவினைப்பயனோ வந்தோமிந்தப்பூமி

பொல்லாதபெரும்பழி யேர்த்தோமேசுவாமி
யெல்லாப்போகங்களையுந் தோர்த்தோமேசுவாமி

ஆதிகேசவர்நமதுபங்கி லில்லையோ-இந்த
வேதனைவந்துமீண்டதென்ன தொல்லையோ

உம்மைவிட்டுப்பிரிந்திட விதித்தானோ-அயன்
பொம்மலாட்டங்கள்போல மதித்தானோ

எண்ணுங்குறைவில்லாமல் வாழ்ந்தோமே-வேகுஞ்
சுண்ணம்போல்மேனிநொந்து வீழ்ந்தோமே

முனிநாதரிட்டசாப மீளாதோ-அவர்முன்
இனிநான்முறையிட்டாலுங் கேளாதோ

சொந்தமாய்ச்சொர்க்கலோகம் ஆண்டோமே-இனி
இந்தபூஷணங்களை வேண்டோமே

பொய்கைக்குவந்துபழி வாய்ச்சுதையோ-நமக்குத்
தெய்வபலனில்லாமற் போச்சுதையோ

ஸ்திரீகள் ஊகூராஜனுக்குச்சொல் விருத்தம்
இ-ம்-ஆஹிரி.

பேதகமொன்றில்லாத பிராணநாயகனேகேளீர்
வேதனைவந்ததென்று விதனமெய்திட்டாற்போமோ
சோதிலாமுனிவர்பாதங் கொப்பனத்தொழுவோமாகில்
தீதிலாமனமிரங்கித் தீவினையகற்றுவாரோ

வசனம்,

கேளும்பிராணநாயகா முனிநாதருடைய சாபகாரணத்தினால் சரீரத்தி ற்குப்பொல்லாங்கு வந்ததென்று விதனப்பட்டுக்கொண்டிருந்தால்தீரமாட்டா து ஆகையால் குற்றமற்று விளங்கியிராநின்ற முனிநாதருடைய பாதாரவிந்தத் தில் நாமனைவருஞ் சரணாகதியென்று தொழுவோமாகில் அவருடைடமனமிரங் கி நமக்குவந்த சாபத்தை நீக்கி இரட்சிப்பார் வாரும் பிராணநாயகா.

ஊகூராஜன் தேவிகளுக்குச்சொல் வசனம்

அப்படியே முனிநாதருடைய பாதாரவிந்தத்தில்பணிந்துக்கொள்ளுவோ ம் வாருங்கள்தேவிமார்களே.

ஊகூராஜன் பிருகுமகாரிஷியைத் துதிசெய்கிற
தரு-இ-ம்-தோடிஅதிதாளம்,

கண்ணிகள்

செங்கமலப்பாத பென்னாகமிருற்றெறு
தேத்தி னேனே - உந்தன்

திருவடிமலரொந்தன் சென்னியின்மேல்வைத்து
போற்றி னேனே
சங்கையில்லாவேத புராணபாராயண
நாதனே - சுவாமி
யெங்குந்தயாபர பூரணமாகிய
வேதனே
தேவர்புசழ்ந்திட வேழ்வியளித்தரு
ளையனே - வருந்
தீவினைகற்மங்கள் பர்வமொழித்திடு
மெய்யனே
பாவையராகிய தேவிமாராசையிற்
சிக்கி னேனே - முந்நாள்
பண்ணியபாவத்தா லெண்ணந்தப்பிமனம்
வெழ்க்கினேனே
நீ நாயிருந்திட்ட பாதகன்செய்ததப
சாரமே - இனி
சித்தமகிழ்ந்தென்னை ரட்சிப்பதேயுப
காரமே
சோதிலாநற்குண ஞானகிர்பாகர
ஜோதியே - செய்த
குற்றம்பொறுத்தினி முத்தியளித்தரு
ளாதியே
பிழைகள்பொறுக்கப் பெரியவர்க்கேகட
னில்லையோ - இந்தப்
பேயனென்மேற்கிருபையேயளிக்கமனம்
வல்லையோ - உந்தன்
கழலதுதுணையல்லால் நிழலுமெனக்குண்டோ
வன்னையே - இனி
காத்தாலுநீகளை சேர்த்தாலுமுன்பார
மென்னையே

ஊகூராஜன் பிருகுமகாரிஷிக்குச் சொல் விருத்தம்

இ-ம்-தேவாரம்

கண்ணுதலயனுமாலுங் கற்பகநிழல்வாழ்வோனும்
விண்ணவர்முனிவர்மெச்சும் வேதமாமுனியேபோற்றி
நண்ணினேனுந்தன்பாதம் நாயேன்செய்பிழைபொறுத்து
யென்னமுஞ்சாபநீக்கி யெந்தனைரட்சிப்பீரே

வசனம்

கேளுஞ்சுவாமி முனிநாதரே பிர்ம்மா-விஷ்ணு-உருத்திரன்-தேவேந்திரன்-தேவர்க்கள் முனிவர்கள்முதலானவர்களுமெச்சும்படி கீர்த்திபெற்றமகானுபாவரே, அடியேன் தங்கள்பாதாரவிந்தத்தை மிகவும்நம்பினேன் அடியேன் என்னபிழைசெய்தாலும் பொறுத்து முதலைரூபமாகச் சபித்த சாபத்தை நீக்கி இரட்சிக்கவேண்டுஞ் சுவாமி.

பிருகுமகாரிஷி ஹூகூராசனுக்குச்சொல்

அகவல்-இ-ம்-மோகனம்.

நல்லதுஹூகூ நாமனேகேளொன்
சொல்லதுவீணல்ல தொட்டுமேசாபம்

இடங்சராய்ச்சிலநா ளிந்தநன்மடுவில்
முடங்கியேயிருந்து முயன்றிடும்போது

மதகரியொன்று வாவிநீருண்ணச்
சிதறிடுமதனைச் சிக்கிநீபிடிக்க

ஆதிமூலமேயென் றதுமுறையிடவும்
ஜோதிநாரணனுஞ் சுருக்கினில்வந்து

சக்கரத்தாலுனைத் தறித்தந்தக்கரியை
அக்கரையேற்ற அப்பொழுதுனது

சாபமுநீங்கித் தங்கமாயதிக
ரூபமுமெய்தி யுன்றுதேவியருடன்

அன்புடன்சுவர்க்க மணுகிநீயிருந்து
யின்பமாய்வாழ்வீர்க ளிதுவிதித்தனனே.

பிருகுமகாரிஷி சொல் வசனம்

கேளீர்ஹூகூமகாராஜனேநீசெய்ததுஷ்டவேலைக்காக உனக்கிந்தச்சாபம்நேரிட்டது ஆனால்நாமிட்டசாபம் வீண்போகமாட்டாது நீ இந்ததடாகத்தில் சிலகாலம் முதலை ரூபமாயிருந்து பின்பு ஒருமதயானையாசப்பட்டு இந்ததடாகத்தில் வந்து ஜலஞ்சாப்பிடும்போது நீஅந்தயானையின் காலைப்பிடித்துக்கொண்டு போராடும்போது அந்தயானை (ஆதிமூலமென்று) முறையிடும்போது விஷ்ணுசக்கரம் வந்து உன்மேற்பட்ட மாத்திரத்தில் முதலைரூபம்நீங்கி உன்தேவிமாருடன் சுவர்க்கலோகம்போய்ச்சந்தோஷமாக வாழ்ந்திருப்பாய் எழுந்திரும் ஹூகூமகாராஜனே,

ஊகூராஜன் ஸ்திரீகளுக்குச் சொல் வசனம்

கேளுங்கள் பிராணநாயகிகளே முனிநாதர்சொன்ன விசேஷத்தைக்கேட்டீர்களா எனக்குமிகவுந் திரேகம் நடுக்குது நினைவுதடுமாறுது மூச்சொடுங்குது உங்களை இந்தக்கானகத்தில் விட்டு முதலைரூபமாக இந்த ஜலத்தில் முழ்கி மீன்முதலாகிய மாம்ஜாதிகளைப்பொசித்துக்கொண்டு ஜலத்தில் மிகவுங்கஸ்திபட்டுக்கொண்டு எந்தகாலஞ்செல்லுமோ உங்களைக்காண்பதற்கு என்னசெய்வேன் பிராணநாயகிகளே.

ஸ்திரீகள் ஊகூராஜனுக்குச் சொல் விருத்தம்.

இ-ம்-தோடி.

வானகத்தோர்கொண்டாட மகிழ்ச்சிபொங்க
  மாதவர்கள்புடைசூழக் கவரிவீச
மாநிலத்துமன்னரெல்லா மேவல்செய்க
  மணிகள்பொன்னிலிழைத்த கொலுக்கூடந்தன்னில்
ஊனமற்றசெங்கோலா லுலகமெல்லா
  மொருகுடைக்கீழாண்டதெல்லாம்விட்டுநீங்கிக்
கானகத்தில்முனிசாபந்தன்னிற்சிக்கிக்
  கராவுருவாயமைந்திடக்காரணமோகண்டாய்

வசனம்

கேளுங்கள் பிராணவல்லபரே தேவர்க்கள் கொண்டாடும்படி யாசவும் முனிவர்கள் பக்கத்திற் சூழவும் கவரிகள் வீசவும் பூமியில்வாழும்படியான அரசர்கள் தாழவும் நவரத்தினங்களிழைத்த கொலுமண்டபத்தில் குற்றமில்லாத செங்கோற்கொண்டு ஒருகுடைக்கீழ் கந்தர்வலோகத்தை அரசுசெய்ததைவிட்டு நீங்கி இந்தக்காட்டில்பிருகுமகாமுனிசாபத்திற்சிக்கி முதலை ரூபமாய் இந்தப் பொய்கையில் தவிக்கும்படியாய் நேரிட்டது என்னகாரணமோ அறியோம் எங்கள்பிராணநாதரே.

ஸ்திரீகள் சொல் புலம்பல்-தரு

இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

விதியோபிராணநாயகா - ஈதென்ன
  வேதனையோ-தற்-போதனையோ-அயன்
  பாவனையோ-முன்செய்-தீவினைதானோ

பீளாப்பழிமூண்டதுவோ - முந்நாள்
விட்டகுறைவந்து-தொட்டதுவோதெய்வம்
பட்டமழிவதயன் - கட்டளைதானோ-உன்னை

விட்டுப்பிரிந்திடவே - அயன்
விதித்தானோ-நெஞ்சில் - மதித்தானோ-சனிய
னுதித்தானோ - மனங்-கொதித்திடலாமோ

கண்ணேகறிசினமே - எங்கள்
கண்ணாதிரோகம் - புண்ணானோம்நீயினி
மண்ணாளுவதினி - யெண்ணுளோ - சுவாமி

துரையேதுரைமகனே - ஒன்று
சொல்லாயோ-சென்றுநில்லாயோ-சாபம்
வெல்லாயோ-அரசு - செல்லாதோ-சுவாமி

தெய்வலோகப்பதியிழந்து - காட்டில்
தேங்கிநின்றே - மன - மேங்கிநின்றோம்-உயிர்
நீங்கிடவே-பொல்லா-நீங்கிதானோ

என்றுன்னைக்காணுவதோ - சுவாமி
யென்றுரையே-வானின் - சந்திரனோ - தெய்வ
யிந்திரனோ-ரூப-சுந்திரலோலா

காட்டிற்பிரியவிட்டு - புலி
கடிக்கவிட்டாய்-அழுது-துடிக்கவிட்டாய்-கண்ணீர்
வடிக்கவிட்டாய் - மனம்-பிடிப்பதெவ்வாறு

ஆகாயவாணியம்மா-என்ன
ஆச்சரியம்-ஒரு-பேய்ச்சுணையாய்-நிலை
நீச்சறியோம் - உயிர்-மாய்ச்சிடவோசொல்

ஆதிபக்வானே - ஒரு
ஆதரவுசொல்லாய்-சீதரனே-தா
மோதரனே - வகை-யேதுரையாயோ

முனியேமுனிநாதா-ஒன்று
மொழியாயோ-கண்ணை-விழியாயோ-சாபங்
கழியாயோ-முந்நாள்-பழியிதுதானோ-உந்தன்

சித்தமிரங்காதோ-உமது
சித்தமெல்லாந்தயவு-சற்றிலையோவொரு
புத்திசொல்லாயெனைப்-பெற்றமாதாவே

ஸ்திரீகள் பிருகுமகாரிஷிக்குச் சொல்
விருத்தம்-இ-ம்-தேவாரம்.

மாதவாபோற்றியுந்தன் மலரடிதுணையல்லாமல்
ஆதரவொன்றுங்காணேம் அபயமென்றுனையடைந்தோம்
போதவேநாங்கள்செய்த பிழைதனைப்பொறுத்திப்போது
வாதனையகற்றியெங்கள் மங்கில்யபிட்சைதாரீர்

வசனம்

சரணஞ் சரணஞ் சுவாமி முனிநாதரே தேவரீருடைய பாதாரவிந்தமே எங்களுக்குத்துணையல்லாமல் வேறே ஓர் ஆதரவுமில்லைநாங்களென்னபிழைசெய்தாலும் பொறுத்தருளி எங்களுக்கு (மங்கில்யபிட்சை) அளித்து ரட்சிக்கவேண்டுஞ்சுவாமி.

பிருகுமகாரிஷி ஸ்திரீகளுக்குச் சொல் விருத்தம்.

கன்னிமாதரசேநீங்கள் கலங்கிடவேண்டாமிப்போ
சொன்னசொல்வழுவொணாது தொடர்ந்ததோர்சாபநீங்கப்
பன்னகத்துறங்குகின்ற பராபரன்றனைநன்றாய்
உன்னிநற்றவமேசெய்தா லொழிந்திடுஞ்சாபந்தானே.

வசனம்.

வாரீர் கந்தருவ ஸ்திரீகளே நீங்கள்பயப்படத்தேவையில்லை என்வாக்கினுலிட்டசாபம் வீண்போகமாட்டாது அதுநீங்கும்படி அனந்தன்பேரில் பள்ளிகொண்டிராநின்ற (ஸ்ரீமந்நாராயணமூர்த்தி)பாதாரவிந்தத்தைநோக்கித் தவஞ்செய்வீர்களே யாமாகில் இட்டுங்கசொன்னப்பட்ட சாபம்நீங்கி எப்போதும்போல் பழையரூபத்துடன் உங்கள்புருஷனும் நீங்களும் சுவர்க்கபதவிக்குப்போயிருக்கலாம் பெண்களே.

ஸ்திரீகள் பிருகுமகாரிஷிக்குச் சொல் வசனம்.

அப்படியே செய்கிறோம் முனிநாதரே.

பொது விருத்தம்.

முன்னுரைரிஷிசாபத்தால் முடங்கியேஊகூநாமன்
பொன்னெழிலுருவமாறிப் பொய்கையிலிடங்கராகிப்
பன்னவாயெய்தன்பேழ்வாய் பணையெனநீண்டவாலும்
அன்னவன்ஜலத்தில்நீந்தி யநேகநாள்திரிகின்றானே

கட்டியக்காரன் சொல் வசனம்.

அக்கோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் (பிருகுமகாரிஷி) இட்டசாபத்தினால் கோடிசூரியப்பிரகாசம்போலிருந்த (ஹூகூநாமன்) உருவமாறி முதலைரூபமாகி-வாள்போற்பற்களும்-அகண்டவாயும்-முள்ளுமுள்ளாக நீண்டவாலுடனே திரிகூடபர்வதச்சாரலிற் கருகேயிருக்கின்ற மடுவின் ஜலத்தில் வெகுநாளாய்த்திரிந்துகொண்டிருக்கிற விதங்காண்க.

பொது விருத்தம்.

இப்படிஹூகூநாமன் இடங்கராய்ப்போனபின்பு
செப்பமாய்த்தமிழ்நாடெல்லாஞ் சேரவேயாளுந்தீரன்
ஒப்பிலாவிந்த்ரதூய்ம னுயர்கொலுவாசற்காக்குங்
கொப்பனக்கட்டியக்காரன் கோலமாய்வருகின்றானே

பொது வசனம்.

அக்கோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் (ஹூகூநாமன்) முதலைரூபமானபின்பு இப்பால்பாண்டியநாட்டை ஏகசக்கிரேஸ்வரனாகவுங்கொடையிலாளப்பட்ட (இந்திரதூய்மபாண்டிய மகாராஜன்) கொலுவாசல்காக்கப்பட்ட கட்டியக்காரன்வருகிற விதங்காண்க.

கட்டியக்காரன் வருகிற - தரு
இ-ம்-பூரிகலியாணி-ஆதிதாளம்,

பல்லவி.

திட்டமாய்கட்டியக்காரன்வந்தான்-சொகுசுடனே
திட்டமாய்க்கட்டியக்காரன்வந்தான்

அநுபல்லவி

பட்டணங்களெல்லாம்வெகு சட்டமாயலங்கரித்து
வட்டமானதிசை யெட்டினுமரச
னிட்டசொற்படியே நட்டணையாகத் (திட்ட)

சரணங்கள்

நெற்றியிற்றிருநாமமு மிட்டு-சிரசின்மீதில்
நேத்தியாய்சரிகைபாகை பட்டுபளபளென்ன

முத்திழைத்தகச்சைநடு கட்டு-அங்கிமேற்கட்டி
மோகமாய்நுதலிற்காவி பொட்டு-ஒயிலாயிட்டு
கத்தியும்பரிசை யீட்டி
கனத்தகேடயம் பூட்டி
வெற்றிதண்டையொலி கலகலென்றதிர
சித்திரரத்நமணி மண்டபமெதிராய் (திட்ட)

ஆக்கினைதப்பாமலனை வோரும்-நடக்காவிட்டால்
அக்கணத்திற்றெண்டனைகள் நேரும்-விகடசக்ரந்
தூக்கினவிரலிற்றுப்போம் பாரும்-என்றுமொழிந்து
தோரணவாசலுள்ள பேரும்-நடுநடுங்க
ஈக்கொசுபறக் கொட்டாமல்
இமைக்கண்கள் சிமிட்டாமல்
நோக்கமெய்பொழுது மன்னடிபோற்றி
ப்ராக்குவென்ன யெச்சரிக்கைசாற்றி (திட்ட)

மாடபொற்கோபுரவீதி மூட்ட-சிங்காரமாக
மகரதோரணங்கள்பல கட்ட-மணியிழைத்த
மேடையெங்கும்பேரிகைகள் கொட்ட-கொலுநடுவில்
வெண்டரளங்கள்ரத்நமிழைத் திட்ட-சிங்காதனத்தில்
கூடமு மலங்கரித்து
குங்குமம்பன் னீரிறைத்து
நாடனைத்தும்வெகு சம்பிரமமெய்திட
வாடையுற்றிட வலங்கிருதஞ்செய்திட (திட்ட)

கட்டியக்காரன் சொல் வசனம்

அகோதெப்படியென்றால் இந்தலோகத்தையெல்லாம் ஏகசக்கிராதிபதியாக ஆளப்பட்ட இராஜாதிராஜராஜபரமேஸ்வரனாகிய (இந்திரத்யும்மகாராஜன்) கொலுவுக்குவருகின்றார் ஆகையால்முப்பத்திரண்டுமேளவாத்தியங்களுமுழங்கி வைக்கவேணும் கொலுமண்டபத்தைச்சிங்காரிக்கவேணும் நட்டுமுட்டுநாடகசாலைகள் இதுகள்முழங்கத்தக்கதாகவும் எச்சரிக்கையாயிருங்கள் சபையாரே.

இந்திரத்யும்மகாராஜன் கொலுவுக்கு வருகிற

பொது விருத்தம்.

அரவணைத்துயில்வோனான அச்சுதன்கிருபையாலே
நிறைமதிகுலத்துவேந்த னிருபனுமிந்திரத்யும்மன்
பரவியவொருகுடைக்கீழ்ப் பைந்தமிழ்நாட்டையாள்வோன்
சிறமதாயரசரோடுஞ் சீர்கொலுமேவினானே

கட்டியக்காரன் சொல் வசனம்

அகோதெப்படியென்றால் தமிழ்நாடென்று சொல்லப்பட்ட பாண்டிய நாட்டையெல்லாம் ஏகசக்கிராதிபதியாய்ஆளப்பட்ட இந்திராயும்மபாண்டியமகாராஜன் தன்னுடைய ரத்திநகஜிதகொலுவுக்கு வருகிற விதங்காண்க.

இந்திரதூய்மமகாராஜன் வருகிற - தரு
இ-ம் - கலியாணி-சாபுதாளம்.

பல்லவி

இந்திரதூய்மமகாராஜன் வந்தானே-அதி
வீரசூரலக்ஷ திரவுதாரன்
இந்திரதூய்மமகாராஜன் வந்தானே

அநுபல்லவி

சந்திரகனகமகுட மிலங்கவும்
அய்யமலரிரு விழிகள்அலங்கவும்
மந்திரியிரு புறங்கள் குலுங்கவும்
மண்டபோர்மன்னர் கண்டுகலங்கவும்
மணிவச்சிர முந்தரளத்திர
ளணிவெற்பன நற்கொலுவிற்பன (இந்திர)

சரணங்கள்

தண்மைமந்திரிகள் சொலுவிற்கூடவும்
தவளச்சக்கரக்கொடை யருகில்நாடவும்
வெண்மைதிகழ்சாய் மரைகள்போடவும்
மெல்லியர்கள்சங் கீதம்பாடவும்
வெகுவக்ர மடங்கலந்ததனி
ஜெகசக்கிர மிடந்தொறுநற்புகழ் (இந்திர)

தேசமன்னர்கள் வந்துதுதிக்கவும்
தேவர்முனிவர்கள் கண்டுமதிக்கவும்
மாசிலாமனு நீதிவிதிக்கவும்
வளேந்திரதகஜ துரகங்கதிக்கவும்
மதசுந்தர குணவஜிரபதி
சுதாஞ்சித வரமிகுதயநிதி (இந்திர)

அஷ்டலட்சுமிவாச முறையவும்
அணிநெருங்கியவீர ரிறையவும்

வட்டமிகுரணபேரி யறையவும்
மகுடவர்த்தனர்வந்து நிறையவும்
வடவைக்கனலும் பொடிபடவிடு
சுடர்வெங்கணை யுஞ்சிலையுங்கொடு (இந்திர)

இந்திராய்ம மகாராசன-கடவுளைத் துதிசெய்கிற
போற்றி விருத்தம்.

※ வையகந்தனையளந்த வாமனருபாபோற்றி
தையலைமார்பில்வைத்த சாரங்கபாணிபோற்றி
செய்யமாதவர்கள்போற்றுஞ் சீதரமுகுந்தாபோற்றி
வையவென்னரசைக்காக்கும் பராபரப்பொருளேபோற்றி.

முதல்மந்திரி இந்திராய்மமகாராஜனுக்குச் சொல் விருத்தம்.

அம்புவியனைத்துமுந்த னாக்கினைப்படிநடாத்தி
துன்பங்களணுகொணுமற் றுய்யநற்றமிழ்நாடெல்லாம்
இன்பமாயாளுகின்ற யிறைவனேநின்பொற்பாதம்
நம்பினேனிந்திராய்ம ராஜனேபோற்றிபோற்றி

முதல்மந்திரி சொல் வசனம்.

தமிழ்நாட்டைப் பாலகாத்திரட்சிக்கும் இந்திராய்மமகாராஜனே சரணஞ் சரணஞ் சுவாமி.

இரண்டாவது மந்திரி-இந்திராய்மாராசனுக்குச் சொல்
போற்றி விருத்தம்.

※ மனுமுறைப்படிக்குநீதி மாறுமலரசியற்றுங்
கனிவுளபாண்டிநாட்டின் கர்த்தனேபோற்றிபோற்றி
தனியிலாஇந்திரலோகத் தலைவனும்புகழுகின்ற
தொனிமிகப்பெறுகுமிந்திர ராய்மராசேந்திராபோற்றி.

கட்டியக்காரன் இந்திராய்மமகாராஜனுக்குச் சொல்
போற்றி விருத்தம்.

அண்ணலேபோற்றிபோற்றி அம்புயபாதாபோற்றி
விண்ணவர்முனிவர்மெச்சும் வேந்தனேபோற்றிபோற்றி
எண்ணரும்புகழ்படைத்த யிறைவனேநின்பொற்பாதம்
நண்ணினேனடியேன்றன்னை ரட்சிப்பீர்போற்றிபோற்றி

கட்டியக்காரன் சொல் வசனம்.

இராஜாதிராஜ ராஜபரமேஸ்வரா ராஜமார்த்தாண்ட ராஜகெம்பீரா சரணஞ் சரணஞ் சுவாமி.

இந்திராய்மமகாராஜன் மந்திரிகளுக்குச் சொல் விருத்தம்

※ இந்தநற்கொலுவின்மேவி யெப்போதுநீதியோதும்
மந்திரிமாரோகேளீர் வளமையாய்நடனமாடும்

※ இக்குறியுள்ள விருத்தமும் சருக்கமும் இந்நாடகம் பார்வையிட்டவர் செய்தது.

சுந்தரமாதர் தம்மைச் சுருக்கினிலழைத்திப்போது
நந்தலில்சொலுவின் முன்னே நடனங்களாடச்செய்வீர்.

வசனம்

கேளீர்மந்திரிமார்களே நாம்பரதநாட்டியம் பார்க்கவேணும் ஆகையா
ல் நடனமாதரையழைத்து நடனஞ்செய்யச்சொல்வீர் மந்திரிமார்களே.

மந்திரிகள் சொல் வசனம்

அப்படியே செய்துவைக்கிறோம் மகாராசனே.

மந்திரிகள் கட்டியக்காரனுக்குச் சொல் விருத்தம்.

✻ அடரும்வெப்புலிபோலிந்த அணிமணிசொலுவில்மேவித்
திடமுறுங்கட்டியக்காரா சீக்கிரமாகச்சென்று
நடன்மாதரையழைத்து நவமணிசொலுமுன்பாகப்
படமெனப்பரதநாட்டியம் பாங்குடன்செய்ச்செய்வாயே

வசனம்

கேளாயப்பாகட்டியக்காரா நீசீக்கிரமாகச்சென்று நடனமாதரையழைத்
துவந்து நமதுராஜன் சொலுமுன்பாக பரதநாட்டியஞ் செய்யச்சொல்லுவாய்
கட்டியக்காரா.

கட்டியக்காரன் சொல் வசனம்.

இதோ ஒருநொடியிற்போய் அழைத்துவருகிறேனையா.

நடனமாதர் வருகிற பொது விருத்தம்.

✻ சுகமெனுமொழியார்கிதச் சுரும்பெனும்விழியார்சொற்கற்
பகமெனுங்கையார்முத்துப் பனிமணிமெய்யார்வேந்தர்
அகமெனும்பொருளைவாட்டி அடர்நயங்காட்டியாடி
ஜகமெனும்பரிசைவாங்குந் தையலர்வருகின்றாரே

கட்டியக்காரன் சொல் வசனம்.

அகோதெப்படியென்றால் இந்திரதுய்மமகாராஜன் சபைக்குநடனமாத
ர்கள் வருகிற விதங்காண்க.

——(✻)——

நடனப்பெண்கள் வருகிற-தரு
இ-ம்-அசாவேரி ஆதிதாளம்.

பல்லவி

நடனமாதர்களிதோவந்தார்- திரிபுவனமும்புகழ்நடன
நடனமாதர்களிதோவந்தார்

அநுபல்லவி.

கடல்முரசுள்ளகாமன் கழலேகிதம்பணிவோர்
கந்தகதம்பமெய்யிற் சந்தசமுமணிவோர்
கமழுவுநன்மலர்களைக் குழல்தனில்முடிப்போர்
குமரர்களொடுகாம நூல்தனைப்படிப்போர் (நட)

சரணங்கள்

கையிற்றம்பூருவீணை மீட்டி—சுரல்யநற்
கானந்தெரியயிசை பூட்டி
வையகமகிழத்தொனி நீட்டி—அபிநயங்கள்
மருவக்கண்முகங்கை காட்டி
தெய்தத்தித்தாமெனத் தேவமாதர்புகழ
தியானஞ்செய்முனிவருஞ் சிந்தைமிகமகிழ
சேர்ந்துநவரச தாளமுமொற்றிட்
வேந்தனிந்திரனாய்ம னுங்களிப்புற்றிட (நடன)

முத்துப்பணியணி துன்ன—இருக்ரத்தில்
மொய்க்கும்வளைகலக லென்ன
வொத்துச்சரப்பணிகள் மின்னமார்பினிற்
கோர்வைமணியாரம் பன்ன
சித்திரச்சரிகைச்சேலைத் திகழிடையிற்ஜொலிக்க
திலர்தப்பொட்டுநுதலிற் நீட்டிநற்ப்ரபலிக்க
திந்தத்திமிதத் திகுர்தத்திகுகண
தித்தளங்குதக ததிங்கணத்தோமென (நடன)

காலிற்சிறுசதங்கை மருவ—இருபுருவங்
கண்டளியினம் வெருவ
சீலமுனிவரிவர் பருவ—காலங்கண்டு
தெண்டனிட்டெதிர் வருவ
சாலத்தினில்மிகுந்த தனமிரண்டுங்குலுங்க
தாவள்யமானமுகஞ் சந்திரனெனத்துலங்க
தகுர்தச்செணுதத் திமிதக்கிடதக
தளங்குதகதிமி ததிங்கணத்தோமென (நடன)

கட்டியக்காரன்-நடனமாதர்களுக்குச்-சொல் வசனம்.

ஆ—ஆ—வாராய்நடனமாதர்களே நமது மகாராஜர் உத்தாரப்படி நீங்கள் நிருத்தசபையில்கீர்த்தனஞ்செய்வீர்மாதர்களே

நடனமாதர்-கட்டியக்காரனுக்குச்-சொல்வசனம்

தங்களுத்தாரப்படி—அப்படியே-கீர்த்தனஞ் செய்கிறேனையா.

நடனப்பெண்கள் நடனஞ்செய்கிற-தரு

இ-ம்-சாவளி- ஆதிதாளம்

பல்லவி

மகராஜதுரையே-அதிவீரசூர
மகராஜதுரையே
ஜெகதீசனே-பவநாசனே (மகராஜ)

அநுபல்லவி

சுக்ராஜராஜயிந்திர-தூய்மகெம்பீர (மகராஜ)

சரணங்கள்

மதிசேர்மதனு கதிர்சூழ்வதனு
அதிருபதீபப்பிர தாபசுந்தரா (மகராஜ)
சதுரங்கனே ரணசிங்கனே
மதபொங்கதுங்க அகிலங்கள்புகழு (மகராஜ)
கலைக்கியானனே நிலைஞானனே
சிலையேந்துந்தங்ககர மெங்கள்குலதெய்வ (மகராஜ)

நடனமாதர் இந்திரதூய்மமகாராஜனுக்குச் சொல்

போற்றி விருத்தம்.

❋ பன்மணிகொழித்திலங்கும் பாண்டியநாட்டையாளும்
மன்னவநீதியுண்மை வாய்ந்தவாபோற்றிபோற்றி
நன்மைசேர்தருமமெல்லாம் நடாத்திடவந்தசொன்ன
சொன்மறவாதயிந்திர தூய்மராஜேந்திராபோற்றி

இந்திரதூய்மமகாராஜன் மந்திரிகளுக்குச்சொல்

விருத்தம்

❋ ஒக்கவென்னருகிருந்து உண்மையாய்நீதிசொல்லத்
தக்கநன்மந்திரிமாரே சபைதனில்நடனஞ்செய்து
நிற்கின்றபெண்களுக்கிந் நிமிஷத்திற்பணிகளாடை
மிக்கநற்சொர்னந்தந்து மேன்மையாயனுப்புவீரே

வசனம்

கேளுங்கள் மந்திரிமார்களே நமதுகொலுமுன்பாக இப்போது நடனஞ் செய்தஇந்த மாதர்களுக்கு-மணி-பணி-ஆடை-சொர்னமுதலாகியதுங் கொடுத் தனுப்புவீர் மந்திரிமார்களே

மந்திரிகள் இந்திரதுய்மமகாராஜனுக்குச் சொல்
வசனம்

அப்படியே கொடுத்தனுப்புகிறோம் மகாராஜனே.

மந்திரிகள் கட்டியக்காரனுக்குச் சொல் விருத்தம்

* நீடியகொலுமுன்பாக நிற்கின்றகட்டியக்காரா
சோடிணையாகநின்று சொகுசுடனிர்த்தனங்கள்
ஆடியமாதருக்கு ஆடைபொன்மணியாரங்கள்
வேடிக்கையாகத்தந்து விரைவினிலனுப்புவாயே

வசனம்

கேளும்பிள்ளாய் கட்டியக்காரா நமதுமகாராஜனுத்தாரப்படிக்கு இந்த நடனமாதர்களுக்குவேண்டிய ஆடை-மணி-பணி-பொன்முதலானவைகள்கொடுத்தனுப்புவாய் கட்டியக்காரா.

கட்டியக்காரன் மந்திரிகளுக்குச் சொல் வசனம்

தங்களுத்தாரப்படி அப்படியே கொடுத்தனுப்புகிறேனையா

கட்டியக்காரன்-நடனமாதருக்குச் சொல் கவி

மணிபணியாடை மாலைபொன்றந்தேன்
கணிகையரோயுங்கள் கமழ்மனைசெல்வீர்

நடனமாதர் கட்டியக்காரனுக்குச் சொல் வசனம்

சரணஞ் சரணம் அப்படியே போய்வருகிறோமையா

இந்திரதுய்மராஜன் செய்-தேசவிசாரணை.
வினா-விடை-விருத்தம்.

இராசன்-கேட்கல்.

அந்தணர்வேள்விகள் சந்தியாவந்தனம்
அனுதினம்நேர்வாரோ

முதல்மந்திரி சொல்லல்

ஆகமநூல்முக்கால முணர்ந்தே
அருமறையோர்வாழி

இராசன் கேட்கல்

பந்தமாயன்பத்து ராசராசாக்களும்
பகுதிகள்தந்தாரோ

இரண்டாவது மந்திரி சொல்லல்

பாக்கியில்லாமல் ஆஸ்தானத்தில்
பகுதிசெலுத்தினரோ

இராசன் கேட்கல்

நாட்டினில்விளைவுவெள்ளாமைகள்நன்ருய்
நலமிகவுண்டோசொல்

முதல்மந்திரி சொல்லல்

நாதனேதிங்கள்மும்மாரிபொழிந்து
நாடுகள்சுகமையா

இராசன் கேட்கல்

தாஷ்டீகமாகவே குடிகளடங்கலும்
சம்பிரமமுண்டோசொல்

இரண்டாவது மந்திரி சொல்லல்

தயவுடன் ஆறிலொரு கடமைகள்தந்தே
சகலருமிகவாழி

இராசன் கேட்கல்

திடமுடன்வணிகர்கள்வர்த்தகம்நன்ருய்ச்
செய்துமிருத்தனரோ

முதல்மந்திரி சொல்லல்

திரவியலாபம் வர்த்தகமேலாய்ச்
செய்துகளித்தனரே

இராசன் கேட்கல்

படிகள்மரக்கால்திராசுபலக்கல்
பழுதிலாதுண்டோசொல்

இரண்டாவது மந்திரி சொல்லல்

பண்புடனின்முகா முத்திரைபதித்தோம்
பழுதுகளில்லையையா

இராசன் கேட்கல்

சேனைத்தலைவர்கள் ரதகசதுரகம்
க்ஷேமமுமிகவுண்டோ

முதல் மந்திரி சொல்லல்

திட்டமதாய்நின் கட்டளையதனும்
சீர்மிகபெற்ருரே

இராசன் கேட்கல்

தானதர்ம்மங்கள் பரவுபகாரந்
தரணியிலுண்டோமோ

இரண்டாவது மந்திரிசொல்லல்

தார்வளர்மார்பா நின்னருளாலே
தர்ம்மமுமென்மேலே

இராசன் கேட்கல்

ஆலயமெங்கும் பூசைநைவேத்யம்
அர்ச்சனைசெய்வாரோ

முதல் மந்திரி சொல்லல்

அர்ச்சனைபூசைக ளுச்சவம்நன்றாய்
அலங்கிர்தமாமையா

இராசன் கேட்கல்

சால்வேபுலிபசுவொருதுறைதனிலே
தண்ணீருண்டிடுதா

இரண்டாவது மந்திரி சொல்லல்

சக்கிரேஸ்வராவுனது சக்கரநெறிப்படி
தண்ணீருண்டுவருது

இந்திரதுய்ம மகாராஜன் கொலுவுக்குக்
குடிகள் வருகிற பொது விருத்தம்

* இட்டிடுபயிர்களெல்லா மெண்ணலில்மிருகத்தாலே
கெட்டிடுதென்றவார்த்தை கீர்த்திசேர்தமிழ்நன்னாட்டை
தொட்டினிதாளுமிந்திர துய்மராசேந்திரன்காதிற்
பட்டிடமொழிவதற்குப் பயிர்செய்வோர்வருகின்றாரே

கட்டியக்காரன் சொல் வசனம்

அகோதெப்படியென்றால் இந்திரதுய்மமகாராசன் கொலுவுக்கு அத்தேசத்தில்வாழும் குடிகள்யாவருங்கூடி தாங்களிடப்பட்ட பயிர்கள் பலவிதமிர்கங்களால் சேதமாகின்றதைச் சொல்லும்படியாய்வருகிறவிதங்காண்க

பயிர்செய் குடிகள் வருகிற தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்

பல்லவி

பயிரிடும்வனமெல்லாமறிந்த
பலத்தகுடிகள்நாங்களே

அநுபல்லவி

மயிர் நுழையாமல் வேலியடைப்போம்
மாட்டைகன்றைக்கொல்லைக் குள்ளேயடைப்போம்
தைரியத்துடன் தாள்போரடிப்போம்
தானியத்தைத்தள்ளி பதரைக்களைப்போம் (பயிரிடு)

சரணங்கள்

களர்நிலத்திலே கட்டிவிழுகுவோம்
காசுபணம்வந்தால் முட்டியழுவோம்
நழுவுங்கரம்பினில் விரைபிடிப்போம்
நாத்துநட்டபின்பு பரம்படிப்போம் (பயிரிடு)

சின்னச்சம்பாவுடன் கார்விரைப்போம் பயிர்
தீஞ்சிப்போனபிறகு தண்ணீரிரைப்போம்
முன்னைப்படலோட்டிப் பின்னைவிரைப்போம்
மூறிவிளைந்தபின் களைபறிப்போம் (பயிரிடு)

வெங்காயஞ்சாடாவும் வெட்டிக்கொடுப்போம்
மேல்வாரந்தாளெல்லாங் கட்டியெடுப்போம்
பங்காளியாலுபேர் பசவானுக்கொப்பாய்
பயிர்வழியேகொள்ளை கொண்டார்களப்பா (பயிரிடு)

குடிகள் இந்திரதுய்ம மகாராசனுக்குச் சொல்

போற்றி விருத்தம்.

* தராதலந்தன்னைக்காக்குந் தார்புயமன்னா போற்றி
சராசரப்பொருளைக்காட்டுந் தனிமதிகுலத்தோய் போற்றி
நிராமயக்கடவுள்தன்னை நிதந்துதிப்பவரே போற்றி
அராதுரைபுகழுமிந்திர துய்மராசேந்திரா போற்றி

மந்திரி குடிகளுக்குச் சொல் விருத்தம்

பயிரிடுங்குடிகள்கேளீர் பாரில்மும்மாரிபெய்து
கயல்களுங்குளங்கள்கால்வாய் கனத்தநீர்பெருகியெங்கும்
வயல்களிற்செந்நெலோங்கி வண்மைசேர்விளைவுநன்றாய்
இயல்பதாய்வாழ்வதுண்டோ யெந்தனுக்குரைசெய்வீரே

வசனம்

கேளுங்கள் குடிகளே நீங்கள் குறைவில்லாமல் சந்தோஷமாகவாழ்க்கைசெய்கின்றீர்களா சொல்லுவீர் குடிகளே

குடிகள் இந்திரதுய்ம மகாராசனுக்குச் சொல்

விருத்தம்

மன்னனின்கிருபையாலே மாதமும்மாரிபெய்து
கன்னலின்வயல்கள்சூழுங் கழனியெல்லாம்விளையாயும்
வன்னசங்கினங்கள்மேவு மணிகளைகொழிக்குமோக்குஞ்
சென்னலுமதிகமாகுந் தேவனேவந்துபாரீர்

வசனம்

சரணஞ் சரணமகாராசனே தேவரீருடைய கிருபா கடாட்சத்தினாலே மாதமும்மாரிபொழிந்து பயிர்விளைவுகள் மிகுதியாய்த்தானேயிருக்கின்றது சந்தோஷந்தான் ஆனாலெங்களுக்கு ஒருகுறைவு உண்டாயிருக்கின்றது மகாராசனே

இந்திரதுய்ம மகாராசன் சொல் வசனம்

அந்தக்குறையென்ன நன்றாய்த்தெரியச்சொல்லுங்கள் குடிகளே

குடிகள்-இந்திரதுய்ம மகாராஜனுக்குச்

சொல் விருத்தம்.

மாநகர்தமிழ்நாடெல்லாம் வண்மையாயாண்டதிரா
மேன்மையாயிதுவரைக்கும் வேறொருகுறைவுமில்லை
கானகமிருகத்தாலே கதிர்பயிர்பலன்களீவ
தானதுவேணசேத மதனைநீர்வந்துபாரீர்.

வசனம்.

கேளும் மகாராஜனே, காட்டில் வாழப்பட்ட மான்-பன்றி-புலி-கரடி-முயல் முதலாகிய மிருகக்கூட்டங்கள் வந்து நாங்களிடப்பட்ட பயிர் விளைவுகளெல்லாவற்றையுஞ் சேதப்படுத்தி மனிதர்களையுஞ் சேதப்படுத்திவைக்கின்றது, அதனைத் தாங்களே வந்துபாரும் மகாராஜனே.

இந்திரதுய்மமகாராஜன் மந்திரிகளுக்குச்

சொல் விருத்தம்.

அறிவினில்மிகுதியான அன்புள்ளமந்திரிமாரே
எறிதிரைகடல்சூழ் நாட்டிலேகமாய்மிருகங்கூடித்
தறிபடவிளைச்சலெல்லாஞ் சாடுதென்றுரைசெய்கின்றார்
குறிஞ்சிநிலத்துவேடக் கூட்டத்தையழைப்பிப்பீரோ.

வசனம்.

கேளுங்கள் மந்திரிமாரே, நம்முடையகுறிஞ்சிநிலத்தில் வாழப்பட்டாநின்ற வேடக்கூட்டங்களை அதிசீக்கிரத்தில் வரச்செய்வீர் மந்திரிகளே.

மந்திரிகள் சொல் வசனம்.

அப்படியே இதோ அழைப்பிக்கிறோம் மகாராஜனே.

மந்திரி கட்டியக்காரனுக்குச் சொல் விருத்தம்.

* நீடரசர்களும்வந்து நிறைந்தவிக்கொலுவிற்கத்தி
கேடயங்கரத்திற்கொண்டு கிளர்க்கும்வெற்புலியைப் போலச்
சோடசகலைகள்கற்றச் சுந்தரகட்டியக்காரா
வேடரையழைத்துநீகொண்டு விரைவினில்வருகுவாயே.

வசனம்.

கேளாய் கட்டியக்காரா, நீ சீக்கிரமாகப் போய் குறிஞ்சிநிலத்து வேடக் கூட்டங்களை அழைத்துவருவாய் கட்டியக்காரா.

கட்டியக்காரன் சொல் வசனம்.

அப்படியே இதோ சென்று அழைத்துவருகிறேனையா.

கட்டியக்காரன் வேடர் தலைவனுக்குச்

சொல் விருத்தம்.

* வில்லியர்தலைவாகேளிம் மேதினியாள்நம்மன்னன்
சொல்லியப்படியேயீட்டி சுரிகைவில்லம்புசிக்கம்
பல்லியஞ்சிவிங்கியோடும் பரிவுடனீங்களெல்லாந்
துல்லியகொலுவுக்கிப்போ சுருக்கினிலோடிவாரீர்.

வசனம்.

கேளாய் குறிஞ்சிநிலத்து வேடர்கள் தலைவா, நமது மகாராஜன் உத்தாரப்படிக்கு ஈட்டி-கத்தி-வில்லு-அம்பு-எறிவலை-பல்லியமுதலாகிய ஆயுதத்துடன் வேட்டைநாயையும் உன்னுடன் சேர்ந்தவர்களையுஞ் சீக்கிரங்கூட்டிக்கொண்டு வருவாய் வில்லியர்தலைவா.

வேடர்தலைவன் சொல்வசனம்.

அப்படியே வருகிறோமையா,

வேடர்கள்வருகிற பொதுவிருத்தம்.

* சிரத்திற்றோல்குல்லாய்பூண்டு சிதைத்திடும்வில்லுமம்புங்
கரத்தினிற்கொண்டுசிக்கங் கக்கத்திலிடுக்கிமேலாம்
பரத்தினையுளந்துதித்துப் பரிவுடன்வேடர்கூடி
வரத்தினேரிந்த்ரதுய்ம மன்னன்முன்வருகின்றாரே.

கட்டியக்காரன் சொல் வசனம்.

அகோதெப்படியென்றால், இந்திரதுய்மமகாராஜன் கொலுவுக்கு வேடக் கூட்டங்கள் வருகிறவிதங்காண்க,

வேடர்கள் வருகிற ஓரடி-தரு.
இ-ம் - பூரிகலியாணி - ஆதிதாளம்.
பல்லவி.

காட்டுவேடரும் நாட்டுவேடரும் கூடிவந்தாரே.
அநுபல்லவி.

கூட்டங்கூட்டமாய் நாய்களைக் கூட்டி
கொக்குப்பறவையைச் சிக்கத்தில் மாட்டி (காட்டு)
சரணம்.

தலையிலேகட்டுகாடையிறகுகள் தளதளென்னவே
சங்குமணிக்கோர்வை தாவடங்கழுத்தி லெங்குமின்னவே
வலையைத்தூக்கித்தோளிலேத்தி வருத்தங்கொள்ளவே
மானுக்கலைகுட்டிகள்தாவிப்புவிதனி லோங்கித்துள்ளவே
சிலையுமம்புஞ் சேரப்பிடித்து
செவ்வல்லிக்கிழங்கை வாயிற்கடித்து
மலைகெல்லுஞ்செட்டைப் பாறைதூக்கி
வரிசைவரிசையாய் மாநகர்நோக்கி (காட்டு)

வேடர்கள் இந்திரதுய்மமகாராசனுக்குச் சொல்
போற்றிவிருத்தம்.

மணிமுடிசிரசிற்பூண்டிவ் வையகமொருகொடைக்கீழ்
திணிபெறவெவருமெச்சச் செங்கோலினைச்செலுத்தி
தணிவுடனுலங்காக்குஞ் சத்தியவானேமிக்க
அணிபெறுமிந்திரதுய்ம அண்ணலேபோற்றிபோற்றி.

இந்திரதுய்மமகாராசன் மந்திரிகளுக்குச்
சொல் வசனம்.

கேளுங்கள் மந்திரிகளே, நம்முடைய பாளையத்திலிருக்கப்பட்ட ரணவீரர்கள்-சூரர்கள்-மல்லர்கள்-இரதகஜதுரகபதாதிகளையும் பிரயாணப்படுத்தி நீங்களுங்கூடப் புறப்படுங்கள் மந்திரிகளே.

மந்திரிகள் சொல்வசனம்.

அப்படியே போவோம் வருவீர் மகாராஜனே.

இந்திரதுய்மராஜன்-வேட்டையாடுகிற ஓரடிதரு.
இ-ம்-புந்நாகவராளி-ஆதிதாளம்.
பல்லவி.

வனவேட்டையாடுவோம் பாரீர்
வீரர்களே-ஜெய-சூரர்களே
வனவேட்டையாடுவோம் வாரீர்

அநுபல்லவி

வனவேட்டையாடுவோம் வாரீர்
மதகரி வேங்கைபுலி
கனமாயாளி சிங்கம்
கண்டித்துடல்பட — துண்டித்ததுகெட (வனவேட்டை)

சரணம்.

வேங்கைப் புலிபன்றிமேல் — வேகமாய்ப் பாயுததோ
வெருவிமான் கூட்டமெல்லாஞ் — செடியில்நுழையுதிதோ
வாங்கிவேல் கொண்டதின்மே — லோங்கியெறிந்துயிரை
வாட்டித்தூள் தூளியாயிட
மாட்டிச் சிலதொழில்
காட்டிப்புன் மதில் (வனவேட்டை)

இந்திரதூய்மராசன் மந்திரிக ளுக்குச்
சொல் — விருத்தம்.

என்னுயிர்த்தோழரான — யின்பமந்திரிகாள் கேளீர்
மன்னுகானகத்திற்காதை — வந்து வந்தடைக்குதையோ
பின்னும்வாய்க் கால்களெல்லாம் — புனல்தனையெங்குங்காணோம்
இன்னிலந்தண்ணீற்றண்ணீ — ரொனக்குமுன்கொண்டுவாரீர்

வசனம்.

கேளுங்கள் மந்திரிமார்களே இந்தக்கானகத்தில் வெகுதூரம்வந்து வேட்டையாடி மிகவுஞ் சலித்து எனக்கு ஆயாசமாகிக் காதடைக்கின்றது ஒரு நொடிக்குள் ஜலங்கொண்டு வருவீர் மந்திரிமார்களே.

மந்திரிகள் இந்திரதூய்ம ராசனுக்குச்
சொல் விருத்தம்

அரசனேபோற்றிபோற்றி அடர்ந்தகானகத்தினேராய்
வரையெனுஞ்சோலைச்சாரல் வடமுகத்தருகேபொய்கை
நிறைபுனலதனைச்சூழ்ந்த நிகழ்மணக்முகுஞ்சோலைத்
திறமுடனிருக்குதையா தேவரீர்வந்துபாரீர்

வசனம்.

சரணஞ்சரண மகாராசனேஇதோயிந்த அடவிக்குநேராய் தெரியப்பட்ட சோலைமாமுகச்சாரல் வடமுகத்தில் மகாநல்லசிங்காரமான வேடிக்கைகளும் தடாகமுமிருக்கின்றது அவ்விடத்திற்குப்போய்தீர்த்தபானஞ்செய்து அந்தசிங்கார வனத்தில் சற்றுநேரம் இளப்பாறி வெய்யல்கழிந்தவுடன் நமது பட்டணத்திற்குப் போகலாம் வாரீர்சுவாமி.

அ

இந்திரதுய்மராசன் சொல்வசனம்.

ஆறுற்போவோம் வருவீர் மந்திரிமார்களே.

இந்திரதுய்மராசன் மந்திரிகளுக்குச்

சொல் விருத்தம்.

பூசனையென்செய்தேனே புண்ணியதீர்த்தங்கண்டேன்
வாசனை சமுகுந்திவ்ய மலர்கள்செங்கமலநீலம்
நேசமாயன்னப்பக்ஷி நிறைந்தவாவியைப்போல்நீங்கள்
தேசத்திற்கண்டதுண்டோ செப்புவீர்மந்திரிமாரே.

வசனம்

கேளுங்கள் மந்திரிமார்களே இப்பேர்க்கொத்த தடாகத்தை எவ்விடத்திலாவது கண்டதுண்டோ சொல்லுங்கள் மந்திரிமார்களே.

மந்திரிகள்சொல் வசனம்

நாங்கள் எங்கினுங்கண்டதில்லை மகாராசனே.

இந்திரதுய்மராசன் சொல்வசனம்.

ஆ ஆ மந்திரிமார்களே இந்தசிங்காரவனத்தில் சற்று நேரம் இளைப்பாறுவோம் மந்திரிமார்களே.

மந்திரிகள்சொல்வசனம்.

அப்படியேசெய்யலாமகாராசனே.

சூதமகாரிஷி வருகிறபொதுவிருத்தம்.

சதுர்மறைப்பொருளுமாறு சாஸ்திரந்தொண்ணூற்றாறுங்
கதிர்பெறுதத்துவங்கள் கலையறுபத்துநான்கும்
அதிகமாயன்பத்தோரட் சரமுதல்யாவுந்தேர்ந்து
துதிபவுத்திராய்நின்ற சூதமாரிஷிவந்தாரே.

கட்டியக்காரன் சொல்வசனம்

அதேதெப்படியென்றால் வேதசாஸ்திரமுதலாகிய கலைக்கியானங்களுந்தேர்ந்து சுத்தபவுத்திராய் விளங்கியிராநின்ற சூதமகாமுனிவர் இந்திரதுய்ம மகாராஜனிடம் வருகிறவிதங்காண்க,

சூதமகாரிஷிவருகிற தரு - இ-ம்-புன்னாகவராளி - ஆதிதாளம்.

பல்லவி.

சூதர்வந்தாரே-மகாரிஷி-சூதர்வந்தாரே

அநுபல்லவி,

பூதலந்தன்னிற்றவம் புரியமனதி லெண்ணி
காதலுடனடர்ந்து கருத்தில்மெய்ஞ்ஞானநண்ணி (சூதர்)

சரணங்கள்,

அண்டர்முனிவோரும் - மனமகிழ்ந்து
கண்டுபணி வாரும் - கரந்தனில்
தெண்டுகமண்டலமுந் - தியங்குமாய்கைக்கட்டற்று
குண்டலங்குழைகளுங் - குலுங்கநடை நடந்து (சூதர்)

காலமுன்றுணர்ந்தோர் - மரவுரி
மேலெல்லாமணிந்தோர் - இவர்நல்ல
மூலவேள்விகளெல்லா - முடிப்பதற்குச்சமர்த்தர்
சீலவேதபுராணர் - தேர்ந்தமெய்ஞ்ஞான கர்த்தர் (சூதர்)

மந்திர வுபதேசம் - இவர்மனதில்
எந்நாளும் வாசம் - திவ்விய
செந்தமிழ் நாட்டைநண்ணி - சிந்தைமிகக்களிக்க
வந்தனரன்புடனே - இந்திரதுய்மன் பக்கல் (சூதர்)

சூதர் - கட்டியக்காரனுக்குச் - சொல் வசனம்.

கேளும்பிள்ளாய் கட்டியக்காரா - எந்த்தேசத்து இராசனிடத்திலிருக்கப் பட்டவர்கள் - இவ்விடத்தில்சேனசமுத்திரத்துடனே வந்துபாளயமிறங்கியிருக்கிறதேது சொல்லும் பிள்ளாய் கட்டியக்காரா.

கட்டியக்காரன் - சூதமகாரிஷிக்குச்சொல் - வசனம்

கேளுஞ் சுவாமி - பாண்டியநாட்டை ஏகசக்கிரேஸ்வரனாக - அரசாளப் பட்ட இந்திர துய்மமகாராஜன் தன்மந்திரி பிரதானிகளுடன் வேட்டையாடி இந்தச்சிங்கார வனத்தில் வந்திறங்கியிருக்கிறார் சுவாமி,

சூதமகாரிஷி - கட்டியக்காரனுக்குச் சொல் வசனம்

ஆ - ஆ - நல்லதாயிற்று - சூதமகாரிஷி வந்திருக்கிறாரென்று உங்களரசனிடத்திற்போய்சொல்லும்பிள்ளாய் கட்டியக்காரா.

கட்டியக்காரன் - சொல் வசனம்,

இதோபோய் தெரிவிக்கிறேன் சுவாமி

கட்டியக்காரன் - இந்திரதுய்ம ராஜனுக்குச் சொல் வசனம்,

இராஜாதிராஜ ராஜபரமேஸ்வரரேகேளும் சூதமகாரிஷிவந்திருக்கின்றார்சுவாமி.

இந்திரதுய்ம ராசன்மந்திரிகளுக்குச்
சொல்வசனம்.

கேளுங்கள் மந்திரிமார்களே சூதமகாரிஷி வந்திருக்கின்றாராம்நாம் எதிர்கொண்டுபோய் சேவித்துக்கொள்ளுவோம் வாருங்கள் மந்திரிமார்களே.

மந்திரிகள் சொல் வசனம்.

தேவரீருத்தாரப்படிக்கு அப்படியேசெய்யலா மகாராஜனே.

இந்திரதுய்மராசன் - சூதமகாரிஷிக்குச்
சொல்-போற்றி கவி.

காலமூன்றுணர்ந்த கர்த்தனே போற்றி
சீலமெய்ஞ்ஞானந்-தெளிந்தவாபோற்றி
சாலநான்மறைக்குர்-தலைவனேபோற்றி
ஞாலமேபுகழ்சூத-நாதரே போற்றி.

இந்திரதுய் மராஜன் சொல் வசனம்.

சரணஞ் சரணஞ் சுவாமி முனிநாதரே,

சூதமகாரிஷி-இந்திரதுய்மராசனுக்குச்சொல்
வாழி-கவி.

பாண்டியநாட்டரசைப் பரிவுடனின்கை
நீண்டசெங்கோலும்-நிதநிதம் வாழி
வேண்டியகொடைதரும் வேந்தனே வாழி
ஆண்டுலகளித்த வரசனே வாழி.

வசனம்.

சிரஞ்சீவி-சிரஞ்சீவி - சுகிபவா-சுகிபவா எழுந்திருமகாராசனே.

இந்திரதுய்மராசன் சொல் வசனம்.

சிம்மாதனத்திற்கு எழுந்தருளிவரவேணுஞ் சுவாமி

சூதமகாரிஷி-சோல் வசனம்.

அப்படியேபொவோம் வருவீர் மகாராசனே.

பொது விருத்தம்;

வாசலிற்சூதர் வந்த- வசனத்தைக் கேட்டுமன்னன்
பூசனையென்செய்தேனோ-புண்ணியம் பலித்ததென்று
பாசமாயெதிர்சென்றோடிப்- பரிவுடனழைத்துவந்து
ஆசனந்தனில்யிருத்தி யடிபணிந்துரைப்பதானான்

இந்திரதுய்மராஜன் - சூதமகாரிஷிக்குச்

சொல் விருத்தம்.

சுத்தமெய்ஞ்ஞானம்பூண்ட சூதரேசொல்லக்கேளீர்
எத்தலத்திருந்துவாரீ - ரிவ்விடம்வர்தபோதே
சத்தியாய்நான்முன்செய்த தவப்பலன்பலித்ததையா
முத்தனேயெனக்குநன்றாய் மொழிந்திடீர்மொழிந்திடீரே.

வசனம்,

கேளுஞ்சுவாமி முனிநாதரே - தேவரீர் இவ்விடம்வர நானென்னபாக்கியத்தைப்பெற்றேன் தேவரீர் எவ்விடமிருந்து வருகிறீர் - அடியேனுக்கு அருளிச்செய்யவேணுஞ் சுவாமி.

சூதமகாரிஷி - இந்திரதுய்மராசனுக்குச்

சொல் - விருத்தம்.

எதிரிலாகீர்த்திபெற்ற யிந்திரதுய்மனேகேளும்
கதிபெறமனதிலெண்ணிக் - காயங்கள்சுத்தியாக
நதிபலமூழ்கிச்சென்று நற்புவிதனில்மிகுந்த
பொதியமாமலையின்சாரற் போயிருந்திவடம்வந்தேன்,

வசனம்.

கேளும்இந்திரதுய்மமகாராசனே காயசுத்தியாகத்தக்கதாக இந்தப்பூலோகங்களில் நல்ல புண்ணியதீர்த்தமாடி பொதியமாமலைச்சாரலுக்குப் போய் அகஸ்தியமாமுனிவரைக்கண்டு வணங்கி அவரிடத்தில் சிலநாள்வாசமாயிருந்து இதுமார்க்கமாய்வந்து உம்மைக்கண்டு வார்த்தைசொல்லிப் பிறகு தெய்வலோகம்போகலாமென்றுவந்தேன் மகாராசனே,

இந்திரதுய்மராஜன் சூதமகாரிஷிக்குச்

சொல் விருத்தம்

அம்புவியாண்டாலென்ன அரசில்வீற்றிருந்தாலென்ன
இன்பமாமுத்திமோக்ஷ மெய்திடவகையுங்காணேன்
நம்பினேனுந்தன்பாதம் நாடியேனீடேறச்
சம்பிரமுடனேதேவர் சாற்றுவீர்சாற்றுவீரோ

வசனம்.

கேளுஞ்சுவாமி முனிநாதரே அடியேனிந்தபூலோகமெல்லாம் ஒருகொடையின்கீழ்ஆண்டாலென்ன, அநேகங்கோடிசெல்வத்தைப் பெற்றாலென்ன அடியேன்காயசுத்தியாய் முத்திமோக்ஷம்பெறும்படி யானவகையறியாமல் சமுசார

வாழ்க்கையில் மூழ்கியிருக்கிறேன் நாயேன்கடைத்தேறும்படிக்கு உபதேசமருளிச்செய்து இரட்சிக்கவேணுஞ்சுவாமி.

சூதமகாரிஷி இந்திரதுய்ம ராசனுக்குச்
சொல்விருத்தம்.

திருமாலுக்கடிமைசெய்தால் தீவினையகலுமென்று
பரிவாகவேதந்தன்னிற் பகர்வதுகண்டோம்நாமும்
ஒருநாலுமுகத்தோனிந்திர னும்பர்கள்முனிவரோதும்
அரிஓமென்றக்கரத்தி லமர்ந்ததுஜோதிதானே.

வசனம்

சேருமகாராசனே சாட்சாத்காரகடவுளாகிய நீலமேகச் சாமளரூபம் பொருந்திய ஸ்ரீமந்நாராயணமூர்த்தியினுடைய பாதாரவிந்தத்தைப் பூசைசெய்தால்சகலகற்மங்களும் விட்டுநீங்கி முத்திமோக்ஷம் பெறலாமென்று வேதசாத்திரத்தில் சொல்லியிருப்பதால் தேவர்கள் தேவேந்திரன் பிரம்மாமுதலாகிய பேரும் பரப்பிர்மமூர்த்தியாகிய அந்த ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின் பாதாரவிந்தத்தைப் பூசைசெய்துமுத்திமோக்ஷவீட்டை யடைந்திருக்கின்றார்களே யல்லாமல் வேறில்லை ஆகையால் அஷ்டாக்ஷரப் பொருளாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தியை மூலாதாரச்சோதியென்றும் அறியவேண்டியது மகாராஜனே.

இதுவும்-சூதமகாரிஷி-இந்திரதுய்ம ராசனுக்குச்
சொல்-விருத்தம்.

வாரிதிசூழ்வையகத்தின வேதாக
வளர்நகரமொன்றதைச்சூழ்பலவூருண்டு
பார்தனிலேயவ்வூரின்வழிகளெல்லாம்
பண்புடையநகர்நடுவிற்சாருமாப்போல்
பேர்பெரியபலதெய்வமிருந்திட்டாலும்
பிரம்மமெனுமூலாதாரத்திற்சேரும்
சீருயர்மணிவிளக்கநேகமுண்டு
செழுஞ்சுடரினொளியெல்லாமொன்றுதானே.

வசனம்.

சத்தசமுத்திரஞ்சூழ்ந்த இந்தப் பூலோகத்தினடுமத்தியில் வளப்பம்பொருந்திய பலமான ஒருபட்டணத்தைச் சூழ்ந்து பலபலவூர் இருந்தபோதிலும் அந்த பலவூரின்வழிகளெல்லாங்கூடி பட்டணத்தினடுமத்தியில் ஒன்றாகச்சாருமேயல்லாமல் வேறில்லை, இதுவுமன்றிப் பூமியில் அநேகங்கோடிதீர்த்தங்கள்நிறை

ந்திருந்நிலும் ஜோதிமயமாய் விளங்கியிராநின்ற சுடரொளியொன்றேயல்லாம ல் வேறில்லை, ஆகையால் அநேகமாயிரம் தெய்வங்களுக்குப் பேர் வெவ்வேறே யிருப்பதினால் அதிற்சிலதுபெரிய தெய்வமென்றும் சிலதுசிறியதெய்வமென்று ம் மயக்கந்தோன்றியிருக்கிறதேயல்லாமல் — பரப்பிரமமாகிய மூலாதாரத்தின்வ ழிச்சகலமும் ஒன்றாய்ச்சார்ந்திருக்கும் இன்னமுஞ்சொல்லுகிறேன்கேளும்மகாரா சனே.

இதுவும்சூதமகாரிஷி — சொல் விருத்தம்

அரியென்றுஞ்சிவனென்றும் பிரமனென்றும்
ஆறுமுகவேலனென்று மிந்திரனென்றும்
பரிவான அறுசமயதெய்வ மென்றும்
பண்புடையமுனிவரென்றுந் தேவரென்றும்
விரிவானயின்னம் வெகுபலபேராக்கி
மேதினியில்மனிதரெல்லா மயங்கிவீழ்வார்
கருஞ்சினமாயோங்காரத் தமர்ந்தமூல
காரணனைநாரணனைக் கருத்திற்கொள்ளே

வசனம்

அரியென்றும், சிவனென்றும், பிரமனென்றும், வேலாயுதமூர்த்திவெ ன்றும்' தேவேந்திரனென்றும், அறுசமயதெய்வமென்றும், முனிவர்களென்றும் தேவகணங்களென்றும், இப்படிக்கெல்லாம் பலபலவிதமாய்ப் பேர்களுண்டுபெ ண்ணியிருப்பதைக்குறித்து பூலோகங்களில்வாழுமனிதர்கள் எந்தவழியுந்தெரி யாமல் மயங்கி நிலைதப்பிப்போகிறார்கள். ஆகையால் இப்போதுசொல்லிய பல பல தெய்வங்களுடையபேர்மாத்திரம் வேறுபடுமேயல்லாமல் வேறல்ல, ஆகை யாலிவைகளெல்லாம் ஒன்றாய்ச்சார்ந்துஜோதிமயமாய் மூலாதாரத்தின்வழியை க்கூடிவீற்றிராநின்ற ஸ்ரீமந்நாராயணமூர்த்தியாகிய தெய்வம் ஒன்றேயென்று உன்கருத்திற்கொள்ளுவாய் மகாராசனே.

இதுவும் — சூதமகாரிஷி சொல் விருத்தம்.

உனக்கறிவித்தோமிந்த வுபதேசமறந்திடாமல்
புனைத்துழாய்மாலைமார்பன் பொன்னடிகமலந்தன்னைக்
கனக்கவேபூசைசெய்து கருத்தினிற்றுதிப்பாயாகில்
மனக்குறையெல்காந்தீர்ந்து வாழலாம்பதவிதானே.

வசனம்

கேளும் இந்திரதூய்மமகாராசனே இந்தப்பராபரவஸ்துவினுடைய நிர்ணயம் உனக்குத்தெரியும்படிக்கு உபதேசஞ்செய்தோம் இதைமறவாமல் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின் பாதாரவிந்தத்தை மூன்றுகாலமுந்தப்பாமல் பூசைசெய்துவருவாயேயாகில் சகலகற்மவினைகளெல்லாந்தீர்ந்து முத்திமோக்ஷவீட்டைச்சேர்ந்துவாழுவாமகாராசனே.

இந்திரதூய்மராசன் சொல் வசனம்.

அப்படியே ஸ்ரீமந்நாராயணர்பாதாரவிந்தத்தைப் பூசைசெய்துவருகிறேன்சுவாமி.

சூதமகாரிஷி சொல்வசனம்.

நாம்வந்துவெகுநேரமாச்சுது நாம்தெய்வலோகத்திற்குப் போய்வரவேணும் செலவுதருவாய் இந்திரதூய்மமகாராசனே.

இந்திரதூய்மராசன் சொல்வசனம்.

அப்படியேபோய்வருவீர்சுவாமிசூதமகாமுனிவரே.

இந்திரதூய்மராசன்-மந்திரிகளுக்குச்சொல் வசனம்.

கேளுங்கள் மந்திரிகளே-நம்முடையபட்டணம் போவோம் வாருங்கள் மந்திரிகளே.

மந்திரிகள் சொல் வசனம்.

அப்படியே வருவீர் மகாராஜனே.

இந்திரதூய்மராஜன் சொல்லில் வந்து,

மந்திரிகளுக்குச் சொல் விருத்தம்.

அமைச்சரேசூதர்தாமு மருளியமொழிப்படிக்கு
நமக்கொரு குறைவுமில்லை-நாட்டினிலாலயங்களை
தமக்குநேர்பூசைவேழ்வி-சம்பிரமஞ்செய்யவென்று
எமக்குமுன்முரசுசாற்றி யிம்புவீர்நொடியிற்றானே

வசனம்

நீதிமிகுந்த மந்திரிமார்களேகேளீர் நமக்குச்சூதமகாரிஷிஅருளிச்செய்தபடிக்குநாம்நடந்தோமேயாகில் நமக்கொருகுறைவும் வரமாட்டாது-மேலும்நம்முடையபாண்டியதேசத்தி லுண்டாயிருக்கப்பட்ட தேவாலயம்-பிரம்பாலயம் சகலஆலயங்களும் பழுதில்லாமல்திருப்பணிமுதலாகியவேலைகளுஞ்செய்துவைத்துமூன்றுகாலமுங் குறைவில்லாமல்-பூஜை-நைவேத்தியம்-ஒக்கியாதி முதலாகியதும்சம்பிரமமாய்நடக்கும் படிக்குத்தண்டோராபோடச்செய்வீர்மந்திரிகளே

மந்திரிகள் சொல் வசனம்.

அப்படியேசெய்து வைக்கிறோமகாராஜனே.

மந்திரிகள் கட்டியக்காரனுக்குச்

சொல் கவி.

கட்டியக்காரா கனமுரசறையும்
வெட்டியானை விரைவினிலழைப்பாய்.

கட்டியக்காரன் சொல் வசனம்.

இதோ அழைத்துவருகிறேனையா.

கட்டியக்காரன் வீரஜாம்புவுக்குச்

சொல்விருத்தம்

அட்டாவீரஜாம்பு அதிகமோகள்மயக்கம்
விட்டாசோம்பற்றனத்தை மேலேகம்பளியைப்போட்டு
எட்டாதமுக்கைகீயு மிடையினில்வரிந்துகட்டி
நட்டாயிந்திரனாய்ம ராஜனற்சபைக்குப்போதே

வசனம்

அடாவாடா வீரஜாம்பு (என்னுச்சாமி) அடாமட்டுமிதமில்லாத வெள்ளையானக்கள்ளைக்குடித்து தள்ளாடிவிழுகிறுயென்னடா தகடிமகனே.

வீரஜாம்பு சொல்வசனம்

அதெல்லாம் இக்கட்டுஞ்சாமி நீங்கயிங்கே எங்கேவந்தேசாமி:

கட்டியக்காரன் சொல்வசனம்.

அடா நீ தமுக்கையெடுத்துக்கொண்டு நமது மகாராஜன் கொலுவுக்குச் சீக்கிரம் ஓடிவாடா,

வீரஜாம்பு சொல்வசனம்.

அதெல்லாம் கிஞ்சிபோச்சாண்டே.

கட்டியக்காரன் வசனம்

என்னடாகிழிஞ்சுபோனது சொல்லடா

வீரஜாம்பு வசனம்

குமுக்கு குமுக்கென்னுதே அந்த தமுக்குஆண்டே

கட்டியக்காரன் வசனம்.

அடாதோட்டித்தாயோழி பாசாக்குபோட்டுக்கொண்டா திரிகிறாய் உன்னைச்சேரியைவிட்டு ஓட்டிவிடுகிறேன் ஆகட்டும் பறத்தாயோழி.

வீரஜாம்புவசனம்

அந்தசெல்லிமுண்டை எனக்குவாக்கலையே ஆண்டே.

கட்டியக்காரன் வசனம்.

என்னடாஅவள் வார்க்கவில்லை.

வீரஜாம்புவசனம்.

கபிஞ்சி ஆண்டே

கட்டியக்காரன் வசனம்

அடா துஷ்டத் தாயோழி சீக்கிரம் வருகிறையோ இல்லையோ தொழுவி ற்போட்டுமா.

வீரஜாம்புவசனம்.

சரணஞ் சரணம் இதோவாரேன் ஆண்டே.

வீரஜாம்பு வருகிற பொதுவிருத்தம்.

பாண்டிநாட்டரசனேவற்
பணிவிடைமுழுதுஞ்செய்வோன்
நீண்டவெண்பல்லும்பேழ்வாய்
நெறித்தகண்சிமிட்டிடாமல்
வேண்டியகள்ளுமுண்டு
மெய்யெலாம்வேர்வைசிந்தத்
தாண்டியேயாடிவீர
சாம்புவன்வருகின்றனே

கட்டியக்காரன் சொல்வசனம்.

அகோசெப்படியென்றால் இந்திரதாய்மமகாராஜன் சபைக்குக் கொட்டு மேளத்துடன் வெட்டியான் வருகிறவிதங்காண்க.

வெட்டியான் வருகிற-தரு-தெம்மாங்கு

இ - ம் - புன்னாகவராளி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

தெந்தின - தினதினனு - தென்னு - தினுதினு - தினதினனு

அந்தியும்பகலும் - ஆண்டே
அண்டைவீட்டிலே படுத்திருந்தேன் (தெந்தின)

சோரமாரிவெள்ளம் - மெத்தவுஞ்
சொரியுதுபாருங்கள் பெரியாண்டே
போனால்போனவழி - வெள்ளங்கள்
புரளுதுபாருங்கள் சின்னாண்டே (தெந்தின)

பெரியேரிஉடைஞ்சி - வெள்ளங்கள்
பிரளுதுபாருங்கள் சின்னாண்டே
கரைமரம்பாதே - அனைவரும்
ஒட்டப்பிடியுங்கள் சின்னாண்டே (தெந்தின)

சித்தேரி உடைஞ்சி - ஆண்டே
சிங்கசம்பாவெல்லாம்பாழாச்சி

புத்தன்மடை உடைஞ்சி - ஆண்டே
புழுதிசம்பாவெல்லாம்பாழாச்சி (தெந்தின)
நாராப்பள்ளம் ரம்பி - ஆண்டே
நாத்தங்காலெல்லாம் பாழாச்சி
கோணாமடுவுரம்பி - ஆண்டே
குண்டன்சம்பாவெல்லாம் பாழாச்சி (தெந்தின)

மஞ்சினிக்கால்வாயும் - ஆண்டேரம்பி
மணக்கத்தை விளைச்சலும் - பாழாச்சி
மிஞ்சிவருதாண்டே - வெள்ளத்தில்
மீனெல்லாம்போகுது - சின்னாண்டே (தெந்தின)

கோட்டாங்கரையோரம் - எனக்கொரு
குடிசைபோடுங்கள் - சின்னாண்டே
நாட்டாரெல்லாரும் - கூடி
நடுமடைசட்டுங்கள் - சின்னாண்டே (தெந்தின)

மெத்தைதலைக்காணி - பாயுடன்
வெற்றிலைபாக்கு - புகையிலையும்
கத்தைக்காம்புடனே - சருக்காய்
கட்டியனுப்புங்கள் - சின்னாண்டே (தெந்தின)

சின்னபெண்டாட்டி - செல்லியைச்
சீக்கிரமாயழைத் - தனுப்பாண்டே
பொன்னன்றலையாரி - மகளைப்
பொட்டெனக்கூட்டி - யனுப்பாண்டே (தெந்தின)

வெள்ளிக்கட்டுதடியைக் - காணும்
வெடிஞ்சவுடனே - பார்த்தனுப்பாண்டே
குள்ளிமகன் கீச்சான் - அழுவான்
கூழ்வார்த்தனுப்பையா - பெரியாண்டே (தெந்தின)

வீரஜாம்புவன் - இந்திரதூய்ம ராசனுக்குச்
சொல் போற்றி விருத்தம்.

* புடைதிரைகடற்சூழ்வையம் பொருந்தியேயரசியற்றும்
அடையலர்வந்திறைஞ்ச ஆக்கினைச்செய்தெலாமோர்
கொடையினிலாளவந்த கொற்றவா நீதியாய்நன்
னடைபெறுமிந்திரதூய்ம ராஜனேபோற்றி போற்றி.

வெட்டியான் சொல் வசனம்.

பராக்கு - பராக்கு சுவாமி - மகாராஜனே,

மந்திரி-வெட்டியானுக்குச் சொல்வசனம்.

அடாவாடா வீரசாம்புவா-நமதுபட்டணத்திலிருக்கப்பட்ட தேவாலயம் பிரம்மாலயத்திற்குப் பூஜை-நைவேத்தியம் நடக்கும்படியாயும்-திருப்பணிவேலைகள்பழுதில்லாமற் செய்யும்படியாயும்-சாலைசத்திரம்-தண்ணீர்ப் பந்தல்முதலானவை செவ்வையாய் தருமம் நடக்கும்படியாயும்- தண்டோராபோட்டுவையும் பிள்ளாய் வீரஜாம்புவா.

வீரஜாம்புவன் சொல்வசனம்

அப்படியேசெய்து வருகிறேன்சுவாமி.

இந்திரதுய்மராஜன்-மந்திரிகளுக்குச்.

சொல் விருத்தம்.

காலையிற்பூஜைசெய்ய-கமலமும்வைகைசூழுஞ்
சோலைமாமலையின்சாரல்-சொர்னமாமிகுந்தபன்ன
சாலைசத்திரங்கள்தோப்பு-தழைத்தநந்தவனங்கள்
ஆலயமுழுதுஞ்செய்து-அறிவிப்பீரறிவிப்பீரே.

வசனம்.

கேளுமந்திரிமார்களே-நாம்வைகைநதியில் ஸ்நானஞ்செய்து கள்ளழகப்பெருமாளைநினைத்துபூஜைசெய்யவேணும் அதற்காகச் (சோலைமாமலைச்) சாரலிற்கருகே-திவ்வியமானதடாகங்கள்- நந்தவனங்கள்- சாலை-சத்திரமுதலாகியதுஞ் செம்மையாய்செய்துவைத்து வருவீர் மந்திரிமார்களே.

மந்திரிகள்சொல் வசனம்.

அப்படியேசெய்து வருகிறோமகாராசனே;

மந்திரிகள்-இந்திரதுய்மராசனுக்குச்

சொல் விருத்தம்.

தேவரீர்மொழிப்படிக்குச்சிறந்தபூஞ்சோலைச்சாரல்
வாவியும்பர்னசாலை-வளரும்பிர்ந்தாவனங்கள்
காவற்சூழாலயங்கள்-கனத்தசத்திரமுஞ்செய்தோம்
ஆவலாய்வந்துபார்த்து-அரிபாதம்பூசிப்பீரே

வசனம்

சரணஞ்சரண மகாராசனே-சோலைமாமலைச்சாரலிற்கருகேதேவரீருத்தாரப்படிக்குத்திவ்வியமான தடாகங்கள்-பன்னசசாலை-பிர்ந்தாவனம்-சாலைசத்திரங்கள்முதலாகியதும் வெகுநேத்தியாகச்செய்துவந்தோம் தேவரீர்வந்துசந்தோஷமாகக்கண்ணினாற்பார்த்து ஹரிபூஜைசெய்யலாஞ் சுவாமி.

இந்திரதுய்மராஜன் - மந்திரிகளுக்குச்
சொல் விருத்தம்,

மதிமிகுமந்திரிமாரே - மால்வரைசோலைச்சாரல்
நிதமும்போயரிபதத்தை - நினைந்துநாம்பூசைசெய்து
கதிபெறவேணுநீங்கள் - கனத்ததோராசுதன்னை
விதிமுறைதவறுமல் - மிகுதியாய்நடப்பிப்பீரே

வசனம்,

கேளுங்கள் மந்திரிமார்களே - கள்ளழகப்பெருமாள் எழுந்தருளியிராநின்றசோலைமாமலைச்சாரலுக்குப்போய்நாம்தினந்தினம்ஹரிபூசைசெய்து மூத்திமோக்ஷம்பெறவேண்டியிருப்பதால்நீங்கள் நமதுசெங்கோல்முகக்கோணுமல்பனுவிக்கிபானநீதிசாஸ்திரப்படிக்கு அரசுசெலுத்திக்கொண்டுவருவீர் மந்திரிகளே,

மந்திரிகள் சொல் வசனம்

அப்படியேசெய்கிறோமகாராசனே,

பொதுவிருத்தம்,

மன்னனிவ்வாறுசொல்லி மனக்களிப்புடனேசோலை
பொன்வளர்ச்சாரல்வந்து பொங்கியநதியில்மூழ்கி
யன்னபூங்காவுக்கேகி மணமிகுமலர்கள்கொய்து
மின்னொளியரியைப்பூசை மிகுதியாய்நடத்துவானே,

கட்டியக்காரன் - சொல் வசனம்.

அகோதெப்படியென்றால், இந்தப்பிரகாரம் இந்திரதுய்மமகாராசன் மந்திரிகளுக்குத் திட்டஞ்செய்துவைத்து சோலைமாமலைச்சாரலுக்குச்சென்று வைகைநதியில் ஸ்நானஞ்செய்து வாசனைமிகுதியாயிராநின்ற புஷ்பங்களையெடுத்துவந்து ஸ்ரீமந்நாராயணமூர்த்தியினுடைய பாதாரவிந்தத்தைப் பூசைசெய்திறவிருக்கான்க.

இந்திரதுய்மராசன் - பூசைசெய்கிற - தரு

இ - ம் - தோடி - அடதாளம்,

பல்லவி,

பூசைசெய்வேனே - ஹரிபாதத்தைப்
பூசைசெய்வேனே
பரப்பிரம்மனை நாரணன்பாதம்
அச்சுதன்பாதம் (பூசை)

அநுபல்லவி,

பூசைசெய்வேனெநிதமாசில்லாதிவ்ய
கேசவன்பாதத்தை - நேசமுடனின்று (பூசை)

சரணங்கள்.

வைகுந்தவாசனை - மாரிஷிகேசனை
பையரவிற்றுயிலுர் - தெய்வசிகாமணியைப் (பூசை)
சங்குசக்கராயுத - சாரங்கபாணியை
மங்கைலட்சுமிநாத - சிங்கவைபோகனைப் (பூசை)
ஜாமளவர்ண்ணனைத் - தாமரைக்கண்ணனை
வாமனரூபனை - பூமகள்கொழுனனைப் (பூசை)

பொதுவிருத்தம்.

இனபமாயிந்திரதுய்ம னிவ்விதம்பூசைசெய்ய
உம்பர்கள்முனிவர்க்கெல்லா முயர்ந்தநற்றமிழ்வல்லாளன்
பொன்பரவியதோர்திவ்ய பொதியமாமலையில்வாழுங்
கும்பமாமுனிவரானோர் கொப்பனவருகின்றாரே.

கட்டியக்காரன் - சொல் வசனம்.

அசோதேப்படியென்றால், இந்தப்பிரகாரமாகச் சோலைமாமலைச் சாரலி ல் இந்திரதுய்மமகாராசன் பூசைநமஷ்காரஞ்செய்து நிஷ்டையி லிருக்கும்போ து ஜோதிமயமாய் விளங்கிநின்ற பொதியமாமலையிலிருந்து சகலக்கலைவல்ல வராகிய அகஸ்தியமகாமுனிவர் திருக்கூட்டத்துடனே வருகிறவிதங்காண்க.

அகஸ்தியமகாமுனிவர் - வருகிற - தரு.

இம் - பூரிகல்யாணி - ஆதிதாளம்.

பல்லவி.

அகஸ்தியமகாரிஷியிதோவந்தார் - வெகுசம்பிரமமுடனே
அகஸ்தியமகாரிஷியிதோவந்தார்

அநுபல்லவி.

மகுத்துவந்தில் - யிருந்த கர்த்தர்
யாரிதிசொல்லாம் - உண்டயிரசித்தர் (அகஸ்திய)

சரணங்கள்.

தத்துவத்திற்கெல்லாந் தலைவன் - செந்
தமிழுண்டாக்கிய முதல்வன்
சத்தபவுத்ரமாய் நின்றருட் கியானி
குஷ்டதிரோகத்தைப் பெற்றமெய்ஞ்ஞானி (அகஸ்திய)

செங்கையில்நான்மறை தரித்தோர் - அஷ்டட
திக்கெல்லாநற்புகழ் விரித்தோர்
பொற்கும்பிரணவத்தைக் - காப்பாகக்கொண்டவர்
பூமியசையாம லாய்யாக நின்றவர் (அகஸ்திய)

தெண்டுகமண்டல முடையோர் — நல்ல
சீர்மேவுஞ்சிற்றடி நடையோர்
ஆண்டார்புகழ்ந்திட வேழ்விபுரிந்தவர்
ஆதியர்தமுடிவெல்லா மறிந்தவர் (அகஸ்திய)

பொதுவிருத்தம்.

அகஸ்தியமுனிவர்தாமு-மருந்தமிழ்நாட்டையெய்தி
மிகுத்தபூஞ்சோலைவாவி-மேடைகளிந்திரதுய்மன்
வகுத்தநற்பன்னசாலை-வளந்தனிலரியின்பூசை
முகத்தெதிர்சென்றுநோக்கி- முனிவருமொழிவதானூர்

அகஸ்தியர்- தன்னுடன்வந்தவர்களுக்குச்

சொல்வசனம்.

கேளுந்துர்வாசரே- சதானந்தரே-கௌதமரே - பரத்துவாசரே-வசிஷ்டரே-ஆ-ஆ-சோலைமாமலைச் சாரலிற்கருகே இந்ததடாகங்களும்-பர்ன்னசாலைகளும்-நந்தவனங்களும்-பூஞ்சோலைகளும் நிறைந்திருக்கப்பட்டவிடத்தைப்பார்த்தால் முனிவர்கள் தவஞ்செய்யப்பட்ட இடம்போற் காணப்படுகின்றது-இந்தபூலோகத்தில் நாமெங்குங்கண்டதில்லை-அல்லதுநீங்களாவது முன்பின்பார்த்திருப்பீர்களா.

முனிவர்கள் சொவசனம்.

நாங்கள் பார்த்ததில்லை புதிதாகவுண்டானதாய்க் காணப்படுகின்றது சுவாமி.

அகஸ்தியர்சொல் வசனம்.

ஆனால்ஞானத்தினால் பார்த்துச்சொல்லுகிறேன்

முனிவர்கள் சொல் வசனம்.

அப்படியேகண்டறிந்து சொல்வீர் சுவாமி

அகஸ்தியர்சொல் வசனம்.

இந்தத் தமிழ்நாட்டை அரசாட்சி செய்யாநின்ற இந்திரதுய்ம பாண்டியனென்பவன் முத்திமோக்ஷம் பெறவேண்டியதற்காக இப்படிக்கெல்லாமுன்னே பண்ணி ஸ்ரீமன்நாராயணர்பாதத்தைமனதில் தியானஞ்செய்துக்கொண்டு அதோவிராநின்றஅந்தப்பொற்றாமரைத்தடாகக்கரையில் புன்னைவிருக்ஷத்தினிழலில்நியமநிஷ்டையிலிருக்கின்றான் பார்த்தீர்களா நன்றாய்ப்பார்த்தீர்களா.

முனிவர்கள்-சொல் வசனம்.

நன்றாய்ப் பார்த்தோஞ்சுவாமி.

அகஸ்தியர் சொல் வசனம்.

ஆ- ஆ- நல்லதர்ம்மிஷ்டி மிகவும் உறுதியுள்ளவன்- ஆ-ஆ- அடா சிஷியா பொதியமாமலையிலிருந்து அகஸ்தியமாமுனிவர் திருக்கூட்டத்துடன்வந்திருக்கிறாரென்று அதோநிஷ்டையிலிருக்கின்ற ராசனுடன் சொல்லிவாருங்கள் சீஷர்களே

சேஷர்கள் சொல்வசனம்

புத்தி - புத்தி - அப்படியே தெரிவிக்கின்றோம் சுவாமி

சேஷர்கள் இந்திராயுமாராசனுக்குச் சொல்வசனம்.

ஓ - ஓ - மகாராசனே பொதியமாமலையிலிருந்து அகஸ்தியமகாமுனிவர் வந்திருக்கிறார் மகாராசனே,

சேஷர் அகஸ்தியருக்குச் சொல்வசனம்.

சரணஞ் சரணஞ் சுவாமிமுனிநாதரே என்னசொன்னாலுங் கேளாதவன் போல அந்தமன்னவன் நிஷ்டையி லிருக்கின்றான் சுவாமி.

அகஸ்தியர் முனிவர்களுக்குச் சொல் விருத்தம்.

சத்தமாதவரேகேளீர் சகலருநம்மைக்கண்டால்
மெத்தவேதுதித்துப்போற்றி மேன்மைசெய்வார்லாமல்
இத்தனைமதங்கொண்டோனை யெங்கினுங் கண்டதுண்டா
சித்தமாயிவனுக்கேத்த சிஷ்டைகள்செய்வேன்பாரீர்.

வசனம்.

கேளுங்கள் சத்தரிஷிகளே, இந்தசொற்கமத்திய பாதாளலோகமென்றுசொல்லப்பட்ட மூன்றுலோகத்திலுள்ள சகலமானவர்களும் நம்மைக்கண்டால் எழுந்திருக்கவும் வணங்கவும் உபசாரஞ்செய்யவுமிருப்பார்கள், இவனைப்போல மதாங்காரத்தைப்பெற்றவர்களை நீங்கள் எங்கேயாவதுகண்டதுண்டோ.

முனிவர்கள் சொல் வசனம்.

நாங்கள் கண்டதுமில்லை கேட்டதுமில்லை சுவாமி;

அகஸ்தியர்சொல்வசனம்.

ஆனால் இப்போது இவனுக்குத்தகுந்த சிஷ்டைகள் இதோ ஒருநொடிக்குள்ளே செய்துவருகிறேன் பாருங்கள் முனிவர்களே.

அகஸ்தியர் - இந்திராயுமராசனுக்குச்

சொல் விருத்தம்.

நதிபலமூழ்கிட்டாலும் நற்றவஞ்செய்திட்டாலும்
எதிர்வரும்பெரியோர்தம்மை யிறைஞ்சுவார்நமையிகழ்ந்தாய்
பதியுமுன்செல்வநீங்கிப் படைமுதலியாவுநீயும்
மதிமிறைவெண்கோடொத்த மதகஜமாகுவீரே.

வசனம்.

கேளும் இந்திராயுமராசனே - சொற்கமத்திய பாதாளலோகமென்று சொல்லப்பட்டமூன்றுலோகத்திலுள்ள தீர்த்தங்களாடி அநேகங்கோடி தவசுகள்செய்தபெரியோர்களும் - முத்திமோக்ஷம் பெற்றபேர்களும் நம்மைக்கண்டால்வணங்குவார்களேயல்லாமல் வேறில்லை - தருமசாஸ்திரத்திற் சொல்லியிருப்பதும்நாலுவேதமுந்தேர்ந்து நியமநிஷ்டையிலிருக்கிறதருணத்தில் பெரியோர்களைக்கண்

டால் இதைவிட்டுவிட்டு வணங்கும்படியாய் சாஸ்திரஞ்சொல்லியிருக்க- நீயெவ்வளவு தவப்பலன்பெற்றவன் - உனக்கிந்தகர்வம் எங்கிருந்துண்டாச்சுது - ஆ - ஆ- இப்போதுமதாங்காரமாயெழுந்திராமலிருந்தபடியினாலுன் கொலுசிங்காரமான அரசைவிட்டு நீங்கி உன்னுடைய தேவிமார்களும்- மந்திரிபிரதானிகள் சேனைகளியாவரும் - மதயானையாய் போகக்கடவது இந்திரதுய்மராசனே.

இந்திரதுய்மராசன் - புலம்பல் - தரு

இம்காம்போதி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

உனதுமகிமையை யாவருமறியார்கள்
உத்தமனே - எனைப் - பெற்றவனே
மனதிற்கவலைதன்னை - நின்மனமகிழ்ந்தங்கியே
மாற்றுவீரோ - துயர் - ஆற்றுவீரோ

புத்தியில்லாமல்நாயேன் - செய்தபிழையனைத்தும்
பொறுப்பீரோ - கோபம் - வெறுப்பீரோ
பத்தியில்லாதபேயன் - கடைத்தேறும்படிவரம்
பாலிப்பீரோ - தயவென் - மேல்வைப்பீரோ

சிறியோர்செய்தபிழையைப் - பெரியோர்பொறுப்பதென்று
செப்புவீரோ - எவரும் - ஒப்புவாரோ
அறியாமற்செய்தகுற்றம் - பொறுத்தருளவேணும்
ஆண்டவரோ - தவம் - பூண்டவரோ

அருந்தவஞ்செய்துமுத்தி - யடையலாமென்றிருந்தேன்
அழலாச்சே - தவம் - விழலாச்சே
பரிந்துண்ணுங்கன்னல்ரசங் கைப்பதுவாய்குற்றமென்ற
பாவினையோ - முன்செய் - தீவினையோ

மஞ்சத்தில்வாழ்ந்தெனக்கு - வேழமாகவென்று
மதித்தானோ - அயன் - விதித்தானோ
பஞ்சிபொறியனல்போலிட்ட - நின்சாபத்திலகப்
பட்டேனே - மதி - கெட்டேனே

தஞ்சமின்பதமல்லால் - வேறெனக்கில்லைமுத்தி
தருவாயே - அருள் - புரிவாயே
கெஞ்சியழும்பிள்ளைப்பா - லுண்ணுதிருப்பதுண்டோ
கெதிதருவாய் - நல்ல - மதிதருவாய்

இந்திரதுய்மராசன் அகஸ்தியருக்குச் சொல்

விருத்தம் - தேவாரம்.

கஞ்சம்வாழயனுமாலுங் காண்கிலாருனதுமாய்கை
பஞ்சையானறிவதுண்டோ பராபரஜோதியாரே

நஞ்சநீயல்லால்வேறு தரணியிலொருவரில்லை
நஞ்செனுஞ்சாபநீக்கி நாயேனைரக்ஷிப்பீரே

வசனம்

சரணஞ் சரணஞ்சுவாமி ஞானசொரூபராய் விளங்கியிராநின்ற முனீந்தரோ தேவரீர் இவ்விடமெழுந்தருளியது அடியேனறியமாட்டேன் முன்செய்த வினைப்பயனால் என்மதிமயங்கிப்போயிற்று பிர்ம்மா விஷ்ணு முதலாகியபேரும் உம்முடையமகிமையையறியமாட்டார்கள் நாயேன் எவ்வளவுக்குடையவன் ஆகையால் தேவரீருடைய பாதாரவிந்தமேதுணையல்லாமல் பூலோகத்தில் எனக்கு வேறே ஆதரவில்லை தேவரீர் அடியேனுக் கிட்ட சாபத்தைநீக்கி ரக்ஷிக்கவேணுஞ்சுவாமி.

அகஸ்தியர் இந்திரதுய்மராசனுக்குச்
சொல் விருத்தம்.

சுடர்முடிமன்னுயெந்தன் சொல்வழுவாதுநீயும்
அடவியில்வேழமாகி அரும்புனலுண்ணும்போது
பிடங்கர்வந்துன்கால்பற்றி யிழுக்கையில்மாயோன்செங்கை
இடம்பெறுமாழியொன்றால் தீர்ந்திடுஞ்சாபந்தானே

வசனம்.

ஆனாற்கேளும் இந்திரதுய்மமகாராசனே நீ இப்போது செய்த தவப்பலனெல்லாம் வீண்போகமாட்டாது ஸ்ரீ மந்நாராயணர் கொஞ்சகாலத்தில் உன்னை ரக்ஷிப்பார் நாமிட்டசாபம்வீண்போகமாட்டாது சிலகாலம் (மதயானையாய்) வனத்தில் சஞ்சாரஞ்செய்துகொண்டிருந்து ஒருமடுவில் தண்ணீர்குடிக்கும்போது உன்காலை முதலைபிடித்துக்கொண்டு போராடுகையில் விஷ்ணுவினுடைய சக்கரம் வந்து முதலையைக்கண்டித்துவிடும். உனக்குச்சாபம் நீங்கிமுத்திமோக்ஷத்திற்குப்பரிசுத்தனுவாய்எழுந்திருமகாராசனே.

கஜேந்திரன்வரலாறு.

பொது-அகவல்-இ-ம்-தோடி.

கும்பமாமுனிவன் கொடுத்தசாபத்தால்
வெம்பியேமன்னன் மெய்யதுதளர்ந்து
தேவிமார்புத்திரர்கள் சேனைகள்யாவும்
ஆவிநொந்துருகி யவ்வுருமாறி
மானிடவுருவு மயக்கமுநீங்கி
யானையினுருவா யக்ஷணமாகி
வனத்திற்சஞ்சரித்து மனக்களிப்புடனே
கனத்ததோராசன் களிப்பினுக்கெல்லாம்

கெஜேந்திரராசனும் கீர்த்திபன்றனக்கு
யிசைந்திடுந்தேவிமா ரிருபதாயிரம்

படைத்தலைவர்களும் பணபுளமந்திரிகள்
புடைத்தெழுஞ்சேனைகள் புத்ரமித்திரர்களும்

ஆயிரங்கோடி யானைகளாகித்
தூயபொற்கூடஞ் சொர்னமாமேரு

இமயமால்வரையு மேமகூடங்கள்
சமைவதோர்நிடத தனிமந்திரகிரியும்

தாண்டிவிளையாடி தத்தளியிட்டு
வேண்டியகன்னல் விருப்பமாயுண்டு

இப்படிசிலநா ளின்பவாழ்வெய்தி
கொப்பனமதவேழ் கூட்டங்கள்யாவும்

நீலமால்வரைமுதல் நிதநிதந்திரிந்து
சாலவேதிரிகூடச் சாரலுக்கேக

மதகெசராசன் மனதினில்நினைந்து
அதிகமாய்வேழங்கள் யாவையுங்கூட்டி

பிறப்படும்போது பிரளயகாளங்கள்
நிற்பதுபோல நிலங்களுமதிர

அண்டகடாக மனைத்துநெக்கிடவும்
விண்டலத்தமரர் மெய்யதுநடுங்க

மல்லிகைமுல்லை மந்தாரைகொன்றை
அல்லிசெங்காந்த ளணிகிளர்புன்னை

சந்தனத்தருக்கள் சண்பகங்கோங்கு
விந்தையாயருந்தி விரைந்துவந்ததுவே.

பொது விருத்தம்.

நெடியத்திரிகூடச்சாரல் நிறைந்தபூஞ்சோலைவாவி
கடிகமழ்பாரிசாதங் கமுகுமந்தாரைசூழ்ந்த
மடுவினிற்கிரீடைசெய்ய மதகஜராஜனெண்ணிப்
படியெலாமதிரவேழம் பரவியேவருவதன்றே

சட்டியக்காரன் சொல்வசனம்.

அகோதெப்படியென்றால் கஜேந்திரராசன் தன்னுடையதேவிமார் (இருபதினாயிரம்) பேருடனே-புத்திரமித்திர களத்திராதிகள் சகலரையுங்கூட்டிக்கொண்டுதிரிகூடபர்வதச்சாரலினருகேதடாகத்தில்ஜலக்கிரீடைசெய்யவருகிற விதங்காண்க.

யானைகள்-வருகிற-தரு-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

குஞ்சரங்கள் கூடிவார-கோலத்தைப்பாரும்

அநுபல்லவி,

அஞ்சனமலைப்போலவே அணியணியாகச்சென்று
பிஞ்சியேநடைநடந்து வேடிக்கையுடன்வெகுண்டு (குஞ்சரங்கள்)

சரணங்கள்.

அண்டரண்டபுவனமெல்லா மஷ்டதிக்கெல்லாமதிர
விண்டலத்திலங்குமீனகள் வெங்கனல்போலேயுதிர (குஞ்சரங்கள்)
பருத்தமஸ்தகமுடன் பாரதும்பிக்கை நீட்டி
விரித்தநற்கொம்பிரண்டும் வெண்பிறைபோற்காட்டி (குஞ்சரங்கள்)
திரிகூடப்பர்வதச்சாரு செழுங்காவுக்கேநாடி
பிரியமுடன்வேழங்களும் பெட்பாக்வேகூடி (குஞ்சரங்கள்)

பொது விருத்தம்.

நீண்டதோர்மடுவைப்பார்த்து நிகூஷயகஜராஜேந்திரன்
காண்டனுமரிதேயென்று களிப்புடனுயரமாற்றி
தாண்டியேகஜங்கள்யாவும் ஜலந்தனில்விழுந்துமூழ்கி
யேண்டியநீருமுண்டு விளையாடித்திரிந்ததன்றே

கட்டியக்காரன் சொல்வசனம்,

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் கஜேந்திரராஜன்முதலியயானைக்கூட்டங்கள் திரிகூடபர்வதச்சாரலிற்குவந்து தடாகத்தைப்பார்த்து சந்தோஷித்து ஜலத்தி விழுந்து தீர்த்தபானஞ் செய்து விடாய் நீங்கி ஒன்றேடொன்று ஆனந்தக்களிப்புடன ஜலத்தில்விளையாடுகிற விதங்காண்க.

குஞ்சரராஜன் ஜலத்தில் விளையாடுகிற-தரு
இ - ம் - புந்நாகவராளி- ஆதிதாளம்,

பல்லவி,

ஜலத்திற்கிரீடைசெய்தானே - குஞ்சரராஜன்
ஜலத்திற்கிரீடைசெய்தானே

அநுபல்லவி

நிலத்தமடுவிற்சென்று முகுர்த்தமிதுநன்றென்று (ஜலத்திற்)

சரணங்கள்.

அன்னம் வெருவி யோடவே-அம்புயமெல்லாம்
அனலிட்டாற்போல்வாடவே
மின்னலொளிசங்கிதங்கள் பின்னபின்னமாகவே
மன்னன்கஜேந்திரராஜன் மனங்களிப்பு மிகவே (ஜலத்திற்)
தும்பிக்கைகட்டி யிணைத்து - ஒன்றேடொன்று
துடைநெருங்கவேயணைத்து
கெம்பீரமுடன்வெகு - கீதங்கள்பாடிப் பாடி
சும்பிரமாகவேதான் - சரசமிகக் கொண்டாடி (ஜலத்திற்)

பொங்குநீர்துள்ளி யிறைய - அம்புவியெல்லாம்
புரண்டுநீரொங்கும் நிறைய
செங்கதிரோனுமிந்தத் - திவலைப்பனியென்றெண்ணி
சேடன்முடியிளைத்து - வாடிமனது குண்ணி (ஜலத்திற்)

பொதுவிருத்தம்.

வேழங்களனைத்துங்கூடி விளையாடித்திரியும்போது
பேழவாய்த்திறட்டுப்பல்லும் பின்முதுகெல்லாமுள்ளும்
ஆழ்தடமடுவில்நீந்தி அகண்டவால்தனை வளைத்து
தாழ்வில்லாமுதலைதானுந் தாண்டியேவருவதன்றே.

முதலை தரு - இ - ம்-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி.

கொக்கரித்துக்கொண்டுமுதலைவார
கோலம்பாருங்கள்

அநுபல்லவி.

திக்குத்திசையெல்லா மதிரவிண்டலந்
திடுக்கிட் டேங்கியே
திகைத்திடக்கண்கள் நெருப்பனலெழச்
சிரி யோங்கியே (கொக்கரித்துக்)

சரணங்கள்

துறட்டுப்பல்லைக்காட்டிவாயைத்
திறந்து துள்ளியே
சூழ்ந்தமகர மீன்கள்வெருவச்
சுழட்டித் தள்ளியே (கொக்கரித்துக்)

அண்டகடாகங்கள் வெடித்திடும்படி
அதட்டிப் பாயுமே
ஆலகாலவிஷம்போ லெழும்பிட
அலைகள் தியுமே (கொக்கரித்துக்)

நீண்ட வாலைவளைத்துமடக்கி
நெறித்துப் பார்க்குமே
நெடியவுலகந் திடுக்கிடமனம்
நெகிழ மார்க்குமே (கொக்கரித்துக்)

பொதுவிருத்தம்.

புடைகள்சூழ்மடுவில்வேழம் போய்விளையாடும்போது
இடங்கருநமக்குநல்ல யிரைய்துகிடைத்ததென்று
கடகடவென்றுசீறிக் கஜராஜன்காலைக்கவ்வ
படபடவென்றுழடிக்கப் பற்றியேயிழுத்ததன்றே.

கட்டியக்காரன் சொல்வசனம்

அகோதெப்படியென்றால் கஜேந்திரராஜன் ஜலக்கிரீடை யாடிக்கொண்டிருக்கும்போது அந்தமடுவில் பிருகுமகாரிஷி சாபகாரணத்தினால் கந்தருவன் ஊகூராமன் முதலைரூபமாக வெகுகாலம் ஜலத்தில்வாசஞ்செய்துக்கொண்டிருந்து மிகுந்தபசியுடன் கஜேந்திரனென்றுசொல்லப்பட்டயானையைப் பார்த்து இன்றையத்தினம் நமக்கு நல்ல இரைகிடைத்ததென்று வாயைமடித்து நெறநெறவென்று பல்லைக்கடித்துச் சீறி யெழும்பி யானையின்காலைக்கடித்து வெகுவுக்கிரத்துடன் இழுக்கிறவிதங்காண்க.

முதலையும் - யானையும் - வாதர்டல் - தரு

இ - ம் - மோகனம் - மிசுரதாளம்,

கண்ணிகள்.

இடங்கர்பிடித்திழுக்கும்போதிலே - குஞ்சரராஜன்
தடக்கையாற்பிடித்தலைந்துமோதவே

மோதுங்கரியையமடக்கிவாலினால் - இடங்கர்தானு
முறுக்கிக்காலைப்பிடித்துக் கவ்வவே

கவ்விழுக்கக்கோப மாகியே - குஞ்சரராஜன்
காலினால்மிதித்தழுத்திக் கொல்லவே

கொல்லும்யானைதனை மடக்கியே - முதலையுங்
கொத்தியுடம்பெல்லா முதிரஞ்சொரியவே

குருதிபெருகமனங்கொதித்துத்தான்-குஞ்சரராஜன்
கொம்பாலிடங்கர்பல்லை யுடைக்கவே

பல்லுடையவுமிடங்கர்சீறியே-வேழத்தைமோதிப்
பாரிற்றள்ளித்தாவி யிழுக்குமே

தாவியிழுக்கவும்பின்னுங்கிடையாமல்-குஞ்சராசன்
தள்ளிமுதலைமேற்றுள்ளியேறுமே

ஏறும்யானைதனைமடக்கியே-இடங்கர்தானுமெய்
யெல்லாங்கொத்தியிழுத்துவாலைப்புறட்டித்தளருமே.

பொது விருத்தம்.

பதைபதைத்திடவிடங்கர் பற்றியேயிழுக்கும்போது
மதகஜராசன்றானு மண்ணின்மேல்லறிவீழ்ந்து
புதல்வரைத்தேவிமாரைப் பொங்குசேனைகளைநோக்கிச்
சுதறியேகோகோவென்று கருத்தழிந்துரைப்பதாமே

கட்டியக்காரன் சொல்வசனம்.

அகோதெப்படியென்றால் கஜேந்திரன்காலை முதலை பிடித்துக்கொண்டிருக்கும்பொழுது யானை பயப்படாமல் தன்னுடைய மதாங்காரத்தினால்முதலை

கயச் சின்னபின்னங்களாக அடித்துத்தள்ளியும்பார்த்துபலம்போதாமல்மனது நொந்துசிலநாள்வரைக்கும்போராடி இளைத்து மெய்தளர்ந்து புத்திரமித்திரசனத்திராதிகளையும் தன்னுடையதேவிமாரையும்பார்த்துமிகவும்நொந்துவருத்தப்படுகிறவிதங்காணக.

கஜேந்திரன் சொல் வியசனத்-தரு

இம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

உடலுக்குளுயிரொத்ததெனவேயிருகிருந்து
வுகந்தோமே-இன்ப-மிகுந்தோமே
விடவைக்கனலையிட்ட தென்வேதுடிதுடித்து
மாய்வேனோ-நொந்து-தீய்வேனோ
கொடுமைதீவினைபற்றி முடிவிற்றலையெழுத்தைக்
குறித்தானோ-அயன்-பிரித்தானோ
மடுவுக்குளிடங்கற்கின் திரைபெற்றிடமெலிந்து
மடிவேனோ-மன-மிடிவேனோ
புதல்வர்துணையைவிட்டுக் கதறிச்சிதறிவெம்பிப்
போவேனோ-மண்ணில்-சாவேனோ
விதனத்துடனுடம்பிற் குருதித்திரளெழும்பி
வீழ்ந்தேனோ-பலங்-தாழ்ந்தேனோ
அனலிட்டமெழுகொத்த தெனப்பட்டுடல்பதைத்து
அழிவேனோ-முன்செய்-பழிதானோ
புனலுக்குளுயருற்று முதலைபல்லிடைப்பட்டு
போந்தேனே-மதி-தாழ்ந்தேனே.

பொது விருத்தம்.

குஞ்சரராசன்றானுங் கூவியேயலரும்போது
வஞ்சியாம்பிடிவேழங்கள் வருந்திநொந்தலறிவீழ்ந்து
அஞ்சனமலைபோலொத்த வாரணையிடங்கர்பற்ற
முன்செய்தபழியோவென்று முறையிட்டேமொழிவதாமே

கட்டியக்காரன்சொல் வசனம்.

அகோதெப்படியென்றால் இப்படியாககஜேந்திரராஜன்முதலைவாயிலகப்பட்டுமிகவும்வருத்தத்துடன் பிரலாபிக்கும்போது பக்கத்திலிருந்த தன்தேவிமாராகிய பெண்ணானைகள் வருத்தப்படுகிறவிதங்காணக.

பெண்யானைகள் புலம்பல்-தரு

இ-ம்-ஆரபி-அடதாளம்.

கண்ணிகள்.

என்செய்வோமினிப்பிராண நாயகா-நீதான்
இடங்கர்க்கிரையோ பிராணநாயகா

முன்செய்ததீவினை தானோ-பொல்லா
மோசப்பழி வந்த தேனோ
ஆருமெதிரில்லாத வீரனே-இந்த
அகிலம்புகழும்பிராணசூரனே
நாரும்பூவும்போலே வாழ்ந்தோமே-அலையில்
நைந்தக்கரும்பெனத் தாழ்ந்தோமே
உம்மைவிட்டுப்பிரிந்திட மதியோ-பொல்லா
வினைப்பயன் வந்ததும் விதியோ
எட்டுதிக்கெதிரில்லாத மன்னவா-மடுவிற்
கட்டுப்பட்டாயோநீ மன்னவா
வெங்கனற்போலேபற்றி யெரியுதே-உடல்
வெந்துமேனியெங்கும் விரியுதே
எங்களைரக்ஷிக்கு மையனே-உம்மை
யிழந்திட்டோமென்செய்வோமெய்யனே

பொது விருத்தம்,

கரிசனோநொந்துவாடிக் காவலன்றடக்கைபற்றிப்
பரிவதாயிழுக்கும்போது படித்துறைதனிலிடங்கர்
எரியனல்போலுஞ்சீறி யிபராசன்காலைக்கவ்வ
வெருவியேவேழமெல்லாம் விட்டகன்றேடித்தன்றே.

கட்டியக்காரன் சொல்வசனம்

அசோதெப்படியென்றால் இப்படியாகப் பெண்யானைகளானைத்துங்கூடிக் கஜேந்திரனைப்பார்த்து மிகவுமனதுநொந்துருகித் தங்கள்தங்கள் தும்பிக்கைகளால் கஜேந்திரனுடைய கழுத்திலும் கொம்புகளிலும் ஒன்றேடொன்று புனைந்து கனமார்க்கமாய் வெளியிலிழுக்கும்பொழுது முதலையானது பின்னுங் கோபமாகிச் சீறிப்பெலத்துடனே நடுஜலத்தில்யானைகள்கூட வரும்படியிழுக்கும்போது யானைகளுக்குப் பலம்போதாமல்கஜேந்திரனைவிட்டுவிட்டுப் பயந்தோடிப்போய் வியசனப்படுகிற விதங்காண்க.

பொதுவிருத்தம்.

எண்ணேபிடிவேழங்க ளிறைவனைப்பார்த்துப்பார்த்து
கண்களிற்கலுழிசேரக் கதறியேபுவியில்வீழ்ந்து
நண்ணியேதிங்கள்பத்தும் நைந்துதானிளையடாமல்
திண்ணியவனத்திற்சென்று தினந்தினம்வந்துபார்க்கும்.

இதுவும் பொதுவிருத்தம்.

தேவியர்போனபின்பு திட்டமுள்ளகஜராஜேந்திரன்
வாவியின்ஜலத்தில்வீழ்ந்து மழையெனக்கண்கள்சோரக்
கூவியேதிசைகளெட்டுங் கொப்பனமருண்டுபார்த்து
ஆவிநொந்துருகிவாடி யலறியேயுளைப்பதாமே

கட்டியக்காரன் சொல்வசனம்

அகோதெப்படியென்றால் இப்படியாக்க் கஜேந்திரனைச்சூழ்ந்திராநின்ற யானைக்கூட்டங்களனைத்தும் வன்சஞ்சாரமாகப் போனபிறகு கஜேந்திரன்எட்டு த்திக்கையும் பார்த்துக்கூவியழுது ஆபத்துக்ாலத்தில் ஒருவருந்துணையில்லாமற் போனபடியினால் மனம்வெறுத்து பின்னுஞ்சொல்லுகிறவிதங்காண்க.

பொதுவிருத்தம்.

மெத்தவேயிடுக்கம்வந்தால் மேதினிதனிலேயுள்ள
சுற்றத்தார்மனைவிமார்கள் துணையெனநம்பொணாது
பத்தியாய்தெய்வந்தன்னைப் பரிந்துநற்றுதியேசெய்தால்
இற்றிடும்வினைகளென்று யிபராசனுரைக்கின்றானே

கட்டியக்காரன் சொல்வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரங் கஜேந்திரராஜன் மனதுநொந்து பெண்டீர் பிள்ளைகள் சுற்றத்தார் யாரிருந்தபோதிலும் நமக்குத்துணையாக மாட்டார்களென்று விக்கினேஸ்வரனை நோக்கித் தோத்திரஞ் செய்கிறவிதங் காண்க.

கஜேந்திரன் விநாயகரைத்துதிசெய்கிற-தரு

இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்

வல்லபைமணாளனே சரணம்-எந்தன்
வல்வினையகற்றயிதுதருணம்
நல்லகுணமுடைய கணபதியே-இந்த
நாய்தனைரக்ஷிதய நிதியே

தும்பிமாமுகமுடைய துய்யா-எந்தன்
துயர்தனையகற்றியருள்மெய்யா
உம்பர்கள்துதிக்குமலர்ப் பாதா-என்னை
யுவந்துகாத்தருள்செ யொண்ணாதா

பொல்லாயிடங்கர்நமன் போலே-யுடலைப்
பொடியெனவேசெய்யுதொருகாலே
நில்லாதுகாய மிந்நேரம்-இந்த
நிமிஷம்வந்துதவலுன்பாரம்

ஆறுவாகனனேகுண சீலா-உமையாள்
அன்புடனேயீன்றருளும் பாலா
வேகமாய்ப்பொய்கைக்கரை மீதே-வந்து
வினைதனையகற்றிடு மிப்போதே

கட்டியக்காரன் சொல்வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் விக்கினேஸ்வரனை நோக்கித் துதிசெய்ய அவர் வராதிருப்பதுகண்டு சுப்பிரமணியக்கடவுளை நினைந்து ஸ்தோத்திரஞ் செய்கிறவிதங்காண்க.

கஜேந்திரன்-சுப்பிரமணியரைத்துதிசெய்கிற-தரு

இம்-புந்நாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

திருமால்மருகா முருகாகிருபையருள்வாய்

அநுபல்லவி.

குருகாற்செழும்புனற்-குறமகளுக்குரிய
குகனேமயில்வாகனனே
சுகதனனே- கனசரவணபவனே (திருமால்)

சரணங்கள்.

விடையேறியசீ ரமலன்பங்கி லுறைந்து
மிகவாழுமையாடவ் வன்பினி லுறைந்து
புடைசூழடியாரவர் சிந்தையில் வளர்ந்து
புகழ்சேர்கதிர்காம மதனிற்குடி யிருந்து
கடல்பொங்க மெனவெழுந்த
படவிண்டவுணர் சிந்த
சுடர்கொண்டயி லெழுந்த
சூரசம்மார கந்த
சுவாமிசற்குண் நாதசிகாமணி
யாமுனக்கிணை-யாரினிப்பார்தனில்
ஜீவரத்தின-மேமதனேதணி
காசலப்பதியே நிதியேயணி
அருஞ்சூரர்கள்சூழ்ந்தாருவினிழல்வாழும்
அமராபதிதன் மகள்மருவிய
குமராகுருபரகிரிதுணைசெய (திருமால்)

பகைதீவினைநிகழ் பழனிவாழ்வடிவேலா
பவஞ்சனபரிபூரணகுண சீலா
அகமேவியவறுமுகவஜீகர பாலா
அரனார்க்குபதேசமருளியமத லோலா
ஜெகசக்ரமருள்கின்ற
வெகுவுக்கிரமவுத்தண்ட
மகசுப்பிரமண்ணியகண்ட
மார்த்தாண்டமண்டலப்பிரசண்ட
வாரணர்க்கிளையாய் மயிலேறிய
காரணக்குருவேதவ மீறிய

வீரதத்துவனேயெதிர் சீறிய
சூரபற்பனையேயுடல் கீறிய
துய்யனேபன்னிரு-கையனேயுன்னிரு
துணைமாமலரடிதொழவருள்புரி
மணமேவிய-குணவழகிய (திருமால்)

புனல்வாழிடங்கர்தன் வாயினில் மிகநொந்து
போனேனடியேன்பொறுக்கவொண்ணாதுகந்து
கனமாமயில்மேலேறிநொடியில் வந்து
கரையேற்றியெனையே காத்தருள்வாய் மிகுந்து
வினையைப்பொடி படைத்து
மனதைத்திடப் படுத்தி
உனதுபொற்பாத முத்தி
யுகந்தருளையா வெற்றி
ஓதும்நாயடியேன்வினை சிந்திட
நீதியாகவேல்கொண்டுதொடர்ந்துடல்
வாதுகூறுமிடங்கர் பதைத்திட
மோதுவாயென துள்ளமகிழ்ந்திட
மூர்த்தியேயுனை-வாழ்த்தினேனினி
முடியாவகையேயருள் புரிசிறு
வடியேனுனையே மறவேன் (திருமால்)

சட்டியக்காரன் சொல்வசனம்.

அகோதெப்படியென்றால் இப்படியாகக்கஜேந்திரராஜன் சுப்பிரமணியக் கடவுளைநினைந்து தோத்திரஞ்செய்தும் அவர்வராமையினால்பார்வதிசமேதராகிய கைலாசபதியை நினைந்து ஸ்தோத்திரஞ் செய்கிற விதங்காணக.

கஜேந்திரராஜன்-பரமசிவனைத் துதிசெய்கிற-தரு

இ-ம்-எதுகுலகாம்போதி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

சம்போசிவசம்போசிவசங்கரஅரகர அபயம்
சதுர்வேதபுராணசிவபர-தத்துவநாதா அபயம்
அம்போருகபாதாநித-மன்பர்களின்பமே அபயம்
அரனேகுருபரனேபிறை-யணிமுடிவேணியா அபயம்
பவனசனேயுமைபாகனே பரிபூரண அபயம்
பஞ்சாக்ஷரப்பொருளே யரவாபரணுவுந்தனுக் கபயம்
தவமீறியவடியாரிடர்தவிர்த்திடுபவனே அபயம்
சர்வேஸ்வரநிர்ம்மலசுருபா தற்பரநந்தா அபயம்

கெங்காதரசிங்கேஸ்வர கிண்கிணிகழலா அபயம்
கெவுரீசாகைலாசகெவுரிமனோகர அபயம்
துங்காயேழைபங்கா-திரிசூலாயுதனே அபயம்
சுரர்போற்றியதிரிநேத்திரஜோதிர்பாகர அபயம்
கொடிதாகியவன்மீனெனைக்கொலைசெய்திட விதியோ
குறியேயொருபொருளேயினிகுணவழகியதய நிதியே
அடியேனிடர்தனைநீக்கிட-அருள்வாயருள் புரிவாய்
அமலாவொளிவிமலாயெனக்கஞ்சலியின்பமே தருவாய்

கட்டியக்காரன் சொல் வசனம்.

அகோதெப்படியென்றால் இவ்வாறாகக்கஜேந்திரராஜன்பரமசிவனைக்குறித்து ஸ்தோத்திரஞ்செய்தும் அவர் வராதிருப்பதால் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியை நோக்கி ஸ்தோத்திரஞ்செய்கிறவிதங்காண்க.

கஜேந்திரராசன் -ஸ்ரீமந்நாராயணரைத்துதிசெய்கிற-தரு

இ-ம்-கண்டா- ஆதிதாளம்.

கண்ணிகள்.

வாமனசுரூபனே -ஓமப்பிரதாபனே
சாமளரூபனே நின்சரணம்
தேவகிநந்தனே-ஜீவவைகுந்தனே
மூவாமுகுந்தனே நின்சரணம்

சுந்தரநந்தனே-நந்தகோபாலனே
மந்திரமூலனே நின்சரணம்
நாரணனேவேத பாராயணனேபரி
பூரணனே ஹரி நின்சரணம்

அம்புயபாதனே-உம்பர்கள்போதனே
சம்பிரமநாதனே நின்சரணம்
ஜீவதயாபர -தேவகிருபாகர
மேவுதாமோதர நின்சரணம்

வன்மீன்வாய்நான் சிக்கிநொந்தேனே
என்சென்மமோடிவர் தடியேனைக்காப்பாயே
தஞ்சநின்பாதம்வெகு வாய்கொண்டேன்மிஞ்சிநீ
அஞ்சலியென்றென்னை ஆதரிப்பாயே.

கட்டியக்காரன் - சொல் வசனம்.

அகோதெப்படியென்றால், கஜேந்திரராஜனானவர் இப்படியாக ஸ்ரீமந்நாராயணமூர்த்தியை நோக்கித் தோத்திரஞ்செய்தும் அவர் வராதிருப்பதுகண்டு-சரஸ்வதிசமேதராகிய பிரமதேவனை நோக்கித்தோத்திரஞ்செய்கிற விதங்காண்க.

கஜேந்திரராஜன் பிரமதேவனைக்குறித்து துதிசெய்கிற-தரு

இ - ம் - புந்நாகவராளி - மிசுரதாளம்,

கண்ணிகள்.

இந்தவிதியெனக்கிட்டதோவறிகிலேன்
பிர்மதேவா - இப்போ
துண்மையாய்மடுவினிலெலாடுங்குதேயென்னுயிர்
பிர்மதேவா

தேவிமார்களிக்கவே செழிப்புடன்வாழ்ந்தேனே
பிர்மதேவா - இப்போ
ஆவிநொந்துருகியலறியேவீழ்ந்தேனே
பிர்மதேவா

புத்ரமித்திரருடன்பொங்கமாய்வாழ்ந்தேனே
பிர்மதேவா - இப்போ
நித்திரையின்னவில்லாமல்நெருங்குதேயென்னுயிர்
பிர்மதேவா

எவருமெதிரில்லாம லியல்பாகவாழ்ந்தேனே
பிர்ம்தேவா - இப்போ
அவமதாயிடங்கர்தை யகப்பட்டுத்தாழ்ந்தேனே
பிர்ம்மதேவா

முன்செய்ததீவினை மூண்டுதோவறியேனே
பிர்மதேவா - இனி
யென்செய்வேனிவ்வேளை யென்முன் னுகவாரு
பிர்மதேவா

அஞ்சலியென்றுநீ யாதரவுசெய்வாய்
பிர்மதேவா - உனைத்
தஞ்சமென்றேயுந்தன் றுள்பணிந்தேனையா
பிர்மதேவா

கட்டியக்காரன் சொல்வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் கஜேந்திரராசன் பிர்மதேவனைநோக்கித் தோத்திரம்புரிந்தும் அவர்வராமையினால் தேவதைகளை ஸ்தோத்திரஞ்செய்கிறவிதங்காண்க.

கஜேந்திரராஜன் தேவதைகளைத் துதிசெய்கிற-தரு

இ - ம் - புந்நாகவராளி - அட்தாளம்.

கண்ணிகள்.

இந்திராதிதேவருக்கப்பயம்-மெத்த அப்பயம் - இந்த
யேழைதனைரக்ஷிக்கச்சமயம்-இதுவே சமயம்
சந்திராதித்தரோஅபயம்-மெத்த அபயம் - இப்போ
தயவுவைத்தெனைக்கார்க்கசமயம்-இதுவே சமயம்

அஷ்டதிசைபாலரோசரணம் அடியேன் சரணம்
அடிமைதனைரக்ஷிக்கத்தருணம் நல்லதருணம்
மட்டில்லாமுனிவரோசரணம் அடியேன் சரணம் - இந்த
வதைதனைநீக்கிவிடத்தருணம் நல்ல தருணம்

காமாக்ஷியின்பாதம்போற்றி பாதம் போற்றி - என்மேற்
கருணைவைத்தாளுவதேகீர்த்தி நல்லகீர்த்தி
கலைவாணிதாயேயிந்நேரம் இந்த நேரம் - என்னைக்
கார்த்திரக்ஷிப்பதுன்பாரம் உந்தன் பாரம்

பூமேவுசெந்திருவேபோற்றி - அம்மா போற்றி - பிழை
பொறுத்தாளுவதேகீர்த்திந ல்ல கீர்த்தி
நிலைபத்ரகாளியிந்நேரம் இந்த நேரம் - காயம்
நெகிழாமற்காப்பதுன்பாரம் உந்தன்பாரம்

பொதுவிருத்தம்.

பலப்பலதெய்வமெல்லாம் பரிந்துநற்றுதியேசெய்தால்
அலையின்வாய்துரும்புபோல வலறியும்வரக்காணமல்
நிலையதுகலங்கிவாவி நிறைந்தபக்ஷிகளைப்பார்த்து
சிலசிலமொழிகளாகச் செப்புமவ்வேழந்தானே.

கஜேந்திரராஜன் சொல்வசனம்.

ஆ - ஆ - கருடாழ்வார்களே நானிந்தமடுவில் முதலைவாயிலகப்பட்டு மிகவும் வருத்தப்படுகிறேன் இந்தவேளை என்னைரக்ஷிக்கும்படி ஒருஉபகாரஞ்செய்யவேணும் அதென்னவென்றால் சொல்லுகிறேன்கேளுங்கள் கருடாழ்வார்களே

கஜேந்திரராஜன் சொல் கொச்சகம்.

சங்குமுககருடனங்காள் சரண்புகுந்தேன்கேளொருசொல்
பொங்குதிருப்பாற்கடற்கே போவீர்களாமாகிற்
றுங்கமுதலைக்கரியைத் துடிதுடிக்கக்கொல்லுதென்றே
மங்கையுடன்திருமாலை மகிழ்ந்தெடுத்துவருவீரோ

கட்டியக்காரன் சொல்வசனம்

அகோதெப்படியென்றால் கஜேந்திரராஜன் தென்முகமாக நோக்கிக் குயில்களைப்பார்த்துச் சொல்லுகிறவிதங்காண்க.

இதுவும் கஜேந்திரராஜன் சொல் கொச்சகம்,

வின்னகுயிலினங்காள் வாழ்த்தினேன்கேளொருசொல்
தென்னரங்கத்தெம்பெருமான் செழுங்காவுக்கேகுவீரால்
கன்னமுதலேயொன்று கரியைப்பிடித்திழுக்க
உன்னேநினேந்துருகுதென்றே யோடிவரச்சொல்வீரே.

கட்டியக்காரன் சொல்வசனம்.

அகோதெப்படியென்றால், கஜேந்திரராசனனவர் ஆகாயத்திலிருக்கின்ற மேகத்தைப்பார்த்துச் சொல்லுகிறவிதங்காண்க.

கஜேந்திரராசன்-மேகத்தைப்பார்த்துச் சொல்
கொச்சகம்.

கொண்டல்காள்தெண்டனிட்டுக் கூறுகிறேன்கேளொருசொல்
அண்டர்பிரான்வாழ்கயிலை யம்மலைக்கேயேகுவீரால்
அண்டமுதலேயொன்று தும்பிதனைத்தொடடிழுக்கக்
கண்டுவந்தோமென்றவரைக் கடிகிவரச்சொல்வீரே.

இதுவும்-கஜேந்திரராஜன்-கிள்ளைகளைப்பார்த்துச்
சொல் கொச்சகம்.

கிள்ளைகாள்தெண்டனிட்டேன் கேளீரொருவசனம்
வள்ளல்சொக்கர்மீனாக்ஷி வாழ்மதுரைக்கேகுவீரால்
கள்ளமுதலேயொன்று கரியைப்பிடித்திழுக்க
வுள்ளமுருகுதென்றே யோடிவரச்சொல்வீரே.

கட்டியக்காரன் சொல்வசனம்.

அகோதெப்படியென்றால், கஜேந்திரராசன் குயில்களைப்பார்த்துச் சொல்லுகிறவிதங்காண்க.

கஜேந்திரராசன்-குயில்களைப்பார்த்துச்
சொல் கொச்சகம்.

மாவிற்குயிலினங்காள் வாழ்த்தினேன்கேளொருசொல்
பூவில்வாழயனகர்க்கே போவீர்களாமாகில்
பாவிமுதலைக்கரியைப் பதைபதைக்கக்கொல்லுதென்றே
நாவில்வளர்வாணியுடனயன்றனைத்தவருவீரே.

கட்டியக்காரன் சொல்வசனம்.

அகோதெப்படியென்றால், கஜேந்திரராசன் மயில்களைப்பார்த்துச் சொல்லுகிறவிதங்காண்க.

கஜேந்திரராசன்-மயில்களைப்பார்த்துச் சொல்
கொச்சகம்,

பச்சைமயிலினங்காள் பணிந்துரைப்பேன்கேளொருசொல்
மெச்சும்பழனிமலை வேலரிடமேகுவீரால்

நச்சுமுதலைக்கரியை நடுநடுங்கவதுக்குதென்றே
இச்சைசொல்லிவள்ளியுட னெமுந்தோடிவருவீரே.

பொது விருத்தம்.

நீதியின்வழியேவர்வி ரிறைந்தபக்ஷிகளைப்பார்த்து
தூதனுப்பியுமேயாருந் துணைவராதிருப்பதாலே
வாதனையுடன்மெலிந்து வண்மையாய்நமையளித்த
ஜோதிதானெவனேவென்று தும்பியுந்துதிப்பதாமே

கஜேந்திரராஜன் பக்ஷிகளைப்பார்த்துச்

சொல் விருத்தம்

ஆயிரவருஷகாலம் அடர்கராவாயிற்சிக்கிக்
காயமுமொடுங்கியெந்தன் கண்கள்பஞ்சடைந்ததையோ
தாயுமாயெனையளித்த தந்தையாய்க்குருவாய்நின்ற
தாயனேநின்பொற்பாதஞ் சூட்டினேன்சிரசிற்றானே.

வசனம்.

ஆ - ஆ - கேளுங்கள் பக்ஷிசாதிகளே என்துயரத்தைஉங்களுக்குச்சொல்லியும் சற்றுவதுமனயிதங்காமலிருக்கிறது என்னுடையவினைப்பயன் ஆனால் என்னை உற்பத்திசெய்த பராபரவஸ்துவாய்விளங்கியிராநின்ற பரப்பிரம்மமூர்த்தியினதுபாதாரவிந்தத்தில் சாஷ்டாங்கமாகத் தீர்க்கதெண்டன் சமர்ப்பித்தேன் ஆனால் எவ்விதசுருபமாயிருப்பாரோ தெரியவில்லை ஆ - ஆ.

கஜேந்திரராஜன் சொல் பத்தியம்

இ - ம் - கண்டா

நீலமால்வண்ணர்களோ - நெடியமாமேருவோ
நெகிழாமலலைதாவும் நீண்டகடலோ
கனகமாணிக்கமோ - கற்படிகருபமோ
கானலோபானலோ - கதிரினொளியோ
சீர்மேவுகமலமோ - நீர்மேவுகுவளையோ
திவ்யசெங்காந்தளோ - சிலையினொளியோ
வீறுமாகாயமோ - விரிவானபூமியோ
வெண்மைதிகழ்ந்தரளமோ - வெட்டவெளியோ
ஒன்றுமறியாதநாயே னொடுங்கிநொந்தேன்
தொண்டுசெய்துநா னுந்தனைத்தொழமறிகிலேன்
கன்றுதேடிவரும் ஆவுபோற்கடிகியென்முன்
சென்றுஅஞ்சலெனமுதலைதனைச்சிதைத்திடடோ.

கட்டியக்காரன் சொல்வசனம்.

அகோதெப்படியென்றால், பராபரவஸ்துவாயிருக்கப்பட்டவருடைய சுரூபம் இவ்விதமாயிருக்குமென்றும், அவரிருக்கிற நிலையறியாமலும், பக்ஷிசாதிகளைப்பார்த்து கஜராசன் சொல்லுகிறவிதங்காண்க.

கஜேந்திரராசன்-சொல் பத்தியம்.

இ-ம் - மோகனம்.

சொர்ணமாங்குயில்களே-வர்ணமாமயில்களே
துய்யசுடர்ஜோதியைக் கண்டதுண்டோ
பூவில்வாழன்னமே-காவுபூங்கிள்ளையே
ஜீவநாயகனைநீர் கண்டதுண்டோ
கண்டபேரண்டமே-சலசக்கிரவாளமே
அண்டர்நாயகனைநீர் கண்டதுண்டோ
தும்பிகாள்வண்டுகாள்-துணையானகலும்வமே
எம்பிரான்ரூபிடங் கண்டதுண்டோ
இன்னமிவ்வேளை யெந்தன்மேற்கிருபையிலையோ
கன்னமுதனையா லென்மேனிகருகிநொந்தேன்
இன்னமிமிஷமோ வென்னுயிர்துடிக்கவறியேன
மின்னலொளியாது கர்த்தனைக்காட்டுவீரோ.

கட்டியக்காரன் சொல்வசனம்.

அகோதெப்படியென்றால், ஜலத்தில் வாழப்பட்ட ஜீவராசிகளைப்பார்த்துக் கஜேந்திரராசன் சொல்லுகிறவிதங்காண்க.

கஜேந்திரராசன் - சொல்-பத்தியம்

இ-ம்-புன்னாகவராளி.

புனல்வாழுமகரமே-கனமானசேல்களே
பூரணதயாளனைக் கண்டதுண்டோ
வெண்சங்கினங்களே-வெண்டரளசிப்பிகாள்
வேதநாயகனைநீர் கண்டதுண்டோ
படமேவுமரவமே-பண்பானகூர்மமே
பல்லுயிர்க்கிறைவனைக் கண்டதுண்டோ
வளமானதவளமே-நதிமேவுமலவமே
மன்னுகலைநாதனைக் கண்டதுண்டோ
உங்கள்மனதென்ன கல்லென்றுரைக்கலாமோ
அங்கமுதனையா லென்னுயிர்துடிக்கவசமோ
அங்கமில்லாது யிப்பவோஅரைநிமிஷமோ
பொங்கும்பரப்பிரம னெங்கேயருள்புரிகுவீரோ.

கட்டியக்காரன் சொல்வசனம்.

அகோதெப்படியென்றால், வனத்தில்சஞ்சரிக்கப்பட்ட மிருகஜாதிகளைப் பார்த்துக் கஜேந்திரராசன் சொல்லுகிறவிதங்காண்க.

மிருகஜாதிகளைப்பார்த்துக் கஜேந்திரராசன் - சொல்

பத்தியம் - இ-ம் - கண்டா.

அன்பர்னமான்களே - அடவியேனங்களே
அந்தநாயகளைநீர் கண்டதுண்டோ
கனமானபுலிகளே - வனமேவுமுயல்களே
கர்த்தனுறொங்கையோ கண்டதுண்டோ
நிறைபாவினங்களே - துறைமேவுஜப்புவே
நிர்ம்மலசுரூபனைக் கண்டதுண்டோ
திடமேவுமயிடமே - புடைசூழுங்கட்மையைகாள்
ஜெகத்திரக்ஷகனைநீர் கண்டதுண்டோ
எனதுமனவேதை துன்பநோயென்றுதீரும்
அனலில்மெழுகென்ன முதலையாலாவினொந்தேன்
மனதுயிவ்வேளை யென்மீதில்வைத்துகந்து
கனகவொளிவான வஸ்துவைக்காட்டுவீரோ.

பொது விருத்தம்.

முன்செய்ததவப்பலத்தாலறிவுண்டாகி
முனியுரைத்தமொழிப்படிக்கேகியானமெய்தி
என்செய்வோமென்பதெல்லாமறந்துவேழம்
இன்பதுன்பமில்லாத விறையோன்றன்னை
நன்மையுடன்மனதில்வைத்துதுதியேசெய்நாள்
நற்றவத்தின்பலனுமென்றறிந்துக்கொண்டு
துன்பவினைப்பயனீக்கவருவாயென்று
தூய்யவனையடிதொழுதுதுதிப்பதாமே.

கட்டியக்காரன்சொல் வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் கஜேந்திரராஜன் முறையமிட்டலறிநொந்து முன்செய்ததவப்பலத்தினால் அறிவுண்டாகி அகஸ்தியமகாமுனிவர் அருளிச்செய்தபிரகாரம் மனதிற் கியான்முண்டாகித் தன்னைத்தான் மறந்து தனக்குள் - உள்ளும் புறம்புமாய் விளங்கியிராநின்ற ஆதிமூல பரப்பிரமமூர்த்தியைத் துதிசெய்கிறவிதங்காண்க.

கஜேந்திரராஜன் - துதிசெய்கிற - அகவல்

இ-ம் - ஆரபி.

தந்தையுந்தாயாய் சற்குருவாகி
யெந்தனையளித்த யிறையவனெவனோ
அண்டரண்டமுமா - யாதியநாதியாய்ப்
பண்டைநாளதுவாய்ப் - படைத்தவனெவனோ
ஆதியந்தமுமாய் - நடுவதாய்நின்ற
ஜோதியாய்ச்சுடராய்ச் சூழ்விளக்கொளியாய்

நண்ணியவருட்பாய்-நான்மறைப்பொருளாய்
மண்ணுமாய்விண்ணாய் மாதமாநிதியாய்
ஞாயிறுய்மதியாய்-நள்ளிருட்பகலாய்
தாயவனென-தயாபரனெவனோ
கானலாய்ப்புனலாய்க்-கனவுமாய்நினைவாய்
ஊனுமாய்நிறைந்து-வுலவுவனெவனோ
புல்லுமாய்ப்பூண்டாய்ப்-புழுவுமாய்மிருகந
கல்லுமாய்மரமாய்-கண்களாய்ப்புள்ளாய்
அறிவுள்ளமனிதராய்-யாவற்றுமாகி
நெறிதவராத-நிர்ம்மலனெவனோ
தெண்டிரைக்கட்சூழ்-ஜெகதலமுதலாய்
எண்டிசையனைத்து-மீன்றவனெவனோ
உடல்தனிலுயிரா-யுள்ளுமாய்ப்புறம்பாய்
இடமுமாய்நின்ற-யிறையவனெவனோ
அகண்டபூரணமா-யறுசமயமுமாய்ப்
புகன்றருள்வேதப்-பொருட்கிறைவனுமாய்
சொல்லுமாய்சொல்லிற்-றுய்யஞானமுமாய்
நல்லவைம்பொறியாய்-நாதவிந்துவுமாய்
மேருவாயணுவாய்-விதியுமாய்நிதியாய்ச்
சாருநல்வித்தாய்-தனிமுதலெவனோ
பொன்னிறன்மணியாய்ப்-பொங்கமாய்நிறைந்த
அன்னவன்றனக்கு-அபயமேயபயம்
இவ்வகைப்பொருளா-யேகனாய்நின்ற
திவ்வியபராபரன்-திருவடியெனது
தலைதனிற்சூட்டிச்-சரண்புகுந்திட்டேன்
நிலையிதுசத்தியம்-நின்மனமிதங்கி
சாலவேமூலா-தாரத்தைநீக்கிப்
பாலனைத்தேடும்-பரிவுள்ளதாய்போல்
நஞ்செனுமுதலையால்-நைந்திடாமுனமே
அஞ்சலென்றோடிவர்-தாதரிப்பீரே.

கஜேந்திரராசன் சொல்-தரு.

இ-ம்-ஆகிரி-அடதாளம்

பல்லவி.

ஆதிமூலமே-எந்தனை ரக்ஷி-ஆதிமூலமே

அநுபல்லவி.

தில்லை ஞானவேத-நீதிதனில்வளரும்
ஜோதியின்கடைக்கணென்-மீதில்வைத்தருள்புரிவது கடனிட்டிது (ஆதிமூல)

சரணங்கள்.

அங்கம்நோகுதே - அனல்மெழுகா
பொங்கும்வேகுதே - கண்பஞ்சடைந்து
சங்குலாகுதே - என்வலியுமொ
டுங்கிப்போகுதே - அண்டபுவன
மெங்குமணிவிளக்கா-யிங்கிதமாய்நிறைந்த
பொங்கும்பராபரமின்-பங்கயப்பததெரிசனமுதவிசெய் (ஆதிமூல)

கோலனேதுய்யா - தெய்வம்பொதுவென்
மூலது பொய்யா - வருவதற்குச்
சாலமே தையா - இதுதருண
காலமா மையா - உனைநினைந்து
ஓலமிட்டலறிநொந்தேன்-மேலெனக்காதாரமில்லை
ஞாலமெங்கும்விளங்குந்திரு-பாலனேபரிபூரணவழகிய (ஆதிமூல)

வற்மமதயெனை - வன்மீன்வதைத்த
கற்மமோ வினைப் - பயனுல்வந்த
கற்ம நோயினை - அகற்றும்பரப்
பிர்ம சுரூபனே - அநாதிவெளி
நிற்மலமாகவேநின்ற சர்வலோகரக்ஷகனே
கெருவமிஞ்சிமுதலையைக் குறுகவேதரித்துடல்பொடிபடவருள் (ஆதி)

கஜேந்திரராசன் சொல்-அகவல்.

இ-ம்-எதுகுலகாம்போதி.

ஆருயிர்க்குயிரா யமர்ந்ததற்பரனே
சீர்வளரன்பர் சிந்தைவாழ்பவனே
இந்திரஜாலங்க ளேழிரண்டுலகந்
தந்திடுமுப்பாயங்கள் சகலமுமறிவாய்
நீயிருப்பிடமெது நித்தியநாயகனே
தூயநல்வேழ்வித் துலங்கிடுமிடமோ
அன்பர்தனுளத்திலோ அருமறைதனிலோ
பொன்றிகழ்மேரு புகழ்வனாதனிலோ
சத்தியந்தனிலோ சகலசாஸ்திரங்கள்
கற்றவர்மனதிலோ கனல்புனல்தனிலோ
விண்ணிலோமண்ணிலோ வித்தாளந்தனிலோ
எண்ணுநீயிருப்பிட மெவ்விடமறியேன்
இடங்கரிப்போது யென்னுயிருடலை
முடங்கிடவதைக்க முறையம்மானிடவும்
நின்செவிக்கேறுத நீதிதானுண்டோ
அன்பருக்குதவி யருள்செயாதிருந்தால்

வான்மழைபெய்யுமோ வையகந்தன்னில்
தானமுமோங்குமோ தழைக்குமோவுலகஞ்
சத்தியமேது தவநெறியேது
முத்திவீடென்னு முறைமையேதையா
அஞ்சலென்றடியேனை யாதரித்திட்டால்
மிஞ்சினின்னடியார் மேன்மைசெய்யாரோ
புவனமுநகைக்குமோ புண்ணியமுடையோர்
தவநெறிகுலையுமோ தாழுமோபுவியும்
பல்லுயிரனைத்தும்-படைத்தநீயெந்தன்
வல்வினைபோக்க-மனதில்லாவிட்டால்
ஐயனேயிதுவழி-யாகவேவந்துன்
கையிலென்னைக்-கருவதுதானுந்
திண்ணவேயளித்து-திரும்பிநீபோவாய்
அண்ணலேசத்திய-மாகவேயுரைத்தேன்
ஒருவழியாகிலு-முதவிசெய்யாவிடில்
வரும்பழியுனக்கே-வஸ்துநாயகனே.

கஜேந்திரராஜன்சொல்-திரு

இ-ம் - பைரவி- ஆதிதாளம்,

கண்ணிகள்

தஞ்சநின்பாதமலர்-நம்பினேனம்பினேன்
தற்காத்திரக்ஷிக்கத்-தருணமிதுவையா
என்செய்வேனினிமே-லென்னுயிர்போகுதே
இவ்வேளைவந்துதவயிதுநல்லசமயம்
ஓங்காரவஸ்துவாய்-பூரணமதாகியே
ஒளிபெற்றபரப்பிரம்மசுரூபனேசரணம்
நீங்காமலைம்பத்தோ-ரக்ஷரந்தன்னிலே
நிலையாயமர்ந்தருளுமெய்யனே அபயம்
ஆயிரத்தெட்டண்ட-மகில்முநிறைந்தருளும்
ஆனந்தஜோதியுனக் கபயமே யபயம்
வாய்திறந்தடியேனு-மோலமிட்டலறியே
வாடினேனிவ்வேளை-வந்துதவிசெய்வாய்
நில்லாதுகாயமினி-நிமிஷமோவறிகிலேன்
நின்மனமிதங்கிவந்தென்னைரக்ஷிப்பாய்
பொல்லாயிடங்கராற்-போகுதேயென்னுயிர்
[illegible]நாயகபரம-புருஷனே அபயம்
அண்டபகிரண்டமுத-லெண்டிசைதன்னில்வளர்
ஆருயிர்க்குதவுமொருஅண்ணலே யபயம்

தொண்டனின்னடியன்மேற்-கிருபைசெய்திவ்வேளை
துணைவந்திரட்சிப்பாய் துய்யனே அப்யம்

எவ்வுயிர்க்கிறைவனாய்-நீதானிருக்கவே
இப்பழியாருடன்செப்புவேனையா

கவ்வுதே முதலையென்-கழலிணைகளுருகுதே
கடிகிவந்தென்னுயிர்-காப்பதுன்கடனே

நீதானிருக்குமிடம்-நானறியேனையா
நித்தமும்பத்தருள முற்றவனேயென்பார்

வேதாந்தந்தன்னிலே-நடனமிடுவாயெந்தன்
மெய்வருந்திடுவதுநீயறியாதுமுளதோ

இன்றுநீவராவிடி லென்னுயிர்நில்லாது
இந்தப்பழியென்னாளு முந்தனைவிடாது

சென்றுவந்திப்போது அஞ்சலியுதவிசெய்
திருவடிவணங்கினேன்சிறியேனடிநாயேன்.

கஜேந்திரராஜன்சொல் விருத்தம்.

வாசகப்பா.

நீயிருக்குமிடமறியேனாதிமூல
நிர்மலனே யிடங்கரால்வருந்திநொந்தேன்
தாயிருக்கப்பிள்ளைபசித் தழுவதுண்டோ
தனிமுதலேயீதுனக்குத்தருமந்தானோ
காயிருக்கக்கொடிசோர்ந்தால் வேருண்டோசொல்
கர்த்தனேநின்கடைக்கண் பார்வைதந்து
சேயிருக்குமிடந்தேடி வந்திப்போதே
சீக்கிரத்தில்முதலைதனைச்சிதைத்திடாயோ.

கஜேந்திரராஜன்சொல் தரு

இ-ம்-ஆரபி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

கண்ணேயென் கண்மணியே கண்ணிறொளிவேயுனக்கபயம்
எண்ணறுதுயர்தனில்மூழ்கினே னிறைவாவோடிவாரும்

வல்லாண்மையுஞ்சொல்லாண்மையு-மெல்லாமிங்கேயழிந்தேன்
பொல்லாயிடர்கடல்மூழ்கினேன் பொருளேயோடிவாரும்

கதியேதரும்பதியேயயன்-விதியோயென்னசதியோ
துதியேயன்பர்மதியேதயாநிதியே யோடிவாரும்

கோலனேகுணசீலனேயனு கூலனேயுன்னைநினைந்தேன்
ஞாலமேயென கூவினேனாதி-மூலமேயோடிவாரும்

கலையாய்வேதநிலையாய்மேரு-மலையாய்நின்றபொருளே
துலையாயிடர்தனைநீக்கிட் சுடரேயோடி வாரும்

மண்ணாயுயர்விண்ணாய்ஞானக்-கண்ணாய்நின்றபரனே
புண்ணாயுடல்நொந்தேன்வேதப்பொருளேயோடிவாரும்

ஆணாய்பெண்ணுமலியாயுரு-வழியாநிற்குமணியே
வீணாயுயிர்போகாமுன்னம்-விமலாவோடிவாரும்

பொன்னாய்பொன்னின்மணியாய்பல-பொருளாய்நின்றவொளியே
என்னால்துயரப்படவல்லனோ-யிறைவாவோடிவாரும்

கஜேந்திரராஜன்சொல்-விருத்தம்.

வாசகப்பா.

உடன்பிறந்தார்பாகத்தைக் கெடுத்திட்டேனோ
ஊண்தனில்நஞ்சூட்டி யுயிர்மாய்த்தேனோ
கடன்கொடுத்தார்தமைமோசஞ்செய்திட்டேனோ
கடுங்கானில்வழிமறித்துப் பறித்திட்டேனோ
அடங்காமற்பெரியோரைப் பழித்திட்டேனோ
அந்நாளின்வினைப்பயனோவறிகிலேன்யான்
இடங்கர்கையிலகப்பட்டே னாதிமூலத்
திறையவனேவந்தடியேனிடர்தீர்ப்பாயே.

இதுவுமது.

எழுதியயனென்றலையில் விதித்தவாறோ
யிடங்கருக்கின்றிரையானே னிறைவாபோற்றி
தழுவியெனையாதரிப்பாரொருவரில்லைத்
தனிமுதலேநின்பாதஞ் சரணடைந்தேன்
வழியறிந்துவுனைக்காண-வகையுங்காணேன்
வருந்திநொந்தேனஞ்சலென்றேவாராவிட்டாற்
பழியுனக்கேநேர்ந்துவிடுமாதிமூலப்
பராபரனேயுனக்கபய மபயந்தானே.

பொது விருத்தம்.

ஆதிமூலருளேயென்று அத்திதான்முறையிட்டேங்க
வேதங்கள்தேடிக்காணு-வித்தகன்வைகுந்தத்தில்
மாதவர்தேவர்கூடி-மலர்மழைபொழிந்துவாழ்த்த
கோதைமாரிருவரோடுங்-கொலுவினில்வருகின்றாரே

கட்டியக்காரன் சொல்வசனம்.

அகோதெப்படி யென்றால்-இப்படியாக ஆதிமூலமேயென்று கஜேந்திரராஜன் முறையமிடும்போதுலட்சுமிசமேதராய் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் கொலுவுக்கு வருகிறவிதங்காண்க.

ஸ்ரீமந்நாராயணமூர்த்தி வருகிறதரு
இ-ம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.
கண்ணிகள்.

பரவாசுதேவர்கொலுவில்வந்தார் - உல்லாசமாக
ஸ்ரீஹரிதேவர்கொலுவில்வந்தார் - இன்பமுடனே
தேவர்பூமாரிபொழிக் தேத்த - ஜெயஜெயென்று
சித்தவித்தியாதரர்கள் வாழ்த்த - சம்ப்ரமுடனே
ஆவலாயாழ்வார்களடி தாழ - வேதநூலோதி
அருமறைமாதவர்கள்சூழ - வைபோகமாகக்
கின்னர்கிம்புருடர்கள்கொண்டாட - கெம்பீரமுடன்
கெருடகாந்தருவரிசை பாட - இருபுறமுஞ்
சொர்ன்னசாமரையருகில் வீச - செந்திருமாது
தோத்திரஞ்சொல்லிநயம் பேச - உல்லாசமாகப் (பரவாசு)

ஸ்ரீமந்நாராயணர்சொல் வசனம்.

ஆரப்பா சிஷியா.

சிஷியன்சொல் வசனம்.

சரணஞ்சரணஞ்சுவாமி நீராரோ தெரியவில்லை-உமதுபேரென்ன-ஊரென்ன-உமதுகோலமென்ன-கோத்திரமென்ன-எனக்குச்சவிஸ்தாரமாகத்தெரியச்சொல்லுஞ் சுவாமி.

ஸ்ரீமந்நாராயணர்சொல் வசனம்.

ஆறாற்சொல்லுகிறேன்கேளுஞ் சிஷியா.

ஸ்ரீமந்நாராயணர்சொல்திபிதை.

மச்சக்கூர்ம வராகநாரசிம்ம
வாமனபரசிராமபலராமகிருஷ்ணகலிகா.

சிஷியன் சொல் வசனம்.

இந்நேரஞ்சொல்லியும் ஒன்றுந்தெரியவில்லை நன்றாய்த்தெரியும்படி அர்த்தத்துடன் சொல்லுஞ் சுவாமி.

ஸ்ரீமந்நாராயணர் சொல்வசனம்.

ஆறாற்சொல்லுகிறேன்கேள்.

விருத்தம்.

சோமுகனை வதைத்திடவே மச்சமானோம்
சுரர்க்கமுதந் தந்திடவே கூர்மமானோம்
நாமிரணி யாக்ஷதர்க்காய் வராகமானோம்
நரசிங்க மாயிரணிய னுடல்கிழித்தோம்
வாமனமாய்ப் புவியளந்தோம் பரசிராம
ரகுராம பலராம கிருஷ்ணனாகிக்

சோமுகரா வணன்கஞ்சன் றனைவதைத்து
கலிக்காவ தாரமுள்ள கர்த்தனுமே.

வசனம்.

கேளுஞ்சிஷியா பிரம்மாவின் வேதத்தைச் சோமுகாசூரன் பிடுங்கிக்கொண்டு சமுத்திரஜலத்தில் ஒளித்திருந்தவனை நாம் மச்சாவதாரமெடுத்து அந்தச் சோமுகாசூரனைவதைத்து வேதத்தைக் கொண்டுவந்து பிரம்மதேவனுக்குக் கொடுத்து எங்கும் பரிமளிக்கச் செய்த ஸ்ரீமந் நாராயணமூர்த்தியப்பா சிஷியா.

சேஷன் சொல் வசனம்.

இன்னம் என்ன அவதாரமெடுத்தீர் சுவாமி.

ஸ்ரீமந்நாராயணர் சொல் வசனம்.

(சுரர்க்கமுதந் தந்திடவே கூர்ம மானோம்) முப்பத்துமுக்கோடி தேவர்களுக்கு அமுதஞ்சாதிக்கத் தக்கதாகத் திருப்பாற்கடலில் மந்திரகிரிபர்வதத்தை மத்தாகநாட்டி ஆதிசேஷனைக் கயிறுகப் பூட்டிக் கடையும்போது அந்த பர்வதம் பாதாளத்தில் அமுந்திப்போகாமல் நாம் கூர்மாவதாரமெடுத்து அந்தப் பர்வதத்தைத் தாங்கி அமுதங்கடைந்து தேவர்களுக்குக் கொடுத்து ரட்சித்தோம் அப்பா சிஷியா.

சேஷன் சொல் வசனம்.

பின்னும் என்ன அவதார மெடுத்தீர் சுவாமி.

ஸ்ரீமந்நாராயணர் சொல் வசனம்.

(நாமிரணி யாக்ஷதர்க்காய் வராகமானோம்) கேளாய் சிஷியா இந்தப் பூமியைப் பாயாகச் சுருட்டிக் கொண்டுபோய் பாதாளத்தில் ஒளித்துக்கொண்டிருந்த இரணியாக்ஷதனை நாம் வராக அவதாரமெடுத்து அவனைச் சம்மாரஞ்செய்து பூமியை எப்போதும்போல விரித்து சகலஜனங்களையும் ரக்ஷித்தோஞ்சிஷியா.

சேஷன் சொல் வசனம்.

இன்ன மென்ன அவதாரமெடுத்தீர் சுவாமி.

ஸ்ரீ மந்நாராயணர் சொல் வசனம்.

(நரசிங்கமா யிரணியனுடல் கிழித்தோம்) கேளாய் சிஷியா திரிலோகத்திலும் (நாராயண நமோ) வென்று நம்முடைய பேரைச் சொல்லாமல் இரணிய நமோவென்று தன்பேரைச் சொல்லச் சொல்லித் திட்டஞ்செய்த இரணியனை நாம் நரசிங்க அவதார மெடுத்து அவனைச் சம்மாரஞ்செய்து பிரகலாதனை ரட்சித்தோம் சிஷியா.

சேஷன் சொல் வசனம்.

இன்னமென்ன அவதார மெடுத்தீர் சுவாமி.

ஸ்ரீமந்நாராயணர் சொல் வசனம்.

(வாமனமாய்ப் புவியளந்தோம் பரசுராம) கேளாய் சிஷியா நாம் வாமனவதார மெடுத்து பெலிச்சக்கிர வர்த்தியி னிடத்தில் மூன்றடிமண் தானமேயோத்

திஉலகங்களனைத்தும் நம்முடையபாதத்தில் ஓரடிக்குள்ளாக் அடக்கி யளந்து அந்த பெலிச்சக்கிரவர்த்தியை ரட்சித்தோமு சிஷியா.

சீஷன் சொல் வசனம்.

இன்ன மென்ன அவதாரமெடுத்தீர் சொல்லுஞ் சுவாமி.

ஸ்ரீ மந்நாராயணர் சொல் வசனம்.

பூலோகத்தில் ஜமதக்கினி புத்திரனாகிய பரசிராம அவதாரமெடுத்து கார்த்திகை வீரியார்ச்சுனனைச்சம்மாரஞ்செய்துவைத்த ஹரிகேசவனுமாகும் சிஷியா.

சீஷன் சொல் வசனம்.

இன்னமும் தாங்களெடுத்த அவதாரமென்ன திருவாய் மலர்ந்தருள வேண்டுஞ் சுவாமி.

ஸ்ரீ மந்நாராயணர் சொல் வசனம்.

அயோத்தியாபுரியை யாளப்பட்ட தசரதமகாராஜ புத்திரனாகிய (ஸ்ரீராமாவதார) மெடுத்து இராவணன் கும்பகர்ணன்முதலாகிய ராக்ஷதர்களைச் சம்மாரஞ் செய்து விபீஷணனை ரக்ஷித்தோம் சிஷியா.

சீஷன் சொல்வசனம்.

பின்னும் இன்னந்தேவரீர் கொண்ட அவதாரத்தைச் சொல்லவேணுஞ்சுவாமி.

ஸ்ரீ மந்நாராயணர் சொல் வசனம்.

பலராம அவதாரம் - கிருஷ்ணவதாரமா யுதித்து ராக்ஷத வர்க்கங்களையெல்லாம் வேருடன் கருவறுத்து பாண்டுபுத்திர ராகிய (தருமராஜன் - வீமன் - அர்ச்சுனன் - நகுலன் - சகாதேவன் - திரௌபதி) இவர்களை யெல்லாம் பூலோகத்தில் ரக்ஷித்த கர்த்தனுமாகும் அப்பா சிஷியா.

சீஷன் சொல் வசனம்.

இன்னமென்ன அவதாரங்கொண்டீர் அடியேனுக்குத் திருவுளம் பற்ற வேண்டுஞ் சுவாமி.

ஸ்ரீமந்நாராயணர் சொல் வசனம்.

பூலோகத்தில் (கலியவதார) மெடுத்து துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்து பாவங்களை யறுத்து தருமத்தை நிலைநிறுத்தி நம்மை நினைக்கப்பட்ட அடியார்கள் மனதில் வாசமாயிருந்து முத்திமோக்ஷங்கொடுத்து ரக்ஷித்த மஹானுபாவர் நாமாகுஞ் சிஷியா.

கஜேந்திரராஜன்- ஸ்ரீமந்நாராயணரைத் துதி-தரு

இ-ம்-பூபாளம்-ஏகதாளம்.

பல்லவி.

ஹரிநாராயணகோபாலா-அச்சுதானந்தமச்சாவதாரா
வாமனரூபா-நாரசிங்காமுகுந்த
கேசவாமுரஹரி-தேவாகோபாலா (ஹரிநாராயண)

அநுபல்லவி,

பரிபூரணகுண-வாசுதேவனே
விரிவாகியவாதிமூலாதாரப்பொருளே (ஹரிநாராயண)

சரணங்கள்.

அண்டபுவனமெல்லா-முண்டுமிழ்ந்தருள்செய்யா
ஆதிபராபர-ஜோதிதயாநிதி (ஹரிநாராயண)

பாற்கடல்மேவிய-கார்க்கடல்வண்ணனே
ஆர்க்குமமுதளிக்கும்-அகிலரக்ஷகதேவா (ஹரிநாராயண)

தேவசிகாமணி-மூவர்கள்முதல்வனே
பாவவிநாசனே-ஜீவதயாபரா (ஹரிநாராயண)

பொது விருத்தம்.

இவ்வண்ணம்வேழங்கூற-வெழிலுற்றதிருவைகுந்தம்
பைவண்ணமாயிருந்தான்-பணமுடிசேஷன்மீதில்
செவ்வண்ணமலராள்பூமி-தேவியும்பதம்பிடிக்க
மைவண்ணப்பள்ளிமேவி-மகிழ்ந்துவீற்றிருப்பர்தாமே

கட்டியக்காரன்சொல் வசனம.

அகோதெப்படியென்றால் — கஜேந்திரராஜன்முதலைவாயில் அகப்பட்டுமி குந்தவருத்தத்துடன் (ஆதிமூலமே-ஆதிமூலமே) யென்று முறையிடும்போது கோடிசூரியப்பிரகாசம் பொருந்திய வைகுந்தத்தில் ஆயிரம் பணமகுடத்தையு டையஅனந்தசயனத்தின்மீதில்செந்தாமரைக்கமலத்தில் வாசமாயிருக்கப்பட்ட இலட்சுமியும் பூமிதேவியும்-ஸ்ரீமந்நாராயணமூர்த்தியினுடைய திருவடிகளைக் க மலக்கையினாற்பிடிக்க நீலமேகச்சாமளம்போன்ற அந்தஸ்ரீமந்நாராயணமூர்த்தி யோகநித்திரையாயி லிருக்கிறவிதங்காண்க.

பொது விருத்தம்.

அனந்தனேநின்சுவாசத்தை-யடக்கிடுமென்னமாயோன்
கனிந்தசொல்லுடனேதிவ்ய-சரத்திருவலமர்த்தநாகம்
மனந்தனில்மறச்சொடுக்க-மதகளிறபயமென்ன
உணர்த்தசொற்செவியிற்கேட்டு-வொருமுதற்றுடித்திட்டாரே.

இதுவும்-பொது விருத்தம்.

சதிருள்துயில்துறந்து தண்டுழாய்மாலைமார்பன்
கதிரொளிதிகிரிசங்கம்-கார்முகந்தண்டும்வாளும்
எதிரில்லாமேவாவணமுநீக்கி யெழிற்றுதிக்காத்தைப்பற்றி
நதிதனிற்கரியைக்காக்க நாரணர்வருகின்றாரே.

கட்டியக்காரன்சொல் வசனம்.

அகோதெப்படியென்றால் — ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் யோகநித்தி ரையிலிருக்கும்போது கஜேந்திரராஜன் ஆதிமூலமேயென்று முறையிடுஞ்சத்தம்

ஸ்ரீமந்நாராயண மூர்த்தி திருச்செவியில் நன்றாய்க் கேழ்க்கும்பொருட்டாய் ஆதிசேஷனுடைய சுவாசயினாச்சல் சமுத்திரகோஷ்டம்போலிருப்பதால் அந்த அனந்தனைப்பார்த்து ஸ்ரீமந்நாராயணமூர்த்தி தம்முடையமலர்க்கரத்தினால் சுவாசத்தைச் சற்றுநேரம் ஒடுக்கும்படியாயமர்த்த அந்தப்படியே ஆதிசேஷன் சுவாசத்தையொடுக்க கஜேந்திரன்முறையிடுகிறசத்தம் திருச்செவியிற்கேட்டமாத்திரத்தில்திடுக்கிட்டெழுந்து கஜேந்திரனைரட்சிக்கும்பொருட்டு ஸ்ரீதேவியின்கரத்தைப்பிடித்துக்கொண்டு கருடவாகன மேறாமலும்-சங்கு-சக்கரம்-கோதண்டம்-தண்டு வாள்- இவைகள்ஒன்றுமெடாமலும்தன்னைத்தான்மறந்துகால்நடையாகவாய்வேகமனோவேகமா யோடிவருகிறவிதங்காண்க.

ஸ்ரீமந்நாராயணர்-வருகிற-தரு

இ-ம்தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

வைகுந்தவாசர்வாரார்-ஜோதிப்பிரகாசர்
வைகுந்தவாசர்வாரார்

அநுபல்லவி.

வைகுந்தவாசர்வரசார்-மதகரிதன்னைக்காக்க
மெய்யென்றவர்க்குமெய்யன்-பொய்யென்றவர்க்குப்பொய்யன்(வைகுந்த)

சரணங்கள்.

தேவர்புகழ்விலாசன்-திருமருவு மூலாசன்
ஆவித்துணையாமீசன்-அனைவர்தொழும்பிரகாசன் (வைகுந்த)
அனந்தசயனம் நீக்கி-ஆழியுவணம்போக்கி
மனந்தனிலன்புண்டாக்கி-வாரணமிடம்நோக்கி (வைகுந்த)
சித்தியளிக்கும் கோடி-திருமகளுடன் கூடி
அத்தியைக்காக்கவோடி-ஆழ்ந்தமடுவினைத்தேடி (வைகுந்த)

பொது விருத்தம்.

பத்தனைரட்சிக்கின்ற-பராபரன்றடக்கைப்பற்றி
சித்திரக்கமலமாது-சென்றுபின்னடக்கொணமல்
மெத்தவும்வருத்தமாகி-மேகலைகழல்கள்சோர
வுற்றவாறறிந்திடாம-லோங்கியேவருந்திச்சொல்வார்

கட்டியக்காரன்சொல் வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ஸ்ரீமந்நாராயணமூர்த்தி இலட்சுமியைக்கையிற்பிடித்துக்கொண்டுவாய்வேகமனோவேகமாய் ஓடிவருகையில் வருத்தமாய்பின்னால்நடக்கமாட்டாமல் பாதங்கொப்பளிக்கதிரேகம்வேர்க்க கூந்தல்சரிய-கலைசோர-மிகவுந்துயரத்துடன்-நடந்தகாரணங்கள் ஒன்றுந்தெரியாமல் சுவாமியைப்பார்த்து இலட்சுமி சொல்லுகிற விதங்காண்க.

இலட்சுமி - சுவாமிக்குச் சொல் - தரு
இ - ம் பைரவி - ஆதிதாளம்.
கண்ணிகள்.

கருடன்மேலேறுமற் காலநடையாய்ப்போற
காரணமேதையா - யென்சுவாமி
பொரும்பொரும்போகாதே - வுமக்குத்துயருண்டானு
புதுமையையருள்செய்யு - மென்சுவாமி

அண்டம்பிளந்திட் - டடியோடேவேர்சாய்ந்து
அவனிமேல்விழ்ந்ததோ யென்சுவாமி
பண்டுபோல்வேதத்தைச் - சோமுகன்விழுங்கியே
பாதாளத்தொளித்தானோ யென்சுவாமி

மேகமிடிந்ததோ - விண்ணவர்நடுங்கியே
மெலிந்துதளர்ந்தாரோ யென்சுவாமி
நாகம்பூமியைச் சுமந்திடமாட்டாமல்
நன்முடியிளைத்ததோ யென்சுவாமி

மெத்தவருத்தமாய் - சிற்றிடைநோகுதே
மெள்ளநடவுமையா யென்சுவாமி
உற்றவார்த்தையெனக்குத் - தெரிந்திடவிப்போது
வுண்மையாயுரைசெய்யு மென்சுவாமி

பொதுவிருத்தம்.

கமலையின்கரத்தைப்பற்றிக் கார்வண்ணனோடக்கண்டு
இமையவர்முனிவர்சித்த ரெண்டிசைபாலர்கின்னர்
சமையநான்முகனுங்கூடிச் சமுத்திரந்திரண்டாப்போலு
மமைவதையறிவோமென்று மக்கணம்வருகின்றாரே

கட்டியக்காரன் சொல்வசனம்.

ஆகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் லட்சுமி கையை ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் பிடித்துக்கொண்டு வாய்வேக மனோவேகமாய் வருகிறவேடிக்கையை அஷ்டதிக்குப் பாலகர் - பிரம்மதேவன் - தேவதைகள் - முனிவர்கள் சித்தவித்தியாதரர் முதலானவருங்கண்டு நடுநடுங்கிப் பின்றொடர்ந்து வருகிற விதங்காண்க.

திக்குப்பாலகர்-பிரமன்- முனிவர்-முதலானவர்
வருகிற - தரு - இ - ம். புந்நாகவராளி-ஆதிதாளம்.
பல்லவி.

வந்தாரெண்டிசைப்பாலர் - லையகஞ்சளதிர்ந்திடவே
வந்தாரெண்டிசைபாலர்

அநுபல்லவி,

இந்திரனக்கினிகுபேர - னீசன்வருணனேமன்
நிருதியேநிருதிவாய்வு - முனிதியாமலரோனும் (வந்தா)

சரணங்கள்.

கின்னரர்கிம்புருடர் – கெருடகாந்தருவரும்
பன்னுமறைமுனிவரும் – பண்புடையதேவருடன் (வந்தா)

சித்திவித்தியாதரரும் – திறமுடையவிஞ்சையரும்
பத்தர்கள்கோடான்கோடி பார்தனில்ஜெயஜெயென்ன (வந்தா)

காரானைதன்னைக்காக்க – கடிகிமுன்னமேசென்று
நாராயணர்பக்கலுக்கு – நாடியேநடைநடந்து (வந்தா)

தேவர்கள் பரமசிவனுக்குச் சொல் விருத்தம்.

திங்கள்செஞ்சடையாபோற்றித் திகழுமுக்கண்ணுபோற்றி
பங்கயக்கண்ணனன்றும் பாவைதன்கரத்தைப்பற்றிப்
பொங்கமாயோடுகின்ற புதுமைதானேதோவையா
யெங்களுக்கறியநன்று யியம்புவீரியம்புவீரோ

வசனம்.

சரணஞ் சரணஞ் சுவாமி பார்வதிசமேதராகிய பராபரவஸ்துவே வைகுந்தத்திலிருந்த ஸ்ரீமந்நாராயண மூர்த்தியானவர் மகாலட்சுமியைக் கையிற் பிடித்துக்கொண்டு வாய்வேக மநோவேகமாய் கேசரிமார்க்கமாகப் போகிற காரணமென்னமோ யெங்களுக்குத்தெரியவில்லை அதை தேவரீர் அடியார்களுக்குத் திருவுளம் பற்றவேணுஞ்சுவாமி.

பரமசிவன் தேவர்களுக்குச்சொல் விருத்தம்.

அம்புயந்தனில்வாழ்வோனே ஆயிரங்கண்ணுகேளீர்
உம்பர்கள்புகழ்திரிகூட முயர்வரைச்சாரல்தன்னில்
தும்பியையிடங்கர்பற்றித் அடித்திடவதைக்குதென்றே
இன்பமாயதனைமீட்க யேகுறார்மாயோன்றானே

வசனம்.

கேளீர் பிரம்மாவே – தேவேந்திரனே – ஸ்ரீ மந்நாராயணமூர்த்தி போகும்விதம் உங்களுக்குத் தெரியாதா ஆனால் சொல்லுகிறேன் திரிகூடபர்வதச் சாரலிற்கருகே ஒருதடாகத்தில் கஜேந்திரனென்றுசொல்லப்பட்ட யானையை முதலை பிடித்துக்கொண்டு ஆயிரவருஷகாலமாய் இரவும்பகலு மெத்த வருத்தத்துடன் போராடுகையில் அந்தயானை ஆதிமூலமே யென்று முறையிடும்போது அந்தசத்தம் வைகுந்தத்தில் ஸ்ரீ மந்நாராயண மூர்த்திகேட்ட மாத்திரத்தில் சங்கு சக்கரம் – கோதண்டம் – கட்க – கதாயுதமென்றமிதும் கருடவாகனத்தின் பேரிலேறுமனும் தன்னைத்தான் மறந்துவிட்டு மகாலட்சுமிகையைப் பிடித்துக்கொண்டு கால்நடையாக அந்த யானையை ரட்சிக்கும் பொருட்டாய் போகின்றார் ஆகையால் நா மனைவோரும் போய்வருவோம் வருவீர்கள்.

பிரம்மாவும் தேவேந்திரனும் சொல் வசனம்

அப்படியே பேர்வோம் சுவாமி.

தேவர்கள் ஸ்ரீ மந்நாராயணரைத் துதிசெய்கிற தரு

இ ம்-பூபாளம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஹரிஹரிநந்தகோவிந்தமுகுந்தா
அநாதரக்ஷக சரணையா
பரிமகள்சுந்தரி திருமகள்தலைவா
பாபவிநாசனே சரணையா
முராஹரிதேவகி புத்திரமித்திர
முகுந்தகேசவா சரணையா
சுரர்புகழ்சிதர தாமோதரஹரி
ஜோதியனந்தா சரணையா
வாமனராய் கூர்மாவதாரா
மாதவகோபால சரணையா
சாமளவர்ணா-பூமகள்கொழுநா
சர்வதயாபர சரணையா
பூரணவழகிய நாரணவரதா
புண்டரீகாக்ஷா சரணையா
காரணநித்திய கல்யாணதயாநிதி
கருணானந்த சரணையா

பொது விருத்தம்.

பூமகள்முகத்தைநோக்கான்-புணரிசூழ்வதுபோல்வந்த
க்ஷேமவானவனைநோக்கான்-திருவின்கைவிடவுஞ்செய்யான்
தாமரைமலர்க்கண்ணனுந் தன்னையுமறந்தேயோடி
நாமமேதுதிக்கும்யானை-நடுக்கத்தைக்கண்ணுற்றானே

கட்டியக்காரன் சொல் வசனம்.

அதேதெப்படியென்றால் இப்படியாகச்சமுத்திரகோஷ்டம்போல்வரப்பட்ட தேவதைகள்முதலான அஷ்டதிக்குப் பாலகரையுந் திரும்பிப்பாராமலும் மகாலட்சுமி முகத்தைப்பாராமலும் அந்தலட்சுமியின்கையைப்பிடித்துக்கொண்டு செந்தாமரைக்கண்ணராகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தி தன்னைத்தான் மறந்துவிட்டு வாயுவேகமனோவேகமாயோடி அந்த திரிகூடபர்வதச் சாரலிற்கருகேயிராநின்ற தடாகத்தின்கரையிற்போய்நின்று ஆதிமூலமேயென்று முறையிடுகிறயானையினிடுக்கத்தைப் பார்த்துச் சொல்லுகிறவிதங்காண்க.

ஸ்ரீமந்நாராயணர்-கஜேந்திரராஜனுக்குச்

சொல் விருத்தம்.

அஞ்சலிதந்தோந்தந்தோ-மறிவுள்ளகஜராஜேந்திரா
மிஞ்சியேவந்தோமுந்தன்-வேதனையனைத்துமிப்போ
தஞ்சிடக்கணத்தினுள்ளே-சுட்டொளிதிகிரியொன்றால்
வஞ்சகமுதலைதன்னை-வதைத்துன்னைரட்சிப்போமே

வசனம்.

வாராய்கஜராஜேந்திரா-பயப்படாதே-பயப்படாதே-உன்னைரட்சிக்கும்பொருட்டாய்இதோவந்தோம்-வந்தோம்-உன்னைச்சூழ்ந்திராநின்ற மூன்றுள்வினைப்பயன்முதலாகிய நாம் உன்னுடையவருத்தமும் நீங்கும்படியாக நம்முடைய சக்கரத்தினால் அந்த முதலையைக்கண்டித்து உன்னைரட்சிக்கிறோம் பயப்படவேண்டாம் கஜராஜேந்திரா.

கஜராஜேந்திரன் சொல்-அகவல்

இ-ம்-எதுகுலகாம்போதி-

தெள்ளியவைகுந்தத்-திருமனைதனிலே
பள்ளிகொண்டிருக்கும்-பரமனேகேளாய்
ஆயிரவருஷம்-அருர்புனல்மடுவில்
தீயெனுமுதலைவாய்சிக்கினான்மெலிந்து
ஆதிமூலப்பொருள்-அண்ணலேயென்று
நீதியாயழைக்க-நெடியபன்னகத்தில்
உறங்குவோன்போல-வுனதுதேவியர்கள்
நறுக்கமலப்பதம்-நாடியேபிடிக்க
தொம்மையிருபுறந்-தாசர்கள்வீச
பூமறையமரர்கள்-பொழிந்துவணங்க
கின்னரர்கிம்புருடர்-கெருடகாந்தருவர்
இன்னிசைபாடி-யிறைஞ்சிடவொருபால்
சித்தவித்தியாதரர்-திறமுள்ளவிஞ்சையர்
பத்தர்கள்முனிவர்-பல்லாண்டுகூற
ஆழ்வாராதிகள்-அருமறையதனால்
வாழிவாழியென-மலர்ப்பதந்துதிக்க
இவ்வகைகோலமா-யிருப்பவைதநீகஙிச்
செவிகேளாதுபோல்-திடுக்கிட்டெழுந்து
மாதுள்ளமங்கையை-மலர்க்கரம்பற்றிக்
கால்நடையாகக்-கடுவெளிகாட்டில்
கல்லுமுள்ளுறுத்தக்-கனிவெயிலெரிப்ப
மெல்லியர்மேனி-வேர்வைகொப்பளிக்க
இத்தலம்வந்தது-மென்னகாரணமோ
பித்தனுன்செய்த பெருந்தவப்பயனோ
பொற்கொடையெங்கே-பொலிதசாரங்கம்
சக்கரமெங்கே-தண்டுவாளெங்கே
கருடவாகனமெங்கே-கானகந்தனிலே
திருடர்கள்பறித்துச்-சென்றனரோசொல்
கபடநாடகவித்தை-காட்டவந்தீரோ
இபந்தனைரக்ஷிக்கவயிதுவல்லோவேஷம்

எந்தனைவதைக்கு-மிடங்களைக்கொல்லச்
சிந்தையினிலெந்தாற்-சிதைந்திடாதுளதோ
பிள்ளைமேற்கோபம்-பெற்றவர்க்கிருந்தால்
அள்ளவேதண்டிக்கத்-தகம்பனுர்கடமை
இப்படியிருக்க-மிடங்கர்தன்வாயில்
கொப்பெனப்பிடித்துக் கொடுத்தெனைவதைத்தாய்
உன்மனக்கோபம்-ஒழிந்ததோசுவாமி
வன்மமோயீதென்ன-வல்வினைப்பயனோ
சீதரமுகுந்தா-ஜெகரக்ஷகனே
மாதவாவுந்தன்மலரடிதொழுதேன்
சீக்கிரமுதலையைச்-சிதைத்தடியேனைக்
காக்கவுமுந்தன்-கழலிணைவணங்கத்
தூய்யமெய்ஞ்ஞானந்-துலங்கவேமனத்துள்
ஐயனேயளித்தெனை-யாண்டுகொள்வாயே.

ஸ்ரீமந்நாராயணர் சொல்விருத்தம்.

மதிமிகுமாயோனுழி வருவதைப்பொருந்தநோக்கி
நதிதனில்வேழந்தன்னை நடுங்கச்செய்முதலைமெய்யைச்
சிதைந்திடப்பொடியதாக்கிச் சீக்கிரங்கரியையென்முன்
கதிபெறத்தக்கதாகக் கரைதனிலேற்றுவாயே.

கட்டியக்காரன் சொல்வசனம்.

அதோதெப்படியென்றால், ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் சக்கரத்தைக் காணோமென்று திரும்பிப்பார்க்குமுன்னமே வலதுபாரிசத்தில் கோடிசூரியப்பிரகாசமாய் வந்திருக்கப்பட்ட சக்கரத்தைப் பார்த்துச் சொல்லுகிறவிதங்காண்க.

ஸ்ரீமந்நாராயணர்சொல் வசனம்.

வாராய் சக்கரத்தாழ்வாரே இந்தக்ஷணம் நீபோய் அதோ அந்தமடுவில்யானையைப் பிடித்துக்கொண்டிருக்கப்பட்ட முதலையைத் துண்டுதுண்டாகக் கண்டித்து கஜேந்திரனை நமதுமுன்பாகக்கொண்டுவந்துவிடுவாய்சக்கரத்தாழ்வாரே

சக்கரத்தாழ்வார் சொல் வசனம்.

அப்படியே முதலையைச்சிதைத்து யானையைக்கொண்டுவருகிறேன்சுவாமி.

சக்கரம் - முதலையைக் கண்டிக்கிற-தரு

இ-ம் - சங்கராபரணம்- மிசுரதாளம்.

சரணங்கள்.

சக்கரம்பாய்ந்து புனலில்முதலை
தலையைத்துண்டா யறுக்குமே
வக்கரத்தந்தங்களெல்லாம்பொடியாய்
மண்ணினிலுதிர்ந்திட நொறுக்குமே (சக்கரம்)

நெஞ்சொடுமார்பைக் குடலைக்கிழித்து
நிணத்தைக்கெல்லி யெடுக்குமே
பஞ்சதுபோலே யெலும்பையொடித்து
பறக்கநீரில் விடுக்குமே (சக்கரம்)

மண்டைமூளைக ளெல்லாஞ்சிதற
வாட்டிவாட்டித் தொளைக்குமே
தொண்டையைப்பிளந்து குண்டியினுதிரஞ்
சொரியக்கூராய் பிளக்குமே (சக்கரம்)

நீண்டவாலைத் துண்டுதுண்டாக்கி
நீரில்மீனுக்கிரை யாக்குமே
தாண்டியக்கால்களைக் குறைத்துமெலியத்
தக்ஷணமுயிர்தனைப் போக்குமே (சக்கரம்)

பொது-விருத்தம்.

உரைசெய்புமுன்னமாழி யோடியேமடுவிற்பாய்ந்து
வரையெனுமுதலைதன்னை வகுத்துடல்பொடியதாக்கி
இரையெனமீனுக்கீய்ந்து யிபந்தனைக்கரையிலேற்றி
அரிபதம்வந்துபோற்றி அங்குவீற்றிருந்ததன்றே.

கட்டியக்காரன் சொல்வசனம்.

அகோதெப்படியென்றால், ஸ்ரீமந்நாராயணமூர்த்தி சக்கரத்தைப் பார்த்து திருவுளம்பற்றியருளியபடிக்கு ஒருநிமைப்பொழுதில் சக்கரம்வந்து மடுவிற்பாய்ந்து முதலையைக் கண்டித்து பொடிப்பொடியாகச்செய்து மீன்களுக்கு இரையாகக்கொடுத்துக் கஜேந்திரனுடைய நடுக்கத்தைத்தீர்த்து ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின் திருக்கரஞ்சேர்ந்தபின்பு கஜேந்திரன் அநேகக்கடவுளைத் தோத்திரஞ் செய்கிறவிதங்காண்க.

கஜேந்திரராஜன் - ஸ்ரீமந்நாராயணரைத்
துதிசெய்கிற - விருத்தம்.

கமலபொற்கரங்கள்கண்டேன்-கதிர்முடியொளிவுங்கண்டேன்
நிமைவிழிமலர்கள் கண்டேன்-நின்திருமுகமுங் கண்டேன்
சமைவதோர்மேனியெங்குஞ்-சாமளவர்ணங் கண்டேன்
அமரர்கள்துதிக்குமுந்த-னம்புயபாதங் கண்டேன்.

வசனம்.

ஷரிகரி ஸ்ரீமந்நாராயணமூர்த்தியே உம்முடைய அஞ்சலிபொருந்தியசெந்தாமரைக்கமலம்போன்ற கரங்கள் கண்டேன், சுடரொளியாகிய மகுடங்கண்டேன், செந்தாமரைக் கமலம்போன்ற நேத்திரங்கள் கண்டேன், கோடி சூரியப்பிரகாசமான உமது திருமுகங்கண்டேன், நீலமேகச் சாமளவர்ணம்போன்றதிருமேனியைக் கண்டேன், தேவர்கள் துதித்து வணங்கப்பட்ட தேவரீருடைய பா

தாரவிந்தத்தைக் கண்டேன், அடியேனைச் சூழ்ந்திராநின்ற கர்மவினைகளெல்லாந் தொலைந்து முன்னாள் யான்செய்த தவப்பலத்தினால் தேவரீருடைய தெரிசனங்கண்ட நாயேன் என்னபாக்கியம்பெற்றேன் சுவாமி.

பொதுவிருத்தம்.

துவளுநல்மதவேழத்தின் றுயரங்களனைத்துமாற்றி
தவளமாம்பாஞ்சசன்யந் தன்னைநற்கரத்திலேந்தி
பவளவாய்தனில்வைத்தூதிப் பாரெலாந்திடுக்கிட்டேங்கக்
குவளைநேர்விழியாளான கோதைதன்முகத்தைப்பார்த்தார்.

இதுவும்-பொதுவிருத்தம்.

திருமகள்முகத்தின்வேர்வை சிந்திடமாயோன்கண்டு
பரிமளத்துயிலாற்போக்கிப் பண்புடனணைத்துமோந்து
ஒருபிழையான்செய்குற்ற முவந்துநீபொறுப்பாயென்று
மருவியேநகைபுரிந்து வாய்மலர்ந்துரைப்பதானார்.

கட்டியக்காரன் சொல் வசனம்.

அகோ தெப்படியென்றால் ஸ்ரீ மந்நாராயணமூர்த்தியானவர் கஜேந்திரன்துயரத்தை யொழித்து மனதைச் சந்தோஷப்படுத்திப் பாஞ்சசன்னியத்தைத் திருக்கரத்திலெடுத்து அண்டகடாகங்கள் திடுக்கிட்டதிரும்படி தன்னுடைய பவளவாயில் வைத்து தொனித்தபின்பு மகாலட்சுமியைத் திரும்பிப்பார்த்து அவளுடைய திருமுகத்தின் வேர்வையெல்லாந் தன்னுடைய பீதாம்பரத்தினால் துடைத்து அம்மனுக்குச் சந்தோஷமுண்டாகும்படி புன்சிரிப்புடனேசுவாமியானவர் சொல்லுகிற விதங்காண்க.

சுவாமிக்கும் - அம்மனுக்கும் - தர்க்கம் - தரு
இ - ம் - காம்போதி - மிசுரதாளம்.

கண்ணிகள்.

சுவாமி சொல்லல்.

நீயென்பின்வந்ததுவும் நானறிகிலேன்பொல்லா
  சிந்தனைக்காளானேன் திருமாதே - நான்
  சிந்தனைக்காளானேன் திருமாதே

அம்மன்சொல்லல்.

நீரறியாதுமுண்டோ சூதெல்லாம்நானறிவேன்
  நித்தியகல்யாணலோலா - போம்போம் சுவாமி
  நித்தியகல்யாணலோலா

சுவாமிசொல்லல்.

கந்தமலர்க்குழல்சோர கலைநிகழநடந்த
  கமலபொற்பாதநொந்ததோ - மாதேயுந்தன்
  கமலபொற்பாதநொந்ததோ

அம்மன்சொல்லல்.

இந்தவுபசாரங்கள் - போதும்போதுஞ்சுப்மா
யென்படிக்குநீர்பிராணலோலனே - சுவாமி
யென்படிக்குநீர்பிராணலோலனே

சுவாமிசொல்லல்.

கனவிலும்நானுன்னை - மறந்திருப்பதுமுண்டோ
கண்மணியேயெந்தன் திருமாதே - என திரு
கண்மணியேயெந்தன் திருமாதே

அம்மன்சொல்லல்.

நினைவுமுமக்குவேறே - நிற்பதும்நானறிவேன்
நிலைமையில்லையோபிராணலோலனே - சுவாமி
நிலைமையில்லையோபிராணலோலனே

சுவாமிசொல்லல்.

பொற்கமலத்திருவே - யிப்பநான்செய்தகுற்றம்
பொறுத்தருளுவாய்திருமாதே - எந்தன்பிழை
பொறுத்தருளுவாய்திருமாதே

அம்மன்சொல்லல்.

கற்கண்டேனல்லாமுந்தன் - சொற்பழுதில்லைபோம்போங்
கார்மேகவண்ணரோயென்சுவாமி - போம்போங்
கார்மேகவண்ணரோயென்சுவாமி

சுவாமிசொல்லல்.

பேதமையென்பதெல்லா - மாதர்க்குக்குற்றமென்று
பேசுவதுபோற்சொன்னாய்திருமாதே - யாரும்
பேசுவதுபோற்சொன்னாய்திருமாதே

அம்மன்சொல்லல்.

பேதமையென்பதெல்லா - முமக்கல்லாலெனக்கில்லை
பேசாதேபோம்போம்பிராணலோலனே - சுவாமி
பேசாதேபோம்போம்பிராணலோலனே

சுவாமிசொல்லல்.

மங்கையர்க்கரசேநீ - வைதாலும்விடுவேனோ
மறந்திருப்பேனோவுன்னைமாதே - நான்
மறந்திருப்பேனோவுன்னைமாதே

அம்மன்சொல்லல்.

பொங்குநீர்மெத்தமெத்த - நங்கைமார்கைப்பார்கள்
புதுமொழிவேண்டாம்பிராணலோலனே - சுவாமி
புதுமொழிவேண்டாம்பிராணலோலனே

சுவாமிசொல்லல்.

பத்தர்க்கிடுக்கம்வந்தால் - மெத்தத்துயர்நமக்கே
சித்தமங்கேயிருக்குமாதே - எந்தன்
சித்தமங்கேயிருக்குமாதே

அம்மன்சொல்லல்.

நித்தமுமைப்பிரியே - னென்றிருந்தேனிப்போ
நீரென்னைமறந்தீரோ லோலனே - சுவாமி
நீரென்னைமறந்தீரோலோலனே

சுவாமிசொல்லல்.

உன்னைப்பிரியேனினி - யிதுவேசத்தியஞ்சொன்னேன்
ஒருநாளுமறப்பேனோமாதே - உன்னை
ஒருநாளுமறப்பேனோமாதே

அம்மன்சொல்லல்.

சொன்னவசனத்தாலே - மனதுதிடமானேன்
சோதித்துப்பார்ப்போமின்னம்லோலனே - சுவாமி
சோதித்துப்பார்ப்போமின்னம்லோலனே

சுவாமி அம்மனுக்குச்சொல் விருத்தம்.

செய்யதாமரையில்வாழுஞ் செந்திருமயிலேகேளாய்
பையரவணையின்மீது பள்ளிகொண்டிருந்திட்டாலும்
வையகந்தன்னிலன்பர் வருந்திநொந்தெனையழைத்தால்
உய்யநாமவர்க்குத்தொண்டரொன்றையும்விரும்பேன்கண்டாய்

வசனம்.

செந்தாமரைக்கமலத்தில் வீற்றிருக்கின்ற லட்சுமியே கேளாய் நமக்குத் தொண்டராயிருக்கப்பட்ட பத்தர்களுக்கு ஆபத்காலங்கள் வந்து நம்மை நினைத்ததே யுண்டாகில் நாமவர்களுக்குத் தொண்டராயிருந்து அவர்களை ரக்ஷிப்பதேயல்லாமல் மற்றொன்றையும் அப்போது விரும்பேன் பெண்ணே.

அம்மன் சுவாமிக்குச் சொல் விருத்தம்

செய்தநற்றபத்தாலுந்தன் திருமார்பில்மகிழ்ந்துவாழ்ந்தேன்
மைகொண்டகரியழைக்க வந்ததினுயிரைக்காத்தாய்
வைகுந்தவாசாவும்மை மனதினில்நினைத்தபேர்க்கு
கைகண்டபலனென்றெண்ணிக் கருத்தினில்மகிழ்ந்திட்டேனே.

வசனம்.

கேளுஞ்சுவாமி முன்னாள்செய்த தவப்பலனால் தேவரீருடைய திருமார்பிலே அதிகசந்தோஷத்துடன் வாழ்ந்திருக்கிறேன் இப்போது ஆரணியமானகாட்டில் ஒருயானையானது முதலையின் வாயிலகப்பட்டு உம்மைநினைத்துக் கூப்பிட்டமாத்திரத்தில் தேவரீர் வைகுந்தத்தைவிட்டு அதிக வேகத்துடன் வந்து அந்தமுதலையைச் சம்மாரஞ்செய்து கஜேந்திரனைக் காத்திரக்ஷித்தீர் தேவரீருடைய

பாதாரவிந்தத்தை எந்நாளும் மனதில் தியானம் பண்ணிக்கொண்டிருக்கப்பட்ட பேர்களுக்கு என்னபேறு கிடைக்குமோ ஆகையால் திருஷ்டாந்தரத்தில் கைகண்டபலனாக என்கண்ணிற்கண்டு சந்தோஷமானேன் சுவாமி.

பொது விருத்தம்.

கந்தமாவனசமாது கமலையின்கவலையைத்தேற்றி
சந்ததமுடனேமாயன் றன்னுயிரதனைமாற்றி
உந்தியிலுதித்தோன்போற்ற வுவணத்தைக்காணேமென்று
சிந்தையில்நினைக்குமுன்னே சீர்கருடனும்வந்தானே

கட்டியக்காரன் சொல் வசனம்.

அகோ தெப்படியென்றால் இப்படியாக ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் மகாலட்சுமிக்குச் சந்தோஷம் வரும்படிசெய்து தன்னுடைய ஆயாசமுந் தீர்த்துக்கொண்டு கருடனைக்காணேமென்று நினைக்குமுன்னமே வைகுந்தத்திலிருந்து கருடபகவான் அதிகவேகத்துடன் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியிருக்கப்பட்ட யிடத்திற்கு வருகிறவிதங்காண்க.

கருடபகவான் வருகிற தரு

இ — ம் — கலியாணி — ஆதிதாளம்.

பல்லவி,

கருடபகவான்வந்தானே — மாயோன்முன்பாகக்
கருடபகவான்வந்தானே

அநுபல்லவி,

கருடபகவான்வந்தான் கார்வண்ணன் றன்னைத்தேடி
இருடிகள்களிகூற யிமைக்குமுன்னமே யோடி (கருட)

சரணங்கள்.

கைகளிரண்டையுங்கூப்பி கண்ணன்மேல்மனம் நாட
களித்தயிறகின்விசை கதிரவன்றன்னை மூட
வைகுந்தந்தன்னைவிட்டு மனோவேகத்துடன் கூட
வரும்விசைதன்னைக்கண்டு வானவர்கள்கொண்டாட (கருட)
ஆதிவாரத்திலன்பர்க் கருளிய வுபகாரன்
அச்சுதன்றுசனான ஆழ்வாரெனும் பேரன்
ஜோதிபராபரனைச் சுமக்குமதிக தீரன்
சுத்தபவுத்திரனான சுகிர்தகுண வுதாரன் (கருட)
மண்டலத்தரசர்கள் மனமகிழ்ச்சிகள் தோண
மந்திரவேதாந்தநன்னூல் மனதிலுட்கொண்டுபூண
அண்டங்கிடுகிடென்ன ஆதிசேஷனும் நாண
அரிநாராயணன் திருவடிதன்னைக் காண (கருட)

பொது விருத்தம்.

இலம்புகழ்க்கருடன்தோள்மேல் ஏழிலன் கமலையோடுந்
துலங்கியதிகிரிசங்குந் துய்யவாள்கதையும்வில்லும்

இலங்கியகிரங்களோடு மெழிற்கதிர்முடியுந்தோன்ற
மலர்மழைபொழிந்துவானோர் வாழ்த்தியேதுதிசெய்வாரே.

கட்டியக்காரன் சொல் வசனம்.

அகோதெப்படியென்றால், கிருடபகவான் வந்து ஸ்ரீமந்நாராயணமூர்த்தியினுடைய பாதாரவிந்தத்தில் தெண்டன்செய்துநின்றவுடன் சுவாமியுஞ்சந்தோஷத்துடன்-சங்கு-சக்கரம்-கோதண்டம்-கட்கம்- கதாயுதத்துடனே மகாலட்சுமியுந் தானும் கருடன்பேரி லேறிக்கொண்டு சூரியப்பிரகாசம்போல் நின்றவுடனே தேவர்கள் கண்டு ஆனந்தக்கூத்தாடி புஷ்பமாரிபொழிந்து தோத்திரஞ்செய்கிறவிதங்காண்க.

தேவர்கள்-சுவாமியைத் துதிசெய்கிற-தரு

இ-ம்-பூரிகலியாணி-ஆதிதாளம்.

பல்லவி.

காளமேகசாமளரூபாநின் கழல்தரிசனங்
காண நாங்கள் வெணதவஞ்செய்தோம்.

அநுபல்லவி.

நீள்கடல்கிடைந் தமுதம் பகர்ந்த
நித்தனேயென்னாளும் பத்தருக்குகந்த (காள)

சரணங்கள்.

அன்னைபிதாகுருதெய்வமுநீயே ஹரிமுகுந்தனே
அண்டபுவனங்க ளுண்டுமிழ்ந்தரு ளச்சுதானந்தனே
யுன்னகமலத்தில் வாழ்திரு மாது
மங்கைமணவாளா யெங்களுக் கோது
உன்னையல்லாமற் பரத்துவ மேது
ஒன்றேதெய்வமினி கண்டோ மிப்போது (காள)

பாக்கியமென்செய்தோ முந்நாள்தவப்பலன்
பலித்ததோ சுவாமி-எங்கள்
பாவவினையெல்லாம் விட்டோடவே
யெண்ணிவந்திரிந்தப் பூமி
நோக்கக்கண்கள் போதாதொருக்காலே
நான்மறைதேடியுங் காணுதமாலே
சிலாக்கியமாய் கருடன்தோள்மேலே
செந்திருமாதுடன் செங்கதிர்போலே (காள)

ஆறுபெண்ணு மிரண்டுண்டாக்கி
அனைத்திலு நிறைந்தாய்
அண்டாண்டத் தினிலுயிராக
வதனுளே யுறைந்தாய்
பேணியென்பார் மூலாதாரத்திலாக்ஷி
பெற்றவனேயுனை யாரறிவாருன் கூக்ஷி
தானுவே நின் கடைக்கண்காக்ஷி
தந்திரோபெங்களுக் கேதினிதாக்ஷி (காண)

பொதுவிருத்தம்.

முதலையின்றுவ்மாறி முனிமொழிசாபநீங்கிக்
கதிர்தனைவிழுங்கிநாகங் கக்கியவாறுபோல்
நதிதனிலூகூநாம னல்லெழிலுருவங்கொண்டு
துதிசெய்துமாயோன்செய்ய துணையடிவணங்கிச்சொல்வான்

கட்டியக்காரன் சொல் வசனம்.

அகோர்தெப்படியென்றால் இப்படியாகத் தேவர்கள் தோத்திரஞ் செய்தபின்பு பிருகுமகாரிஷி யிட்டசாபத்தினால் முதலைருபமாயிருந்த (ஊகூநாமன்) ஸ்ரீமந்நாராயணமூர்த்தியினுடைய சக்கரம்பட்டமாத்திரத்தில் அந்தமுதலைருபம்போய் சாபம்நீங்கி இராகுவென்ற பாம்பு சூரியனை விழுங்கிக் கக்கியதுபோல் கோடிசூரியப்பிரகாசம்போல் ஊகூநாமன் அந்த நதியிலிருந்து புறப்பட்டுவந்து ஞானவுதயமாய் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியினுடைய திருவடிகளில் தீர்க்கதெண்டன் சமர்ப்பித்து ஸ்தோத்திரஞ் செய்கிற விதங்காண்க.

ஊகூநாமன் - சுவாமியைத்துதிசெய்கிற - தரு

இ - ம் - மத்தியமாவதி - சாபுதாளம்

கண்ணிகள்,

நாராயணவேத - பாராயணவென்முன்
நேராயிணங்கிய நித்தியா நமஸ்து
அச்சுதனேவேத - கிச்சுதனேயன்ப
ரக்ஷலோலா நமஸ்தே நமஸ்து
சங்காழியேந்திய - துங்காலட்சுமிநா
சிங்காஸ்ரீரங்கா நமஸ்தே நமஸ்து
ராமாபுஜபல பீமாசகஸ்திர
நாமாரவிகுலராமா நமஸ்து

மாதவகேசவ-சிதரநாயகா
பூததயர்பராநமஸ்தே நமஸ்து
ஆதிபராபர ஜோதிபரப்பிரம்ம
நீதிவேதாந்தா நமஸ்து

சுவாமி- ஊஊகூராமனுக்குச் சொல் விருத்தம்,

அன்புள்ளஊகூராமா அருமுனிசாபத்தாலே
வன்பெருமுதலையாகி வருந்திநீமெத்தநொந்தாய்
முன்புசெய்வினையுந்தீர்த்தோ முனிமொழிசாபந்தீர்த்தோம்
இன்பமாய்மோக்ஷவீட்டுக் கேகுவாயேகுவாயே.

வசனம்.

வாரும்பிள்ளாய் ஊஊகூராமா முன்னாலே பிருகுமகாரிஷியிட்டசாபத்தினால் முதலையாகி இந்தமடுவில் வெகுநாளாய் வருத்தப்பட்டாய் இப்போது உன்னைச் சூழ்ந்திராநின்ற கர்மவினைகளெல்லாந் தீர்த்தோம், பிருகுமகாரிஷியிட்டசாபமும் நீங்கிப்போச்சுது, இனிமேலுனக்கு ஒருகுறைவுமில்லை நீ சந்தோஷத்துடன் வைகுந்தம்போய் சுகமாய் வாழ்ந்திரும்பிள்ளாய்.

ஊஊகூராமன்-சுவாமிக்குச் சொல் வசனம்.

மகா பாக்கியம் அப்படியே செய்கிறேன் சுவாமி.

பொது விருத்தம்.

ஆரணன்றேடிக்காணு அச்சுதன்கிருபையாலே
தாரணிபுகழ்விமானந் தன்னிலேஊகூராமன்
பூரணவைகுந்தத்திற் போனபின் கஜராஜேந்திரன்
நாரணன்பாதந்தன்னை நாடியேதுதிசெய்வானே.

கட்டியக்காரன்- சொல் வசனம்.

அகோதெப்படியென்றால், ஸ்ரீமந்நாராயணமூர்த்தியினுடைய கிருபாகடாக்ஷத்தினால் (ஊஊகூராமன்) ஆனந்தத்துடன் புஷ்பவிமானத்திலேறி சுவாமியின் பாதாரவிந்தத்தை மனதில் தியானஞ்செய்துகொண்டு வைகுந்தத்திற்போய் சேர்ந்தபின்பு கஜேந்திரராஜன் ஸ்ரீமந்நாராயணருடைய சந்நிதானத்தில் ஸ்தோத்திரஞ் செய்கிறவிதங்காண்க.

கஜேந்திரராஜன்- சுவாமியைத்
துதிசெய்கிற- விருத்தம்.

அண்டரண்டபுவனமெல்லா முண்டஜோதி
ஆதிமத்தியாந்தமாய் நின்றஜோதி
எண்டிசைக்குளெங்கெங்கு நிறைந்தஜோதி
யேகபரிபூரணமா யமர்ந்தஜோதி

தொண்டருளர்தன் னிற்குடி கொண்டஜோதி
சுடரொளியின்மணிவிளக்காய்ச் சூழ்ந்தஜோதி
கண்டனுந்தன் றிருவடிக்கே சரணடைந்தேன்
கருணைவெள்ளந்தனின் மூழ்கிக் கரைகாணேனே.

இதுவும்—கஜேந்திரராஜன்—சுவாமிக்குச்

சொல்—விருத்தம்.

உள்ளங்களித்தேன் மனந்தெளிந்தே
னும்பர்மகிழவானந்த
வெள்ளந்தன்னில் மூழ்கினேன்
வேண்டும்பொருள்களொன்றுமில்லை
எள்ளெண்ணையப்போ லெங்கு நிறைந்
தெங்குநிறைத பரஞ்சுடரோ
கொள்ளைகொண்டேன் வைகுந்தங்
கூற்றையிகழ்ந்தே னடியேனே.

கஜேந்திரராஜன்—சுவாமியைத் துதிசெய்கிற—தரு

இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

முரகரிந்தன் முகுந்தகேசவா
மூலாதாரனே நமோநமோ—ஹரி
மூவர்கள்முதல்வனேநமோநமோ
நரகரிநாராயணபரிபூரண
நான்மறைப்பொருளேநமோநமோ—ஹரி
நாரதவரதா நமோநமோ

வாமனஸ்ரீஹரி மாதவசிதர
மாமுகில்வண்ணா நமோநமோ—ஹரி
மதுசூதனே நமோநமோ

சாமளவஜ்ரகர பூமகள்கொழுநா
ஓமெனும்பொருளே நமோநமோ—ஹரி
உம்பர்கள்தேவா நமோநமோ

அச்சுதானந்தா கோவிந்தமுகுந்தா
ஆதிமத்தியானந்தா நமோநமோ—ஹரி
அம்புயபாதா நமோநமோ

கச்சரவணையில் மெச்சுபீதாம்பரா
பச்சைவைகுந்தா நமோநமோ—ஹரி
பாபவிநாசனே நமோநமோ

தொண்டர்களெங்குடி கொண்டுமகிழ்ந்திடும்
புண்டரீகாக்ஷா நமோநமோ-ஹரி
பூரணப்பொருளே நமோநமோ
அண்டபுவனமெல்லா முண்டபராபர
அகிலநாயகா நமோநமோ-ஹரி
அனந்தசயனு நமோநமோ

பொதுவிருத்தம்.

எம்பிரான்பொற்பாதத்தை யிபராசனிறைஞ்சிவாழ்த்த
அம்புவியாண்டுமாப னளித்திடும்வாறுபோல
கும்பமாமுனிசாபம்போய் கொப்பனப்படைகளியாவும்
தம்பியினுருவமாறித் தோன்றினனிந்திரதுய்மன்.

கட்டியக்காரன் சொல்வசனம்.

அகோ தெப்படியென்றால் இந்தப்பிரகாரம் கஜேந்திரராஜன் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியினுடைய பாதாரவிந்தத்தைத் தியானித்து நித்தியசொரூபத்தை மனதிலெண்ணித் தோத்திரஞ்செய்து நினைத்தமாத்திரத்தில் உகாந்தகாலத்தில் ஸ்ரீமந்நாராயணமூர்த்தி ஈரேழு பதினான்கு லோகமும் உண்டு பரிபாலனஞ்செயயும்பொருட்டாய் உலகத்தையளித் திரக்ஷித்ததுபோல அகஸ்தியமகாரிஷி சாபத்தினால் யானைரூபமாயிருந்த இந்திரதுய்மராஜனும் அவனுடைய சேனாசமுத்திரமுதல் சகலஜனங்களும் யானையுருவமாறி பழையபடி நிசரூபமாகி இந்திரதுய்மமகாராஜனை புடைசூழ்ந்துவர கோடிசூரியப்பிரகாசமாய் நவரத்தின கசித அலங்காரபூஷணங்கள்பிரகாசிக்கஇந்திரதுய்மமகாராஜன் வருகிறவிதங்காண்க

இந்திரதுய்மமகாராஜன் வருகிற தரு

இ - ம் மோகனம் - ஆதிதாளம்.

பல்லவி.

இளந்தைப்பருவமாகி - இந்திரதுய்மராஜன்
இறையோன்முன்வந்தானே

அநுபல்லவி.

கிளர்ந்தசெங்கமலம்போல் முகம்பளபளென்ன
கீர்த்திமிகுத்திட்ட - நாற்றிசைமேவிய
போற்றிஹரிபதம் - போற்றிவணங்கிய (இளந்தை)

சரணங்கள்.

கும்பமுனிசாபம்போய் - அன்பமுங்கழிந்திட
குறைவில்லாவானந்த - நிறைவெள்ளம்பொழிந்திட
அன்புமிகுத்தகண் ணில் - அருவிகள்வழிந்திட
அடங்காப்பிறவிக்கடல் - கண்டாற்போலொழிந்திட
அண்டர்கள்தொண்டர்கள் - கண்டுமகிழ்ந்திட
விண்டலமண்டல - முண்டவனண்டையில் (இளந்தை)

சந்திரகுலேந்திரனைக் கண்டு - தருமங்களோங்கவே
தன்சேனைகரியுரு - தருமாய்கைநீங்கவே
தொந்தோந்தொற்தோமெனச் - சுரர்வந்துதாங்கவே
குயில்துறந்தெழுந்தாற்போல் சொற்கங்கள்வாங்கவே
துள்ளினடித்தவ - னுள்ளமதித்திட
தெள்ளமுர்தத்திரு - வள்ளல்வரத்தினல் (இளங்கை)

பேறுபெற்றேனினிமேல் - வேறுபொருள்வேண்டேன்
பித்தனுஞ்செய்தவத்தா - லெத்தனைகண்காக்ஷிபூண்டேன்
நீறணிந்தசொக்கரன்பால் - நீண்டபுவியாண்டேன்
நெடியோனேவின்னருளால் - அடியேனிந்நாட்கண்டேன்
நித்தமுனைத்தொழ - சித்தமெனக்கருள்
பூத்தருளத்தினி - லுற்றவனேயென (இளங்கை)

பொதுவிருத்தம்

பாண்டிநாட்டாளுமன்னன் படைத்திரளனைத்துஞ்சூழ
வேண்டியமகிழ்ச்சிபொங்கி மெய்யெல்லாம்புளகம்பூர்த்து
தாண்டியேதுள்ளித்துள்ளி தாரணியெங்குமோடி
ஆண்டிடும்பரமன்பாத மக்கணந்துதிசெய்வானே

கட்டியக்காரன்சொல்வசனம்.

அதோதெப்படியென்றால் இந்திரதுய்மமகாராஜன் தன்னுடையசேனசமுத்திரமுதலாகியதும் புடைசூழ்ந்துவர அதிகசந்தோஷத்துடன் சரீரம்புளகாங்கிதமாய் பரவசத்தைப்பெற்று ஆனந்தக்கூத்தாடி பரமேஸ்வரன்-பிரமதேவன்-தேவேந்திரன் முதலாகியதேவதைகள் ரிஷிகள்பரமபாகவர்களாகிய ஆழ்வாராதிகள் முதலானவர்களுக்கும் சாஷ்டாங்கமாகத் தீர்க்கநமஸ்காரஞ்செய்து பராபரவஸ்துவாய் விளங்கியிராநின்ற ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின் பாதாரவிந்தத்தில் சாஷ்டாங்கமாகத் தெண்டன்சமர்ப்பித்து ஸ்தோத்திரஞ் செய்கிறவிதங்காண்க.

சூர்ணிகை.

ஸ்ரீஹரிஓம்-நமோநாராயண-பரவாசுதேவா
மூலாதார-பரப்பிரம்ம-திரிகோண
அகார-இகார-உகார-ஓங்கார-ஸ்ரீங்கார
வீரசூர-புஜபல-பராக்கிரம-கெம்பீர
அஷ்டசம்மார-ஸ்ரீவர்த்தன-தயாளரக்ஷக
சதுர்வேத-புராணசாஸ்திர-பிரணவ
சத்த-பரிச-ரூப-ரஜ-கெந்த-சிருஷ்டி-திதி-சம்மார
அகரமுத-லன்பத்தோரக்ஷரம்
லக்ஷியான-மகுத்துவ நடன
உத்தார-கோதலாசல-தயாநிதி

கின்னர-கிம்புருட-கருட-காந்தருவ
சித்த-வித்தியாதர-தேவ-முனிவ
சகல-சம்பஸ்த-பக்தவச்சல-நித்திய-கல்யாண
பரமாத்தும-பூததயாள ரிஷிகேசவ-லோகநாயகா
முரகரி-நந்தனந்தகோவிந்த-வைகுந்த-முகுந்த
வேதாந்தப்-பிரபந்த-ஆதிமத்தியாந்தன
சுகந்த-சுந்தர-மிகுந்த-பத்மநாப-தாமோதரா
மச்சக்-கூர்ம-வராக-நாரசிம்ம
வாமன-பரசுராம-ரகுராம
பவுத்த-கலிக-நெடிய-திருவிக்கிரம-அவதார
கோடிசூரியப்பிரகாச-லட்சுமிமனோகரா
திவ்வியபரிமள-கந்த-கதம்ப
கஸ்தூரி-களப-குங்கும-அலங்கிர்தா
மதனவுஜித-நீலமேக-சியாமளரூபலாவண்ணிய
சவுந்தரிய-சாம்பிராச்சிய
லீலாவினோத-சிங்கார-மங்களாகார
அண்டரண்ட-பகிரண்டபிர்மாண்ட-வுத்தண்ட
ரண்டபிண்ட-சண்டப்பிரசண்ட-நவகண்ட
ஸ்ரீதராவண-மார்த்தாண்ட-மண்டல-சீர்கொண்ட
புண்டரீக-புருஷோத்தமா
சுடர்முடிமுகுடரத்தின-கஜித-மகரகுண்டல
கமலநேத்திர-சதுர்ப்புஜ-தளசம்பூர்ண
கவுஸ்துவாபரண-கண்ட
தவளசங்கு-சக்கர-கோதண்ட-கட்கசதாயுத
சொர்ணபீதாம்பரரின்
பாதபங்கயம்நமஸ்தேநமஸ்து

இந்திரதூய்மராஜன் தோத்திரத் தரு

இ-ம்-கமாஸ்-ஆதிதாளம்.

பல்லவி.

ஹரிஓம்நமோ நாராயண சுவாமி
ஹரிசுரூபா - செந்திருமார்பா

சரணங்கள்.

தேவானசுவா - ஸ்ரீ வகிற்பாலா
பூவளர்கோலா - மேவியசீலா - இன்பம்
பொருந்தித் - தம்பம்வருந்தித்தின்பம்
பதிந்துத் - தொழுதெரிந்திலேன் (ஹரிஓம்)

சற்கலைவேதா-சற்குருநாதா
சத்புகபோதா-அற்புதபாதா-எந்தன்
அகத்திற்குடி-மிகுத்தப்பொருள்

மகுத்துவம்பெறு-ஜெகத்திரக்ஷகா (ஹரிஓம்)
சேதர பூமா-மாதவநாமா
யாதவசோமா-சீதரு வர்மா-நித்தியம்
அரன்சிரக்கதயில்-நிறைந்தென்வினை
பறந்தஞ்சிட-வரந்தருள் (ஹரிஓம்)

இந்திரதுய்மராஜன்-சுவாமிக்குச்

சொல்-வெண்பா.

உன்னைத்தொழுவே னுனக்கடிமையாவதல்லாற்
பின்னையொன்றைத்தேடேன் பெருமானே-அன்னையே
ஆதாரநீயே யடியேற்குவேறிலைநின்
பாதாரவிந்தமேதுணைகண்பார்.

சுவாமி- இந்திரதுய்மராசனுக்குச்

சொல்-விருத்தம்.

மெச்சினேனுமிந்திரதுய்மாவினைப்பயனுனக்கொன்றில்லை
இச்சையாய்சிலநாள்நீயு மெழிற்புவியனைத்துமாண்டு
நச்சரவணைவைகுந்தந் நாமிருப்பிடமேவந்து
தக்ஷரூபமதாயின்பந் தழைத்துநீவாழ்குவாயே.

இதுவும்-சுவாமிசொல்-விருத்தம்.

இசையுமாமுனிவர்விண்ணோ ரெண்டிசைபாலர்கின்னர்
திசைமுகன்சந்திராதித்தர் சித்தர்கள்சாக்ஷியாகக்
கஜேந்திரஆழ்வாரென்றுகீர்த்தியாய்நாமந்தந்தோம்
அசைவில்லாவைகுந்தத்திலன்புடன்வாழ்வாய்நீயே.

வசனம்.

வாராய் இந்திரதுய்ம மகாராசனே, உன்னைப்பிடித்த அக்கியானமெல்லாம் தொலைந்துபோய்விட்டது, உனக்கொருதுன்பங்களும் இனிமேலணுகாது, இன்னுஞ் சிலகாலம் உன்னுடைய தமிழ்நாட்டுக்குப்போய் மனுமுறை நீதிப்படிக்கு இராச்சியபரிபாலனஞ் செய்து செங்கோற்செலுத்தி தனகனக வஸ்துவாகன சாம்பிராச்சிய வைபவ அதிசெயத்துடனே இந்திராதிபோகங்களை அநுபவித்து சர்வலக்ஷண சம்பன்னனாக வாழ்ந்திருந்து பின்பு நம்முடைய பதவியாகிய வைகுந்தம் வந்துசேருவாய். மேலும் அஷ்டதிக்குப்பாலகாள்-பிரமதேவன்முதலாகிய தேவர்களறிய உனக்குக் கஜேந்திரஆழ்வாரென்று பேர் தந்தோம், ஆகையால் நீயென்னாளுஞ் சிரஞ்சீவியாய் வைகுந்தத்திற்றானே ஆனந்தசுகமாகிய களிப்புட

னே வாழ்ந்திருக்கக்கடவாய் சிரஞ்சீவி சிரஞ்சீவி எழுந்திரும்பிள்ளாய் இந்திரதுய்மமகாராசனே.

இந்திரதுய்மராசன் சொல் வசனம்.

அப்படியே மகா பாக்கியம் பெற்றேன் சுவாமி.

சுவாமி - தேவர்களுக்குச் சொல் விருத்தம்.

தேவரோமுனிவரோநற் சித்தர்கின்னரரோகேளீர்
ஆவலாயிந்திரதுய்ம னவனுடன்றமிழ்நாடேகிப்
பூவுலகாள்ச்செய்து பொன்மணிமகுடஞ்சூட்டித்
தாவிவிண்ணகரஞ்சென்று சம்பிரமமுடன்வாழ்வீரே

வசனம்.

கேளுங்கள் தேவர்முனிவர் சித்தர் கின்னரர்களே நீங்களனைவரும் இந்திரதுய்மராசனுடனே கூடப் பாண்டியநாட்டுக்குப்போய் இம்மன்னனை அரசாளும்படிக்குப் பட்டாபிஷேகஞ்சூட்டிவைத்து நீங்களனைவரும் தெய்வலோகத்திற்கும் போய் சுகித்திருங்கள் தேவர்களே.

தேவர்கள் சுவாமிக்குச்சொல் வசனம்.

அப்படியேசெய்துவைக்கிறேஞ் சுவாமி

பொதுவிருத்தம்.

இப்படிமாயோன்சொல்லி யெழிற்றிருமாதுகூட்
அற்புதக்கருடன்மீதி லமர்ந்துவைகுந்தஞ்சேர்ந்தார்
செப்பமாமிந்திரதுய்மன் சேனையுந்தேவரோடும்
நற்பதம்பெற்றுபாண்டி நாடதுவந்துற்றாரே

கட்டியக்காரன் சொல்வசனம்.

அகோதெப்படியென்றால் ஸ்ரீமன்நாராயணமூர்த்தி திருவுளமகிழ்ந்து அருளிச்செய்தபின்பு மகாலட்சுமியுடன் கருடவாகனரூடராய் ஸ்ரீ வைகுந்தத்திற்குப்போனபின்பு இந்திரதுய்மமகாராசன் தன் சேனைகளுடன் தேவர்களுஞ்சூழும்படியாய்மிகவும் ஆனந்தக்களிப்புடன் பாண்டியநாட்டுக்குவந்தபின்பு இந்திரதுய்மராசனுக்குப் பட்டாபிஷேகஞ் சூட்டுகிறவிதங்காண்க.

தேவர்கள் இந்திரதுய்மமகாராஜனுக்கு
மகுடஞ்சூட்டுகிற-தரு-இ-ம்-கலியாணி-ஆதிதாளம்.

பல்லவி.

இந்திரதுய்ம மகாராஜன்றனக்கு வானோர்
சுந்திரமகுடஞ் சூட்டினார் - கந்தருவர்கள்
விந்தையின்னிசைமீட்டினார்

அநுபல்லவி.

மந்திரவிதிமுறையிரீ - லந்தணராசிகூற
மாதவமுனிவர்கள் - வேதநூல்வளர்ந்தேற (இந்திர

சரணங்கள்.

நகரமெங்கும்பன்னீ ருக்கினார்-தமிழ்
நாடெல்லாந்தோரண மேத்தினார்-வெகு
புதூரமாயமுரசங்கள் சாற்றினார்-நல்ல
பாவலர்கவிசெய்து வாழ்த்தினார்
செகசக்ரமுழுதெங்கும்-ஒருசொற்படியிணங்க
இருபொற்குடைநிலங்க-தருகற்பக மிலங்க
திக்குமொளிகன-வனசமதில்வளர்
திருவினருள்மிகப்-பெருகவழகிய (இந்திர)

தேவரம்பையர்கடண்மாடவே-திக்குத்
தேசமன்னர்கள்படைகூடவே-ல்ல
பூவையர்மங்களம்பாடவே-இரு
புறமும்வெண்ஷாமரம்போடவே-
சிவரத்ந-மணிமுற்றம்-அழகுற்றாதிபசசை
முழுவச்ர-வயிரத்தி-னெழில்பெற்ற-மகுடத்தி
ஞொனிகளணிசுட-ரதின்மிதினில்விறைந்
திடவுமனைவர்கள்-மனமுமகிழவே (இந்திர)

ஆணிமுத்தாலாத்தி யெடுத்தார்-தேவ
ர்மூதங்கொணடுவந்துகொடுத்தார்-மார்பில்
பூணுங்கற்பகமாலை தொடுத்தார்-மன்னன்
புகழெங்குங்கொண்டாடிநடித்தார்
வேணிகொன்றை-திங்கள்சூடியவிமலன்-கமலை-மார்பன்பிரமன்
கண்டுகளிக்கசுர-ரண்டமுமதிக்க
வெற்றியுளாகவ-ரத்தமேடையில்
முத்திபரவிய-கர்த்தன்மதிகுல (இந்திர)

பொதுவிருத்தம்.

மன்னவனிந்திரதுயமன்-மனங்களித்திடவுக்வானோர்
மின்னொளிமகுடஞ்சூட்டி மெய்மகிழ்ந்தனுப்பிக்கொண்டு
பொன்னகர்நாட்டைநண்ணிப்பொங்கமாய்வீற்றிருந்தார்
இன்னிலந்தன்னின்மிக்கோ-ரியாவரும் வாழிவாழி

கட்டியக்காரன்சொல் வசனம்.

அகோதெப்படியென்றால் - தேவர்களனைவருங்கூடி இந்திரதுய்மமகா ராஜனுக்குப்பட்டாபிஷேகஞ்சூட்டிவைத்துதெய்வலோகம்போய்ச்சேர்ந்தார்கள் இப்படிக்கொத்த புண்ணியகதையாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தியினுடைய சரித்திரத்தைக் காதுக்கின்பமாய் கேட்டபேர்கள் பாராயணஞ் செய்தபேர்கள்-எழுதினபேர்களனைவரும் வைகுந்தத்தில் ஸ்ரீமந்நாராயணருடைய பாதாரவிந்தத்துக்குத்தொண்டராய் பரமபாகவதர்கள் கிருபாகடாக்ஷம் பெற்று பரமபதமாகிய மோக்ஷவீட்டைப்பெற்று சுகித்து வாழ்வார்களென்பதுகாண்க.

மங்களம்.

விருத்தம்-இ-ம் தந்நியாசி.

* மூவருக்கு மறையோது முனிவருக்கு
முச்சுடராகியஞான முதல்வனுக்குந்
தேவருக்குங் கணபதிக்குந் திகழ்வேலர்க்குந்
திங்களுக்குந் தினகரர்க்குஞ் செகத்திலுள்ள
யாவருக்கு மூகநாமனுக்குமிக்க
நலம்பெறுமிந் திரதுய்ம ராஜனுக்கும்
நாவலர்க்கு மங்களவாழ்த்தினையேகூறி
நண்ணுவாந் தோத்திரங்கள் பண்ணுவாமே.

தரு-இ-ம் தந்நியாசி-ஆதிதாளம்.

பல்லவி.

மங்களமே-ஜெய-மங்களம்-நித்திய
மங்களமே-சுப-மங்களம்

அநுபல்லவி.

செங்கமலத்தில்வளர்-செந்திரு மார்பனுக்கும்
மங்கையுமைபாகனுக்கும்-வாணிமநோகரர்க்கும் (மங்களமே)

சரணங்கள்.

தெள்ளமுர்சத்தில்வளர்-சீதாபி ராமனுக்கும்
வள்ளிதெய்வானைமண-வாளமுருகையருக்கும் (மங்களமே)

எண்டிசையும்புகழு-மிந்திராணி சேழ்வனுக்கும்
அண்டர்முனிவோர்களுக்கு-மாழ்வார்பன்னிருவர்க்கும் (மங்களமே)

சந்திராதித்தருக்குஞ்-சகலகலை வல்லவர்க்கும்
இந்திரதுய்மராசனுக்கு-மெண்டிசையிலனைவோர்க்கும் (மங்கள)

யாட்டகர்-சொல்-தரு. இ-ம்-பூபாளம்-ஆதிதாளம்.

பல்லவி.

சமையமிதுநல்லவேளை-இனிசேஷ
சயனம்விட்டெழுந்திரும்ராகவா-என்னைத்
தற்காத்திரக்ஷியும் ராகவா

அநுபல்லவி.

கமலம்விள்ளுது-கற்பக மலருது
கதிரோனுதயமாகுது-காலமுமாகுது (சமையம்)

சரணங்கள்.

குவலயமுழுதெங்கும்-குளிர்பனிநீங்குது
கொஞ்சுங்கிளியுன்னைக்கூவியழைக்குது
கவலையகற்றுந்திவ்ய-கருணாநயனங்கள்
களிகூறவேயெழுந்திரும் (சமையம்)

பூதலமுழுதெங்கும்-பொன்னிற மாகுது
பூர்ணபமாலை பூஷணம் வருகுது
காதலாய்நவரத்நமணிமாலை வருகுது
கார்மேகவண்ணரேயெழுந்திரும் (சமையம்)

நவநாதிதீர்த்தங்கள் குஞ்சரங்கொடுவந்து
நாராயணாவென்று-கூவியழைக்குது
சிவராமா திவ்ய-ஜெயராமா
சீதாபதிராமாவென்னையெழுந்திரும் (சமையம்)

அஷ்டவசுக்களும்-அண்டர்முனிவரும்
ஆரணர்கள்பதி-பூரணமாகவே
சட்டமாய்துதிசெய்து-பன்னீர்நிறைக்கிறார்
சாமிதயாபராயெழுந்திரும் (சமையம்)

சந்தனதம்பஞ்சவ்வாதுபுனுகுடன்
கஸ்தூரியரிமளக்-கமலத்திருவைக்கூடி
சந்ததமாய்வீணை-யாடியசோபமோ
சாரங்கபாணியேயெழுந்திரும் (சமையம்)

போற்றுமடியார்கள்-அனந்தவெழுச்சியால்
பூசித்துன்பாதத்தைத்-துதிசெய்தபேர்களைக்
காத்திரக்ஷிப்பதுன் பாரமென்றுஞ்சுவாமி
கர்த்தனேநீரென்னையெழுந்திரும். (சமையம்)

வாழிவிருத்தம்.

கலைவாழி புவிவாழி ககனம் வாழி
கதிவாழி நிதிவாழி சற்றோர் வாழி
நிலைவாழி நீதியறந் தழைத்து வாழி
நிகழ்மூவர் முனிவரனை வோரும் வாழி
நலம்வாழி நதிவாழி கஜேந்திர மோக்ஷ
நாடகமென் னாளுஞ்சீர் நண்ணி வாழி
மலையரசன் குலம்வாழி ஆதிவித்வ
மனோரஞ் சனியச்சுக் கூடம் வாழி.

இதுவும் வாழிவிருத்தம்.

இந்தநாடகத்தை யிச்சையாயெவரும்பார்க்க
அந்தமாய்ச்சீர்பிரித்து அச்சடுக்கிப்பதித்த
கந்தமார்மயிலைவாசன் கமழ்மலையரசன்கோத்ரச்
சுந்தரமுருகனென்றுஞ் சுகமுற்றுவாழிவாழி.

கஜேந்திரமோக்ஷநாடகம்.

முற்றிற்று.